மாத இதழ் - August 2012

# வண்ண வானவில்

பருவம் 02 වන්න වානවිල් Vanna Vaanavil உதயம் 22 30/-



## கல் எறிய ஒரு காந்திஜி

## சிம்பு ALBUM

## டெங்கு: தெரியாத உண்மைகள்






S.Krishkanthan @ ANCL 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிக்ஸ் பொஸான்:

# பிரம்மாவை அடையாளம் கண்ட விஞ்ஞானிகள்

## நூற்றாண்டின் மிகப் பெரும் கண்டுபிடிப்பு!

பிரபஞ்சம் கடவுளால் படைக்கப்பட்டது என்ற சிந்தனைக்கு விஞ்ஞானிகள் எப்போதோ ஆப்பு வைத்து விட்டார்கள். இப்போது, சிருஷ்டியே கிடையாது என்றாகி விட்டது. அணுத்துகள்கள் சேர்வதால் ஸ்தூலவஸ்துகள் தோன்றுகின்றன. அவை பிரிந்தால் மறைந்து விடுகின்றன. எதையும் யாரும் புதிதாக படைக்க முடியாது. மாற்றங்கள் மட்டுமே நிகழ்கின்றன. பிரபஞ்சம் பெரு வெடிப்பில் (BIG BANG) தோற்றம் பெற்றது. சுமார் 13 கோடி ஆண்டுகளின் பின்னரும் இந்தப் பிரபஞ்சம் விரிந்து கொண்டுதான் இருக்கிறது. சில சமயம் திணிவு அதிகமாகி ஒன்றை ஒன்று ஈர்க்கத் தொடங்கலாம். அப்போது பிரபஞ்சம் ரிவர்ஸ் கியரிலும் செல்லலாம்.


அந்த வெடிப்பு

பானையில் இருந்து பொங்கி வழியும் பால், திரைப்படங்களில் ரிவர்ஸ் உத்தி கையாளப்பட்டு, மீண்டும் பால் பானைக்குள் சென்றடைவது போல காட்சி அமைக்கப்பட்டிருப்பதை பார்த்திருப்பீர்கள். ஸ்தூல வஸ்துகள் ஒன்றை ஒன்று ஈர்க்கத் தொடங்கினால் பிரபஞ்சம் தன் விரிவாக்கத்தை நிறுத்தி விட்டு வந்த வழியே பின்புறமாக செல்லத் தொடங்கி விடும் என்றும், பெரு வெடிப்பு நிகழ்வதற்கு முன்னர் என்ன நிலையில்-தனியொரு பொருளாக-இருந்ததோ அந்த நிலையை அடைந்து விடும் என்றும் விண்ணியல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.


சத்யேந்திரநாத் போஸ்

இந்த சிருஷ்டி பற்றி இந்து வேதாந்தத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது குறிந்து சுவாமி விவேகானந்தர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'பிராணன் என்பது என்ன? பிராணன் என்பது ஒரு வித வேகம். பிரபஞ்சம் அனைத்தும் அடங்கி முன்னிருந்த நிலையை அடையும்போது இந்த அளவற்ற சக்தி என்னவாகிறது? அது மறைந்து அல்லது தீர்ந்து விடுகின்றது என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றனவா? அவை அவ்வாறு உரைப்பதில்லை. ஏனெனில் அவை தீர்ந்துவிட்டால், இப்பிரபஞ்சம் மறுபடியும் தோன்றுவது எங்கனம்? சிருஷ்டி என்பது சமுத்திரத்தில் அலைகள் தோன்றி மறைவது போல், தோன்றி மறைந்து கொண்டே இருக்கிறது. ஒரு கற்பத்தின் பின்னர் பிரபஞ்சம் அனைத்தும் சூட்சுமாகி சிருஷ்டிக்கு முன்னிருந்த நிலையை அடைகின்றது. மறுபடியும் சிருஷ்டி ஆரம்பமாகும் வரை அவை அவ்விதமாக இருக்கின்றன. இதைத்தான் வேதத்தில், 'அது அசைவசற்றிருந்தது; ஆனாலும் தன்னுள்ளே மகத்தான சக்தியை உடைத்தாயிருந்தது' என்று சொல்லப்பட்டிருக்கிறது' (இந்திய பிரசங்கங்கள் பக்.27)


என்று லாகூரில் சுவாமி விவேகானந்தர் சுமார் 114 ஆண்டுகளுக்கு முன்னர் வேதாந்தம் என்ற தலைப்பில் உரையாற்றிய போது, பிரபஞ்சத்தின் உதயம் மற்றும் அஸ்தமனம் பற்றி குறிப்பிட்டிருப்பது, இன்றைய பிரபஞ்ச கோட்பாடுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வியப்பையே ஏற்படுத்துகிறது.

இனி கடந்த ஜுலை மாதம் 4ம் திகதிக்கு வருவோம்.

**அருள் சத்தியநாதன்**

நூறு ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிக செலவில் சுவிட்சர்லாந்தில் பூமிக்கடியில் 574 அடி ஆழத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சுரங்க ஆய்வு கூடத்தில் விஞ்ஞானிகள் கூடியிருக்க, ஒரு முக்கியமான அறிவிப்பு வெளியிடப்பட்டது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக வெறும் கேள்விப் பொருளாகவும் கேலிப் பொருளா-கவும் மட்டுமிருந்த ஒரு கோட்பாடு பட்டவர்த்தனமாக விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்ட பின்னரேயே அக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

ஹிக்ஸ் பொஸான் என்ற முக்கிய அணுத்துகள் உண்மையாகவே இருந்தாக வேண்டும் என்பது கோட்பாடு. ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஏராளமான விஞ்ஞானிகள் தொடர்ச்சியாக ஆய்வுகள் நிகழ்திய பின்னரும் இக்கோட்பாட்டை நிருபிக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் சலிப்பேறிப்போன அமெரிக்கா, பொஸான் ஆய்வுகளுக்கு இனி நிதி ஒதுக்கப் போவதில்லை என்று மறுத்துவிட்டது. இதன் பின்னரே ஐரோப்பிய அணு ஆய்வு நிறுவனம் சுவிட்சர்லாந்தில் இப்பெரிய சுரங்க ஆய்வு கூடத்தை நிர்மாணித்தது.


பீட்டர் ஹிக்ஸ்

சுவிஸ் நாட்டில் இந்த ஆய்வு கூடம் அமைக்கப்பட்டிருந்தாலும் இதன் முதலீட்டுச் செலவு பிரமாண்டமாக இருப்பதால் 37 நாடுகள் செலவை தமக்கிடையே பங்கிட்டுக் கொண்டன. இந்த ஆய்வு கூடத்தை அமைப்பதில் 169 ஆய்வு நிறுவனங்கள் பங்களிப்பு செய்துள்ளன. மூவாயிரம் ஆய்வாளர்களின் பங்களிப்புடன் ஆய்வுகள் கடந்த மூன்று ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விண்ணியல் மற்றும் பௌதிக, இரசாயன துறைகளில் மேற்கொள்ளப்படும் மிகப் பெரிய ஆய்வுகளாக இவை கருதப்படுகின்றன.

இதுதான் விஷயம்.

பிரபஞ்சம் பெரு வெடிப்பு ஒன்றின் பின்னரேயே தோற்றம் பெற்றது என்பது கோட்பாடு. இதை உலக விஞ்ஞானிகள் ஏற்றுள்ளனர். ஆனால் வெடித்துச் சிதறியவை எப்படி பல்வேறு வடிவங்களாக தோற்றம் பெற்றன என்ற கேள்விக்கு பதில் கண்டறிய முடியவில்லை. நீண்ட ஆய்வுகளின் பின்னர் ஸ்தூல பொருட்களுக்கு 12 அணுத்துகள்களே காரணம் என்பது அறியப்பட்டது. இவற்றில் 11 துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அனைத்து பொருட்களுக்கும் இவையே அடிப்படை. இவை இல்லாமல் பிரபஞ்சமே இல்லை. ஆனால், ஒரு துகள் மட்டும் விஞ்ஞானிகளிடம் சிக்கவில்லை.

12வது துகள் இருக்கத்தான் வேண்டும் என்ற கோட்பாட்டை முதலில் முன்வைத்தவர் பெயர் பீட்டர் ஹிக்ஸ். இப்படி கோட்பாடுகளை முன் வைப்பதும் பின்னர் அதை உண்மையாக்க முயற்சிகள் செய்வதும் ஆய்வுலகில் வழமை. விண்ணில் கருந்துவாரம் (Black Hole) என்ற ஒன்றிருக்கிறது என்றும் மிகப்பெரிய நட்சத்திரங்கள் இறந்து போகும் போது அவை கருத்துவாரமாக மாறுகின்றன என்றும் ஒரு கோட்பாடு முன்வைக் கப்பட்டது. இக் கோட்பாடு ஆய்வாளர்களினால் ஏற்றுக் கொள் ளப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை கருந்துவாரம் என்ற ஒன்றிருப் பதாக விண்வெளி ஆய்வாளர்கள் கண்டு பிடிக்கவே இல்லை. இதற்குக் காரணமும் இருக்கிறது.

இது போலவே, பிரபஞ்சலத்தில் கருஞ்சக்தி, கரும் பொருள் இருப்பதாகவும் பிரபஞ்சத்தின் பெரும்பகுதியில் இவை காணப்படுவதாகவும் கோட்பாடு உண்டு.

(31ஆம் பக்கம் பார்க்க)

அட்டையை அலங்கரிப்பவர்
நேஹா சர்மா



வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com


விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

செப்டெம்பர் மாத வானவில் 01ம் திகதி முதல் கடைகளில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேஸ் உடலில் புகுந்த சுடலைப் பேய்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)



பெற்றோர் மத்தியில் வீசக் கூடிய ஒரு பெரும் புயலைத் தடுத்துவிட்ட சந்தோஷம் அவளுக்கு இருந்தாலும் அந்த அதிர்ச்சி மட்டும் ஆழ் மனதில் அப்படியே பதிந்து விட்டது. தான் மிகவும் நேசிக்கும் அம்மா இன்னொருவனுடன் இருந்த அந்தக் காட்சி அவளை அடிக்கடி பயமுறுத்தியது. அம்மாவிடம் இது பற்றி பேச அவளுக்குத் தைரியம் இல்லை. அப்பாவிடம் சொல்வது என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. அம்மா ஏன் அப்படி... அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த எண்ணம் தோன்றும் போதெல்லாம் அடிவயிற்றில் நெருப்புப் பந்தொன்று புரள்கின்ற மாதிரித் தோன்றியது. தனக்கு மயக்கம் ஏற்பட்டது கடவுள் செயல்தான் என்று எண்ணினாள் அச் சிறுமி.

மயக்கம் என்பது கூட உடல் ஏற்படுத்திக் கொள்ளும் தற்பாதுகாப்பு உத்திதான். உடலின், மனதின் வேதனையை மயக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது.

ரிஷி

பாடசாலைக்கு இரண்டு தினங்களின் பின்னர் அவள் சென்றாள். ஆசிரியர் வகுப்பு நடத்திக் கொண்டிருந்த போது திடீர் திடீர் என அவள் கவனம் சிதறியது. அந்த நினைவுகள் அவளை ஆக்கிரமித்து எங்கோ அவளை அழைத்துச் சென்றது. கனவும் நினைவுமாக அவள் தவித்தபோதுதான் அந்த மயக்கம் திரும்பவும் வந்தது, வலிப்புடன். அவள் மயங்கிச் சரிந்தாள்.

ஆழ்நிலை உறக்கத்தில் ஆழ்ந்திருந்த அம் மாணவி மனநல மருத்துவரிடம் உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கூறி முடித்ததும், மருத்துவருக்கு அனைத்தும் புரிந்தது. அவளுக்கு சில சிகிச்சைகள் அளித்தார். காரணத்தைப் பெற்றோரிடம் கூறாமல், இன்னும் சில தினங்களில் மகளுக்கு குணமாகி விடும் என்றார்.

சிறுமிக்கு அதன் பின்னர் மயக்கம் ஏற்படவில்லை. ஒழுங்காகப் பாடசாலை சென்று வந்தாள். மருத்துவர் சிறுமியின் அம்மாவை தனியாகச் சந்தித்து சில அறிவுரைகளை வழங்கினார். தான் இனி அவ்வாறு நடந்து கொள்ளமாட்டேன் என கண்ணீருக்கு மத்தியில் மருத்துவரிடம் உறுதிமொழி வழங்கியதோடு மகள் விடயத்தில் மிகுந்த பாசத்துடனும் முன்மாதிரியாகவும் நடந்து கொள்வேன் என்றும் சொல்லி விடை பெற்றாள்.

சரி, ஏனைய மாணவியர் அந்த நாட்காலியில் அமர்ந்ததும் ஏன் மயங்கி விழுந்தார்கள்?

தங்கள் தோழி ஆவி சேஷ்டை காரணமாகத்தான் மயங்கி விழுந்தாள் என அவர்கள் நம்பியதால்தான், இருக்கையில் ஒளிந்திருக்கும் ஆவி அல்லது பிசாசு, தங்களையும் பீடித்துவிடும் என்ற பயம் அவர்களையும் மயங்கி விழச் செய்தது என்பது மருத்துவரின் தீர்மானம்.

பள்ளி நிர்வாகத்திடம், வகுப்பறை நாட்காலி, மேசைகளை மாற்றிப் போடச் சொல்லிவிட்டு சென்றார் மருத்துவர்.

இந்த உலகில் நிகழ்பவை அனைத்துமே இயற்கையானவையே என்பதும் இயற்கைக்கு அப்பால் வேறொரு சக்தி இல்லை என்பதும் விஞ்ஞான கோட்பாடு. எல்லா நிகழ்வுகளுக்கும் காரணம் உண்டு. எனினும் எல்லா நிகழ்வுகளுக்கும் காரணங்களைக் கற்பிக்க முடியாது. அதாவது, காரணங்கள் கண்டறியப்படாத நிகழ்வுகளும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஏராளமான மர்மங்களின் முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டுவிட்டன. அவிழ்க்கப்பட்டும் வருகின்றன. பல 'அற்புதங்கள்' அவை அற்புதங்கள் அல்ல என்பது நிரூபிக்கப்பட்டு விட்டன. முடிச்சு அவிழ்க்கப்படாத இரகசியங்கள் இருக்கவே செய்கின்றன. அவை எதிர்காலத்தில் விஞ்ஞான ரீதியாக விளக்கப்படும். மின்சாரம் பாவனைக்கு வராத காலத்தில் நிறைய அமானுஷ்ய கதைகள், சம்பவங்கள் நாட்டில் உலவி வந்தன. நாடெங்கும் மின்சார வசதி வந்ததும் பேய்க் கதைகளும் மறைந்து விட்டன.

இதே சமயம் எலக்ட்ரானிக் சாதனங்களின் பாவனை, தொடர்பாடல் துறையின் அசுர வளர்ச்சி, ஊடகங்களுக்கு இடையிலான வர்த்தக போட்டா போட்டி என்பன மீண்டும் மக்களை திகிலில் ஆழ்த்த வேண்டும் என்பதற்காக மீண்டும் ஆவி, பூதம், பிசாசு எனப்பழைய 'அருந்ததீ' கதைகளை ஊடகங்கள் தூசு தட்டி எடுத்து பணம் பண்ணிக் கொண்டிருப்பதையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டிருக்கிறது.

மனிதன் அடிப்படையில் காம சக்தியால் ஆளப்படுபவன். பல உளவியல் கோளாறுகளுக்கு பாலியலே காரணமாகிறது. பல பேய்களின் தோற்றத்துக்கும், நடவடிக்கைகளுக்கும் உளக் கோளாறுகளே காரணமாகின்றன. அவ்வாறான ஒரு உண்மைக் கதையை இங்கே பார்ப்போம். இது, இரத்தினபுரி பகுதியில் எழுபதுகளில் நடைபெற்ற ஒரு சம்பவம்.

அவர் அந்தத் தோட்டத்தில் ஒரு கிளாக்கர். அவர் மனைவிக்கு முப்பது வயதிருக்கும். கிளாக்கருக்கு 45 வயதிருக்கும். திருமணமாகி சில வருடங்கள் தான். குழந்தை இல்லை. பிரதான வீதியில் இருந்து தோட்டத்தில் உள்ளே வெகுதூரம் மலையேறிச் சென்றால்தான் கிளாக்கர் கந்தையா வீடு வரும். மின்சாரம் இல்லாததால் 'பெட்ரல்மெக்ஸ்' விளக்குதான் உபயோகித்தார்கள். உறவினர்கள் இங்கு வந்து செல்வது அரிது. எட்டரை மணிக் கெல்லாம் படுக்கைக்கு போய்விடுவார்கள். தூக்கம் வரும்வரை ரேடியோ சிலோன் கேட்டுவிட்டு உறங்கி விடுவார்கள். வெறுமையான, தனிமையான, சோம்பேறியான வாழ்க்கை. மனைவி கிரேஸ், தன் இளமைக் காலத்தை அடிக்கடி அசை போட்டு தனிமையை விரட்டி திருப்தி அடைவாள்.

அது நகர வாழ்க்கை அப்பா சிவாஜி, எம்.ஜி.ஆர் படம் பார்க்க வாடகைக் காரில் அழைத்துச் செல்வார். படிப்பு முடிந்து டைப்பிங் ஷோர்ட்ஹேண்ட் படிக்கச் சென்ற போது பஸ்ஸிலும், வகுப்பிலும் விடலைப் பையன்கள் சில்மிஷம் செய்வார்கள். காதல் கடிதங்கள் வரும்... கிரேசுக்கும் ஒரு சுருட்டை முடி கருகருமீசை வாலிபன் மீது ஆசை வந்தது. சிவத்த தோல், கைகளிலும் முடி சுருண்டு கிடக்கும். ஒரு தடவை இயல்பாக அவனுடன் பேசுகிற மாதிரி அவன் கரத்தில் படர்ந்து கிடந்த முடியை தடவி விட்டு பரவசம் அடைந்தது எப்போதாவது அவளுக்கு நினைவுக்கு வரும்.

அத் தம்பதியினரின் வாழ்க்கை மாற்றமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தபோது அவர்கள் உறவினர் திருமணமொன்றில் கலந்து கொள்ள நேர்ந்தது. அங்கே சுருட்டைத்தலை, கருகரு மீசை, கொஞ்சம் பருமனான மாநிற இளைஞனை அவள் கண்டாள். அவளுக்கு அவன் தூரத்து உறவினன். இருவருடனும் அவன் கலகலப்பாக பேசினான். கந்தையா கிளாக்கருக்கு அவனை நன்கு பிடித்துப் போய்விட்டது. இருவரும் அவனை வீட்டுக்கு வாருங்கள் என அழைத்தார்கள். அவனும் சரி என்று சொல்லி விட்டுப் போனான்.

இரண்டு வாரங்களின் பின்னர் இருட்டிக் கொண்டுவரும் ஒரு பனிக்காற்று மாலையில் அவன் வந்தான். தட்டப்பட்ட முன் கதவைத் திறந்தபோது அவளால் ஆச்சரியம் தாங்க முடியவில்லை. வாசலில் புன்னகையோடு அவன்-டேவிட்-நின்று கொண்டிருந்தான்.

அவனை அமரச் செய்து சுடச்சுட தேனீர் போட்டுத் தந்தாள். உடை மாற்றுவதற்கு தனி அறையைத் திறந்து விட்டாள். பாத்ரூமை அவனுக்காக ரெடி பண்ணி, புதுச் சலவை மணம் மாறாத டவலை அவன் கையில் தந்துவிட்டு, ஒரு கோழியை அறுத்துத் தரும்படி மாட சாமிக்கு தகவல் அனுப்பி விட்டு சமையலை ஆரம்பித்தாள். தங்களது தனிமையைப் போக்க ஒருத்தன் வந்தானே என்ற சந்தோஷம் அவளிடம் மண்டிக் கிடந்தது.

தோட்ட அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பிய கந்தையா கிளாக்கருக்கு அவனைக் கண்டதில் இன்ப அதிர்ச்சி! வேடிக்கையும் சிரிப்புமாக பேசிய அவர் ரேடியோவை கொஞ்சம் பலமாகவே அலறவிட்டார்.

கோழிக்கறி சமையலை முடித்து விட்டு முகம் கழுவி உடை மாற்றிக் கொண்ட கிரேஸ், அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். சோம்பிக் கிடந்த அந்த வீடு களைகட்டி உயிர் பெற்றது. சிரிப்பும், வேடிக்கை பேச்சுமாக பொழுது கழிந்தது. சாப்பிடும்போது, 'அக்காவின் கைமணம் சமையலில் அப்படியே தெரிகிறது' என்று அவன் அடிக்கடி பாராட்டிய போது அவள் பெரு மிதத்தில் மூழ்கிப் போனாள். அவள் கணவன் கூட இப்படிப் பாராட்டிப் பேசியதில்லை!

மூவரும் மகிழ்ச்சியுடன் உறங்கப் போனார்கள்.

இரண்டு தினங்கள் அங்கே 'அக்கா அக்கா'என சுற்றிக் கொண்டிருந்த அவன் பின்னர் கிளம்பிப் போனான்.

(13ஆம் பக்கம் பார்க்க)


வண்ண வானவில்

வண்ண வானவில் விளம்பரக் கட்டணங்கள்

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | – ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | – ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | – ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | – ரூ 32,000.00 |

சாதாரண விளம்பரங்கள்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | – ரூ 125.00 கலம் செமீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | – ரூ 140.00 கலம் செமீ |
| கறுப்பு இரண்டு கலர் | – ரூ 150.00 கலம் செமீ |
| முழு வர்ணம் | – ரூ 160.00 கலம் செமீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320

வண்ண வானவில்

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.30 |
| 1 வருட சந்தா | ரூ.360.00 |
| 6 மாத சந்தா | ரூ.180.00 |
| 3 மாத சந்தா | ரூ.90.00 |

சந்தாவை செலுத்தியதும் நாம் உங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்வோம் எமது ஏஜண்ட்டிடம் இதனை பெறலாம்.

தபால் மூலம் பெறுவதற்கு:

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ.552.00 |
| 6 மாத சந்தா | ரூ.276.00 |

மேலும் விபரங்களுக்கு:
011-2319760, 2429444
மின்னஞ்சல்:
subscription@lakehouse.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் யாழ் குடாநாட்டிலே பிரசித்திபெற்ற சில ஆலயங்களின் மகோற்சவ காலத்தின் போது, அந்தந்த ஆலய சுற்றாடலில் தெருவை மூடி பந்தல்கள் அமைக்கப்படுவது வழக்கமாகும். தெருவின் இருபக்கங்களிலும் மரத்தினாலான தூண்களை நிறுத்தி, அவ்வழியால் உயரமான வாகனமொன்று செல்லக்கூடிய அளவுக்கு மேலே இடைவெளிவிட்டு பந்தல்களை வடிவமைப்பதுண்டு. இவ்வகையான பந்தல்கள் தட்டையான கூரையைக் கொண்டதாகவும், முகடுவைத்த வகையிலான (நடுவில் உயரமும், இரு பக்கங்களும் சரிந்தும்) கூரையைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. இப்படியான தெருமூடிப் பந்தல்களை சற்று நிரந்தரமாகவே அமைப்பதுண்டு. ஆலய உற்சவ காலங்களின் போது, நீண்ட தூரங்களிலிருந்து சுவாமி தரிசனத்துக்கு வருபவர்கள் அமர்ந்திருந்து இளைப்பாறிவிட்டுச் செல்வதற்கும், இவர்களது தாகசாந்திக்கான குளிர்பானங்கள் வழங்குவதற்கும் தெருமூடிப்பந்தல்கள் பேருதவியாக இருக்கின்றன.

இந்த தெருமூடிப் பந்தல்கள் யாழ் குடாநாட்டின் பண்பாடு மற்றும் வாழ்வியலுடன் இணைந்த பாரம்பரிய தொன்மைச் சிறப்பை நினைவுபடுத்தும் வகையில் அமைந்திருப்பதை குறிப்பிட வேண்டும். அதாவது முன்னைய காலத்தில் குடாநாட்டின் சில பகுதிகளில்



# பருத்தித்துறை தெருமூடி மடம்

அன்றைய காலத்தில் பாதை வசதி குறைவு என்பதால், மாட்டு வண்டில்களில் ஏற்றப்பட்டு, அவற்றை எடுத்துச் சென்று அந்தந்தப் பகுதிகளில் அமைந்திருந்த தெருமூடி மடங்களில் இறக்கிவைத்து பங்கீடு செய்து, பின்னர் வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தன என்றும் தெரியவருகிறது. இத்தகைய தேவைக்கு இவை பயன்பட்டன என்றும் சொல்லப்படுகிறது" என்று இவர் தகவல் தருகிறார்.

இந்தத் தெருமூடி மடத்தின் பாதைக்கு இரு பக்கங்களிலும் உயர்ந்த திண்ணைகள் காணப்படுகின்றன. போளி கற்களாலேயே இது கட்டப்பட்டுள்ளது. பருத்தித்துறையைச் சேர்ந்த ஆசிரியரான பா.இரகுவரன் இந்த தெருமூடிமடம் சம்பந்தமாக இவ்வாறு சொல்கிறார்.

''ஒல்லாந்தர் காலத்தின்போது, குறிப்பாக 1700 களில் பருத்தித்துறை துறைமுக வாணிபத்திற்காக குடியேறிய செட்டிமார்கள், இங்குள்ள கோயில்களின் பூசை வழிபாட்டுக்காக அந்தணப்பெருமக்களை இங்கு குடியமர்த்தினார்கள். இவர்கள் இந்தியாவின் திருவையாற்றிலிருந்து அழைத்துவரப்பட்டார்கள். இவர்களது குடியமர்வு தும்பளை வீதியின் தெருமூடி மடத்தருகே தொடங்கி பண்ணையம்பதியிலும் (பண்ணைக்கட்டை) மற்றும் தும்பளை வீதியின் சிற்சில இடங்களிலும் பரந்து, தும்பளை மேற்கிலும் விஸ்தீரணம் பெற்றது. தும்பளை வீதியில் குடியமர்ந்திருந்த அந்தணர் ஒருவரினாலேயே இந்த தெருமூடிமடம் கட்டப்பட்டிருக்க வேண்டும் என கருதுவதற்கு இடமுண்டு. முன்னர் இந்த மடத்தின் பக்கத்து வளவில் அமைந்திருந்த அந்தணரின் வீட்டுக்குச் செல்லக் கூடிய வாயில் ஒன்று, மடத்தின் ஒருபக்கத்தில் காணப்படுகிறது. ஆனால், அந்த வீடு இப்போது காணப்படும் மடத்தின் வாயிலுக்கும் தொடர்பு இருந்திருப்பதை அவதானிக்கமுடிகிறது. பெரும்பாலும் 1898 அல்லது 1899ஆம் ஆண்டிலேயே இந்த மடம் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என தெரியவருகிறது.

அமைந்திருந்த தெருமூடிமடம் அல்லது சத்திரத்தை இவை நினைவுபடுத்திக் காட்டுகின்றன.

யாழ் குடாநாட்டில் எங்கெங்கு தெருமூடி மடங்கள் அமைந்திருந்தன என்பது பற்றிய முழுமையான தகவல் இல்லை. ஆனால், இத்தகைய மடங்கள் வடமராட்சி பகுதிகளிலேயே காணப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பருத்தித்துறையிலிருந்து மருதங்கேணி செல்லும் பிரதான நெடுஞ்சாலையின் ஆரம்ப இடத்தில் - பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு சமீபமாக அமைந்திருக்கும் தெருமூடிமடம் தான் இப்போது எஞ்சியிருக்கும் ஒரேயொரு மடமாகும்.

திருமதி குமுதா உமாகாந்தன் எழுதி வெளியிட்டிருக்கும் 'யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக்கட்டடக் கலையும்' என்ற நூலில் இது சம்பந்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார். 1898ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறை சண்முகக் குருக்கள் என்பவர் இந்த தெருமூடி மடத்தைக் கட்டுவித்ததாக இந்த நூலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''இந்த நூலை எழுதுவதற்கு முன்பதாக, பேராசிரியர் கா.சிவத்தம்பி எனக்கு பல தகவல்களை தந்து உதவினார். தெருமூடிமடம் என்பது குறிப்பாக வடமராட்சி பகுதிக்கே உரித்தானதாக விளங்கியது என்றே அவர் சொல்கிறார். பருத்தித்துறை நகரத்திற்கு அண்மித்த வகையில் ஐந்து தெருமூடி மடங்கள் முன்னரே காணப்பட்டதாகவும், பருத்தித்துறை-தும்பளை வீதியின் (மருதங்கேணி செல்லும் நெடுஞ்சாலை) முகப்பில் காணப்படும் தெருமூடி மடத்தைத் தவிர, ஏனைய நான்கும் அழிவடைந்துவிட்டன என்றும் பெரியோரிடமிருந்து அறிந்துகொள்ள முடிந்தது. இவற்றுள் மந்திகை-அல்வாய் வீதியில் காணப்பட்ட தெருமூடிமடம் திண்ணை உடையார் என்பரால் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது. வதிரியில் காணப்பட்ட மடத்துப் பிள்ளையார் தெருமூடிமடம் யாரால் கட்டப்பட்டது என்பதை அறியமுடியவில்லை. இவை தவிர, ஏனைய இரு மடங்களும் எங்கெங்கு காணப்பட்டன என்பது பற்றிய தகவலும் இல்லை" என்கிறார் இவர்.

இந்த தெருமூடி மடங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் அல்லது அடிப்படைக் காரணம் நீண்டதூரம் பயணம் மேற்கொள்வோர் தங்கியிருந்து ஓய்வெடுத்துச் செல்வதற்குப் பயன்பெற வேண்டும் என்று சொல்லப்பட்டாலும், இதற்கும் மேலாக இன்னொரு காரணத்தையும் திருமதி குமுதா சொல்கிறார்.

''பல வருடங்களுக்கு முன்னர் வட பகுதியில் முக்கியத்துவம் பெற்றதாக பருத்தித்துறை துறைமுகம் விளங்கியது. அதாவது, கடல் வாணிப செயற்பாட்டுக்கு இத்துறைமுகம் பேருதவியாக அமைந்திருந்தது. வெளிநாடுகளிலிருந்து உணவு மற்றும் பலவிதமான அத்தியாவசியப் பொருட்களுடன் கப்பல்கள் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேருவது வழக்கம். இங்கு இறக்கப்படும் பொருட்களை

இந்த மடம் கட்டப்பட்ட போது கூரைக்கு கொழுக்கி ஓடு இல்லது பீலி ஓடு என்றும், சீனஓடு என்றும் சொல்லப்படும் ஓடுகளே பயன்படுத்தப்பட்டிருந்தன. காலப்போக்கில் கூரையும், ஓடுகளும் சேதமடைந்ததன் காரணமாக, பெரும்பாலும் 1970க்கு பிற்பட்ட காலப்பகுதியில் கூரை திருத்தப்பட்டு, சமகாலத்தில் பாவனையிலிருக்கும் சாதாரண ஓடுகளே பொருத்தப்பட்டன. இந்த திருத்தப் பணிகளில் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தை பயன்படுத்தி வருகின்ற பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் பெரும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். மடத்தின் கட்டடத்தில் ஏற்பட்டுள்ள சிறு சிறு வெடிப்புக்களையும் திருத்தம் செய்து, அதனை நல்லவகையில் பேணிப் பாதுகாப்பதற்கு இப்போது பருத்தித்துறை நகரசபையும் தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறது என்கிறார் இரகுவரன்.

இந்த தெருமூடிமடம் அல்லது தெருமூடி சத்திரத்தை அரசாங்கம் பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் நினைவுச் சின்னமாக வெளிப்படுத்துவதற்கு முன்னறிவித்தல் ஒன்றைக் கொடுத்துள்ளது. 2011 செப்டம்பர் 2 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 1722ஆம் இலக்க அரச வர்த்தமானியில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

''புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டம்(188ஆம் அத்தியாயம்) 19ஆம் பிரிவின் கீழான அறிவித்தல். இந்த அறிவித்தலுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு 'பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக' வெளிப்படுத்தி (188ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னெடுக்கப்படுகின்றது என தேசிய மரபுரிமை அமைச்சரான ஜகத் பாலசூரிய ஆகிய நான் இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்" என்று குறிப்பிடப்பட்டிருப்பதுடன், அந்த அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள தொல்பொருள் நினைவுச் சின்னங்களின் நிரல் தொடரிலக்கம் 14இல் 'யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஜே/401 ஆம் இலக்க பருத்தித்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பசுபதீஸ்வரர் கோயிலுக்கு அருகாமையிலுள்ள தெருமூடி சத்திரம்' என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

சிலருக்குத் தெரிந்தும் பலருக்குத் தெரியாமலும் இருக்கும் வடபகுதியின் இத்தகைய பழம்பெரும் வரலாற்றுச் சின்னங்களை இன்றைய சந்ததியினர் நிச்சயம் அறிந்திருக்க வேண்டியது மட்டுமல்ல, எதிர்காலத்திலும் பலரும் தெரிந்துகொள்ளும் வகையில் அவற்றை வரலாற்றுப் பதிவாக வெளிப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகவே அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தின் சூத்திரக் கிணறு

மக்கள் உயிர் வாழ்வதற்கு மட்டுமல்ல, அவர்களது பல்வேறுபட்ட தேவைகளுக்கும் அத்தியாவசியமாக காணப்படுவனவற்றுள் முக்கிய இடத்தை வகிப்பது நீராகும். நீரைப் பெறுவதற்கு பண்டைக் காலத்திலிருந்தே மக்கள் பல முறைகளைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். இவற்றுள் குறிப்பிடத்தக்கதாக சூத்திரக் கிணறு அமைந்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கிராமங்கள் பலவற்றில் முன்னைய காலத்தில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு சூத்திரக் கிணறு பேருதவியாக இருந்துள்ளது. இது எந்த ஆண்டிலிருந்து பயன்பாட்டுக்கு வந்தது என்பது ஆய்வுக்குரிய விடயம். வலிகாமம் கிழக்கு பகுதியிலுள்ள நீர்வேலி கிராமத்தில் ஐம்பதுகளின் முற்பகுதியில் சூத்திரக் கிணற்றின் பாவனை ஆரம்பமானது என்றே தெரிய வருகிறது. இதற்கான இயந்திரம் நீர்வேலியைச் சேர்ந்த தம்பையா ஆசாரியார் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது சக்கர நீர் இறைக்கும் இயந்திரம் எனவும் அழைக்கப்பட்டது. இவரின் வழிகாட்டலினால், பின்னர் பல சூத்திரக் கிணறுகள் நீர்வேலி கிராமத்தில் தோற்றம் பெற்றன.


சூத்திரக் கிணற்றிலிருந்து நீர்பெற்றுக்கொள்வதற்கான இயந்திரத்தை இயக்குவதற்கு காளை மாடுகள் பயன்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் ஒரு காளை மாட்டைப் பூட்டி இயந்திரத்தை செயற்படுத்தினார்கள். பின்னர் காலப்போக்கில் இரண்டு காளை மாடுகளைப் பூட்டி தங்கள் தேவைகளுக்கு ஏற்றவாறு வாளிகளைப் பொருத்தி (2 வாளி, 3 வாளி, 4வாளி என) செயற்படுத்தியதன் ஊடாக நீரைப் பெற்றுக்கொண்டார்கள்.

சூத்திரக் கிணற்றின் பாவனைக்கு நீண்ட இரும்புச் சங்கிலி தேவைப்பட்டது. 3 அடி விட்டமுடைய சக்கரத்தின் ஊடாக சங்கிலியின் செயற்பாடு அமைந்திருந்தது. இது 'காளை பூட்டும் துலா' எனவும் அந்நாளில் அழைக்கப்பட்டது. காளை மாடுகளை பூட்டி சூத்திர இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு மனிதவலு முக்கிய தேவையாகக் காணப்பட்டது. அதாவது காளை மாடுகளை ஓய்வின்றி தொடர்ந்து இயக்குவதற்கு மனிதன் செயற்பட வேண்டிய சூழ்நிலை இருந்தது. மாட்டு வண்டியொன்றை செலுத்துவது போன்றே இரு மாடுகளும் பூட்டப்பட்ட துலாவுக்குப் பின்னால் ஏறியிருந்து, கிணற்றுக்கு அருகேயிருக்கும் நிலப் பகுதியில் வட்டவடிவமாக சுற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். இதன்போது, கிணற்றின் அடிப்பகுதியிலிருந்து வாளியின் ஊடாக நீரைப் பெற்று தொட்டிக்குள் அனுப்புவதற்கு, வாளியின் கீழ்ப்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் கம்பியின் அழுக்கம் கிணற்றிலிருந்து மேல் நோக்கி செயற்படும்போது, வாளி சரிக்கப்பட்டு நீர் தொட்டிக்குள் விடப்படும்.



இந்த சூத்திரக் கிணற்றின் செயற்பாட்டுக்கு மனிதவலு மட்டுமல்ல காளை மாடுகளும் தேவைப்பட்டன. அத்துடன் கூடிய நிலப்பரப்பும் அவசியமானதாக இருந்தது. அதிக நேரமும் செலவழிக்கப்பட்டது. காலப்போக்கில் இதன் பாவனை குறையத் தொடங்கியது. யாழ் மாவட்டத்தில் நிலவிய போக்குவரத்து சூழ்நிலைகளும், அதன் காரணமாகவும் 1995ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாகவும் சூத்திரக் கிணற்றின் பாவனை முற்றாகவே இல்லாமற்போனது.

காலமாற்றத்தினால் ஏற்பட்ட விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியும் அதனூடான வசதிகளும் நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார மோட்டார் இயந்திரம் என்பனவற்றை தோற்றுவித்தன. இதுவும் சூத்திரக் கிணற்றின் பாவனையை கைவிடுவதற்கு காரணமாக அமைந்துவிட்டது. இதற்குப் பயன்படுத்தப்படும் காளை மாடுகளை வளர்த்தெடுப்பதில் ஏற்பட்ட சிக்கலும், இவற்றின் உணவுக்காக பெருமளவு பணம் தேவைப்பட்டமையும், இதற்கான மனிதவலுவை பிரயோகிப்பதில் ஏற்பட்ட இடையூறுகளையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. இத்தகைய செயற்பாட்டில் இளம் சந்ததியினர் ஈடுபடுவதற்கு விருப்பம் கொள்ளாமையும் காரணமாகச் சொல்லலாம்.



சூத்திரக் கிணறுகளின் பாவனை இல்லாத நிலையிலும், இதற்காகப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் ஒரு சில கிராமங்களில் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. யாழ் குடாநாட்டு மக்களது வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்த சூத்திரக் கிணறு ஒரு வரலாற்றுச் சின்னமாக குறிப்பிடப்படவேண்டியது அவசியமாகும்.

சுஜாதா இராசையா,
நீர்வேலி மேற்கு

# உதயத்தின் பார்வையில் கிழக்கிலங்கை...



# முப்பது ஆண்டுகாலமாக பின்தள்ளப்பட்டிருந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்பும் பாரிய முயற்சி

இனப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட முப்பதாண்டு கால போரின் ஒரு மையப் பிரதேசமாக விளங்கிய கிழக்கிலங்கை யுத்தத்தினால் மட்டுமன்றி இடையே ஏற்பட்ட சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் பாரிய அழிவை சந்தித்தது.

வரலாற்றில் ஒரு போதும் கண்டிராத இவ்வாறான ஒரு அழிவை இப் பிரதேசம் சந்தித்து இருக்கவேயில்லை. இப்பிரதேசத்தை மையமாகக் கொண்டு நிலவிய யுத்தம் அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கு முக்கிய தடைக்கல்லாக இருந்தது.

2009ஆம் ஆண்டு பயங்கரவாத பிடியில் இருந்து இப்பிரதேசம் மீட்டெடுக்கப்பட்டாலும் 30 ஆண்டு கால போரினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் சுக்கு நூறாக்கப்பட்டு அபிவிருத்தி பின்தள்ளப்பட்டு இருந்தது.

இப்பிரதேசத்தை ஒரு பாரிய அபிவிருத்தி கருத்திட்டத்தின் மூலம் துரித கதியில் அபிவிருத்தி செய்ய அரசு முழுமூச்சுடன் செயற்பட்டு வருகிறது.

கிழக்கின் உதயம் என்று அழைக்கப்படும் பாரிய அபிவிருத்தி கருத்திட்டம் ஒன்றின் மூலம் அபிவிருத்தி செய்யப்படும் இப் பிரதேசம் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் கலந்து வாழும் பல்லின கலாச்சார பல்லினத் தன்மை கொண்ட ஒரு சமூக அமைப்பை கொண்டுள்ளது.

பௌதீக ரீதியாக நீண்ட கரையோர பிரதேசத்தையும் பெரும் விவசாய வளங்களையும் கொண்ட இப்பிரதேசம் கிழக்கின் உதயம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயம் நீர்ப்பாசனம், நீர் வழங்கல், மின்சாரம் வீதி அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளை சார்ந்த அபிவிருத்தி திட்டங்களின் சிறந்த அமுலாக்கத்தின் பெறுபேறாக அதன் பயன்களை அப் பிரதேச மக்கள் தற்போது அனுபவித்து விடுகிறார்கள்.

மொத்த தேசிய உற்பத்திக்கான கிழக்கு மாகாணத்தின் பொருளாதார பங்களிப்பு ஏறக்குறைய 5.8 வீதமாகும்.

மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியானது விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் என்ற மூன்று துறைகளாலும் பங்களிப்பு செய்யப்படுகின்றது. கிழக்கு மாகாணமானது இன்று 14 சதவீதத்தில் வளர்ச்சியடைந்து வருவதுடன் அதன் தலா வருமானம் 1877 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும்.

இவ்வாறு துரித வளர்ச்சியை எய்தி வரும் கிழக்கிலங்கையின் பௌதிக மானிட வளங்கள் மற்றும் நிர்வாகத்துடன் கூடிய அடிப்படை புள்ளி விபரங்களையும் புவியியல் ரீதியான அமைப்பினையும் கீழே காணலாம்.

மேலே தரப்பட்டுள்ள வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு பாரிய கருத்திட்டம் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களை நாம் இனி கவனிப்போம்.

## 1. விவசாய அபிவிருத்தி

கிழக்கிலங்கையை பொறுத்த மட்டில் அப்பிரதேசம் விவசாயத்துக்கே மிகவும் உகந்த பிரதேசமாக நாம் கருதமுடியும். 996 சதுரக் கிலோ மீட்டர்களைக் கொண்ட இந்த நிலப்பிரதேசத்தில் எமது தேசிய பயிரான நெற்பயிர்ச் செய்கையை சிறப்பாக மேற்கொள்ள முடியும். அரசு கிழக்கு பிரதேசத்திலே நெற்பயிர் உட்பட உப உணவு பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு, வன்னை மலர்கள் உட்பட்ட பல வகை அபிவிருத்தி போன்ற இன்னோரன்ன விவசாய அபிவிருத்தி திட்டங்களை தற்போது வெற்றிகரமாக அமுல் நடத்தி வருகிறது. உண்மையிலேயே இது தொடர்பாக ஒரு தத்துவார்த்த பார்வை இருக்கிறது. மஹிந்த சிந்தனையில் அரசின் நோக்கு இவ்வாறு சிறப்பாக குறிக்கப்பட்டிருக்கிறது.

"வயலும் வாய்க்காலும்-கோயிலும்-குளமும் இது எமக்கு உரித்தான எமது சமூக அடிப்படையாகும். நான் அந்த சமூக அடிப்படைக்கு சொந்தமான மனிதன். எனவே நான் இந்தப் பூமித்தாயை மதிக்கின்றேன். மரம், செடி, கொடிகளை நேசிக்கின்றேன். எமது மூதாதையரும் இந்த மண்ணில் மரம் செடி கொடிகளை நாட்டினார்கள். வெறுங்கு அருமையாதயம் என்ற மஹிந்த சிந்தனை மூலம் நான் உங்களுக்கு முன் வைத்த கொள்கை, நாம் பயிரிடுவோம்-நாட்டை கட்டியெழுப்புவோம், திவிநெகும திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாய துறையில் இதுவரை நாம் பெற்றுக்கொண்டுள்ள முன்னேற்றம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த அளவுக்கு பெறுமதியானது என்பதை நான் நம்புகின்றேன்"

இவ்வாறு இக்கொள்கை நோக்கு அடிப்படையில் செயற்பட்ட அரசு கிழக்கிலங்கையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய பல செயற்திட்டங்களை அமுல் நடத்தியது. அதிலே அரசின் விவசாயத்துக்கான மொத்த கொள்கைப் போக்கு மிக முக்கியமானதாகும்.

அது பின்வருமாறு:

அ. மக்களுக்கான உணவுப் பாதுகாப்பை அடைதல்

ஆ. விவசாயிகளுக்கு உயர்வானதும் நிலையானதுமான வருமானத்தினை உறுதிப்படுத்துதல்.

இ. விவசாய ரீதியான உற்பத்திகளுக்கு ஈடு செய்யக் கூடிய விலைகளை உறுதிப்படுத்துதல்.

ஈ. இலங்கையிலும் வெளிநாடுகளிலும் போட்டி ரீதியான சந்தைகளுக்கான தடைகளற்ற தொடர்ச்சியான அணுகுதல்.

உ. பல்லினப் பொறிமுறை

ஊ. பயிர்ச் செய்கையின் சீரான பரம்பல் விரிவடையச் செய்தல்.

எ. தேர்வுகளில் சுழிவுகளை குறைத்தல்.


ஏ. சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.


ஐ. விவசாயத்துக்கான பல்லின முகாமைத்துவ தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.

(31ஆம் பக்கம் பார்க்க)

அடைவுகள்

| | 2005 | 2009 | 2010 |
|---|---|---|---|
| [illegible] மொத்தத் தேசிய உற்பத்தி [illegible] | 63 | 139 | 787 |
| [illegible] | 56 | [illegible] | 578 |
| [illegible] | N/A | N/A | 5.1 |
| [illegible] | 418 | 436 | |
| [illegible] | 4.5 | 3.2 | 1.5 |
| [illegible] | 0.50 | 0.56 | 0.51 |
| [illegible] மேலதிகம் | N/A | N/A | 72.2 |
| [illegible] | [illegible] | 48.2 | 100.0 |
| [illegible] | N/A | N/A | 3.0 |
| [illegible] | | | |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்கற்களை தெய்வங்களாக எண்ணி வழிபட்ட பண்டைய மக்கள்

## இன்னும் 4 மாதங்களில் உலகம் அழிந்துவிடுமாமே!

சென்ற இதழின் தொடர்ச்சி

தினமும் நம் பூமியின் மீது டன் கணக்கில் விண் கற்கள் வீழ்ந்து கொண்டிருக்கின்றன. எனினும் பெரும்பாலானவை பூமியின் வளி மண்டலத்திற்குள் நுழையும் போது அவை எரிந்து சாம்பலாகி விடுகின்றன. இரவு நேரங்களில் நீங்கள் வானத்தில் நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில் அவைகளில் ஒன்று பிரகாசமான வெளிச்சத்துடன் விழுவதை பார்த்திருப்பீர்கள். அவைதான் விண் கற்கள். அப்படி பார்ப்பதை கெட்ட சகுணமாக இந்தியர்கள் நினைக்கிறார்கள். ஆனால், ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் எரிநட்சத்திரம் ஒன்றைக் கண்டால் அதிஷ்டம் என்றும், மூன்று விழக் கண்டால் கெட்ட சகுணம் என்றும் கருதும் வழக்கம் உண்டு. பிலிப்பைன்ஸ் நாட்டில் விண்கல் விழுவதைக் கண்டவுடன் உடனே கைக் குட்டையை எடுத்து ஒரு காரியத்தை நினைத்து முடிச்சு போட்டுக் கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் நினைத்தது நடக்குமாம். அதுபோலவே ஜப்பான் நாட்டிலும் ஒரு வழக்கம் உண்டு. மேல் சட்டை பொத்தானை விண்கல் எரிந்து முடிவதற்குள் திறந்தால் நல்லது நடக்குமாம்! பூமியின்


எரிநட்சத்திரங்கள்

வளிமண்டலத்திற்குள் வந்து எரிந்து சாம்பலாகும் எரிகற்களை விண்கல், எரி நட்சத்திரம் என்று அழைக்கிறோம். ஆங்கிலத்தில் சாம்பலாகிப் போகும் கற்களை 'மீட்டியர்' என்றும் பாதி எரிந்த நிலையில் பூமியில் விழும் கற்களை 'மீட்டியரைட்' என்றும் அழைக்கிறார்கள். இந்த விண் கற்கள் பூமியின் மீது விழுவது போல மற்ற கிரகங்கள் மீதும் விழுந்து கொண்டுதான் இருக்கின்றன. சந்திரனின் மேற்புரத்தில் காணப்படும் பள்ளங்கள், சிறுகோள்கள், விண்கற்கள் தாக்கியதால் ஏற்பட்டவை. ஏனெனில் அங்கே வளி மண்டலம் கிடையாது.

விண்கற்களை மூன்று வகையாக பிரித்திருக்கிறார்கள். ஒன்று பூமியில் காணப்படும் எரிமலைப் பாறைகள் போன்றவை ஒரு வகை. மற்றது, பூமியின் நடுப் பகுதியில் உள்ள இரும்பு, நிக்கல் உலோகங்களால் ஆனவை. மூன்றாவது நம் பூமியில் காணப்படாத கனிமங்களால் ஆனவை. விண்கற்கள் பற்றிய அறிவியல் தேடல் 1492ம் ஆண்டு பிரான்ஸ்-ஜெர்மனி எல்லையில் என்ஸி ஷெயிம் (ENSISHIEM) எனுமிடத்தில் வீழ்ந்த 127கிலோ எடைக் கொண்ட விண் கல்லினால் ஆரம்பமானது. அந்தக் காலத்தில் அப் பகுதியை ஆண்ட மேக்ஸ்மில்லியன் என்ற ஜெர்மனிய அரசன் அந்த விண்கல்லை எடுத்து பாதுகாப்பாக வைத்திருக்கிறான். இன்றும் அந்த விண்கல் அங்குள்ள மியூசியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. 1794ல் ஜெர்மனிய ஆராய்ச்சியாளரான என்னய்ட் சால்டினி (ERNST Chaldini), விண் கற்கள் வானிலிருந்து விழுபவை என்று முதன் முதலாக ஆதாரத்துடன் ஒரு ஆய்வறிக்கையை வெளியிட்டார். விண் கற்கள் பூமியின் மீது விழும்போது ஏற்படும் ஒளிச்சிதறல்கள், அது வரும்போது ஏற்படும் பேரோசை, பூமியில் விழுந்ததும் ஏற்படும் அதிர்வுகளை நேரில் பார்த்த மக்கள் அது ஏதோ தெய்வ சக்தி என்று கருதி விண்கற்களை வழிப்படவும் செய்திருக்கிறார்கள். அமெரிக்க அரிசோனா மாநிலத்தில் வாழ்ந்த செவ்விந்தியர்கள் இப்படியான விண் கற்களை வழிப்பட்டு வந்திருக்கிறார்கள். உலகில் இரும்பிலான பொருட்கள் தோன்றுவதற்கு இந்த விண்கற்கள் தான் ஆதாரம் என்ற ஒரு கோட்பாடும் உள்ளது.

கி.மு.1400 காலப்பகுதியில் சுமேரியாவில் இரும்பு யுகம் தோன்றியது. இது நவீனத்துவத்தின் முக்கியமான வளர்ச்சியாக கருதப்படுகிறது. விண்கற்கலால் ஆயுதங்களை செய்ய முற்பட்ட சுமேரியர்களின் தற்செயலான கண்டுப்பிடிப்புதான் இந்த இரும்பு.


விண்கல்

1928ல் கண்டுபிடிக்கப்பட்ட கல்லறை போன்ற அமைப்பில் விண்கற்கள் பாதுகாக்கப்பட்டிருந்தன. இதுபோலவே கிளாக்காமஸ் செவ்விந்தியக்குடியினர் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் வீழ்ந்த 15 டன் எடை கொண்ட விண்கல்லைத் தொழுதனர்.


விண்கல் மோதலால் அரிசோனாவில் ஏற்பட்ட பெரும் பள்ளம்


உருகிய நிலையில் விண்கல்

ஆஸ்திரேலியப் பழங்குடியினரில் உள்ள மாந்த்ரீகர்கள் விண்கற்களைப் பிணி அகற்றவும், மழை உண்டாக்கவும், இன விருத்தி செய்யவும் மேற்கொள்ளும் சடங்குகளில் உபயோகிக்கின்றனர். கி.மு.14ம் நூற்றாண்டில் வாழ்ந்த எகிப்திய அரசன் டுட் அங்கமானின் பாடம் செய்யப்பட்ட உடல் வைக்கப்பட்டிருந்த கல்லறை 1922ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு அகழாய்வில் கிடைத்த கத்தி ஒன்று இரும்பு-நிக்கல் கலந்த கலவையான விண்கல்லிலிருந்து செய்யப்பட்டது. என்பது ஆய்வுகள் மூலம் தெரிய வந்தது. பண்டைய எகிப்திய குறிப்புகள் விண்கல்லை 'வானுலக உலோகம்' எனக் குறிப்பிடுகின்றன. கிரீன்லாந்தில் வாழும் எஸ்கிமோக்கள் விண்கல்லை உடைத்து ஈட்டி, அம்பு முனைகள் பலவற்றைச் செய்தனர் என்பதை கி.பி.1818ல் கண்டுபிடித்தனர்.

விண்கற்கள் வானிலிருந்து விழுந்ததால் கடவுளர் அவற்றைப் போட்டதாகவும், அவற்றிற்கு தெய்வீக சக்தி உள்ளதாகவும் நம்பிய கிரேக்கர்கள், ரோமர்கள் அவற்றைக் கோயில்களுக்குள் வைத்து ஆராதித்தனர். அவற்றைச் சுற்றிப் புராணங்களும் உருவாகின. குத்துக்கல் போன்று அல்லது ஆண்குறிபோல் தோற்றமளித்த விண்கற்கள் இனவிருத்தியின் அடையாளமாகப் போற்றப்பட்டன. கி.பி.200ல் பெஸினஸ் எனுமிடத்தில் இத்தகைய விண்கல் ஒன்று வழிபடப்பட்டது. அக்காலத்தில் ஹன்னிபால், கார்தேஜிலிருந்து வந்து அடிக்கடி போர் தொடுத்து ரோமப் பேரரசிற்குத் தொல்லை கொடுத்தான். அப்போது பெஸினஸில் உள் விண்கல் தெய்வத்தை ரோமுக்குக் கொண்டு வந்தால் தொல்லைகள் நீங்கி பாதுகாப்பு கிட்டும் என ஒருவன் ஆருடம் சொல்ல, ரோமத்தூதுவர் துருக்கி சென்று அங்கு ஆண்ட அட்டேலஸ் அரசனிடம் ரோம அரசின் வேண்டுகோளை முன்வைத்தார். முதலில் மறுத்த அவன் அப்போது ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மருண்டு விண்கல்லை ரோமுக்கு அனுப்பினான். டைபர் ஆற்றின் வழியாக கொண்டு வரப்பட்டு ரோமில் பேலடைன் என்ற குன்றின் மேலுள்ள கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த 'தெய்வம்' வந்த தைரியத்தில் ரோமானியர்கள் ஹன்னிபாலுடன் போரிட்டு கார்தேஜை மீட்டது வரலாறு.

எமோஸா நகரில் இருந்த அஸிரிய சூரியக் கடவுள் கோயிலின் கருவறையில் ஒரு விண்கல் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. கி.பி.218-222 காலகட்டத்தில் மார்கஸ் ஆவ்ரேலியஸ் அன்டோனியஸ் ரோமாபுரியை ஆண்டான். அந்த இளம் அரசன் அஸிரிய வம்சாவளியைச் சேர்ந்தவன். அவன் தன் பதினாறு வயதில் ரோமுக்கு வந்தபோது இரண்டு டன் எடை கொண்ட லிங்கம் போன்ற அமைப்புடைய விண்கல்லைக் கொண்டுவந்து, ரோமக் கடவுள் சிலைகளை அகற்றிவிட்டு, அக்கல்லை நட்டு சூரிய வழிபாடு துவங்கினான். தன்னையே தலைமைப் பூசாரியக நியமித்து தன் பெயரையும் சூரியக் கடவுளின் பெயரான 'எலகா பேலஸ்' என்ற பெயரைச் சூட்டி, அக்கல்லை வணங்கி சூரிய வழிபாடு செய்ய ரோமானியர்களை நிர்ப்பந்தித்தான். கொடுங்கோலாட்சி செய்த பதினெட்டே வயது அரசனான அவனை ரோமானியக் காவலர்கள் கொன்று அவன் உடலை வீதிகளில் இழுத்துச் சென்றபோது விண்ணிலிருந்து வந்த குத்துக்கல் அவனுக்கு உதவவில்லை. மார்கஸின் துர்மரணத்திற்குக் காரணியாகக் கருதப்பட்ட விண்கல் மறுபடியும் எமோஸாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது. பின்னர் அக்கோயிலைச் சூறையாடிய கிறித்துவப்படை அங்கு ஒரு தேவாலயத்தைக் கட்டியது. பல ஆண்டுகள் கழித்து வந்த இஸ்லாமியப்படை தேவாலயத்தைத் தகர்த்து மசூதியைக் கட்டியது. இடிபாடுகளுக்குக் கீழே கிடக்கிறது 'எலகா பேலஸ்'.

இந்த வரலாற்றைப் படிக்கும் போது, இந்த இரண்டாயிரமாம் ஆண்டிலும் நித்தியானந்தா போன்ற போலிச் சாமியார்களை பக்தர்கள் நம்பி வழிபடும்போது, விண்கற்களை அவர்கள் வழிபட்டதில் எந்த ஆச்சரியமும் இருக்க முடியாது என்றே எண்ணத் தோன்றுகிறது.

மணி ஸ்ரீகாந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி ஸ்ரீகாந்தன்




# மாடுகளுக்கான உலகின் முதலாவது சரணாலயம்



வேலூரில் அமைந்திருக்கும் இந்த அனாதை ஆசிரமத்தில் 400க்கும் மேற்பட்ட மாடுகள் உள்ளன.

பால் கறக்காத, ஒன்றுக்கும் உதவாத மாடுகளை இங்கே கொண்டு வந்து விட்டு விடலாம். சாகும் வரை பராமரிக்கிறார்கள்.

சமண மதத்தைச் சேர்ந்த ருக்ஜிராஜேஸ், இதற்காக பல இலட்சங்களை செலவு செய்கிறார். சமண மதம் கொல்லாமையை வலியுறுத்துகிறது.

ஐந்து ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கும் சரணாலயத்தில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் பணி புரிகிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட மற்றும் ஏழை எளியவர்களின் முன்னேற்றத்துக்காக தம் வாழ்வையே அர்பணித்த பல மகாத்மாக்களைப் பற்றி பல ஏடுகளில் நாம் படித்தும், கேட்டும் இருக்கிறோம். இன்றும் வலது கரம் கொடுப்பதை இடது கரம் அறியாத படி தொண்டு செய்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவ்வாறான மிகப் பெரிய மனிதர்களை பற்றிய நமது தேடலில் சிக்கியவர்தான், ருக்ஜி ராஜேஸ் இவர் ஒரு ராஜஸ்தான் காரர். இவர் பிறந்தது ராஜஸ்தான் என்றாலும் வளர்ந்தது தமிழகத்தில்தான். அதனால் தமிழில் சரளமாக பேசவும், வாசிக்கவும் ருக்ஜி ராஜேஸ்சால் முடிகிறது. தமிழகத்தில் வேலூரில் ஒரு தொழிலதிபராக இருக்கும் இவர் செய்து வரும் பணி இதுவரை நாம் கேள்விப்படாத ஒன்று. வீதியில் திரியும் கட்டாக்காலி மாடுகளுக்கும், வயது முதிர்ந்து ஒன்றுக்கும் உதவாது என்று ஒதுக்கப்படும் மாடுகளுக்கும், இறைச்சிக்காக அறுக்க கொண்டு செல்லப்படும் கால்நடைகளுக்கும் நேசக்கரம் நீட்டி வருகிறார் இவர். மாடுகளின் ஆயுட்காலம் முழுவதும் அவை நிம்மதியாக வாழ வேலூரில் பெரிய காப்பகம் ஒன்றை அமைத்து அதை வெற்றிகரமாக நடாத்தி வருகிறார் இவர்.

இந்த மாடுகளுக்கான அநாதை விடுதியை கடந்த எழுபது வருடங்களுக்கு மேலாக ருக்ஜி கன்யலால் நடத்தி வந்திருக்கிறார். அவருக்குப் பிறகு தந்தையின் வழியில் எந்த தடங்களும் இன்றி தொடர்கிறார் கன்யலாயின் மகன் ருக்ஜிராஜேஸ். உலகத்தில் வேறு எங்கும் இப்படி மாடுகளுக்கு என்று ஆசிரமங்கள் கிடையாதாம். சமண சமயத்தைச் சேர்ந்த இவர், ''நாங்கள் பகவான் மாகா வீரரின் பக்தர்கள். எனவே தான் அவரின் பெயரிலேயே இந்த கோமாதவிற்கான அநாதை ஆசிரமத்தை நடத்தி வருகின்றோம். வாய் பேசும் மனிதர்களுக்கு கஷ்டம் என்றால் அவர்களுக்கு சோறு போடவும், அவர்களை அரவணைக்கவும் உலகம் முழுவதும் பல அமைப்புகள் இயங்கி வருகின்றன. ஆனால் இந்த வாய்பேசா ஜீவன்களுக்கு யார் உணவு கொடுத்து அரவணைப்பது. என்பதை சிந்தித்த எனது தந்தையாரின் சிந்தையில் உதித்தது தான் இந்த ஆசிர்மம்" என்று பெருமைப்படுகிறார் ருக்ஜி ராஜேஸ். வேலூரின் வரலாற்று சிறப்பு மிக்க கோட்டைக்கு பின் பக்கத்தில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் விசாலமான அமைப்போடு மிகவும் நேர்த்தியாகவும், சுத்தமாகவும் அமைந்திருக்கிறது இந்த ஆசிர்மம். இந்த ஆசிரம கட்டடங்களைப் பார்த்தால் ஏதோ நம்மூர் கோயில்களைப் போலத் தோற்றம் அளிக்கின்றன. ஒவ்வொரு மாட்டுத் தொட்டில்களுக்கும் லவ்குஷ் இல்லம், கிருஸ்ணா இல்லம், காமதேனு இல்லம், மஹா லக்ஷ்மி இல்லம், கௌாரி இல்லம், கங்கா இல்லம், காவேரி இல்லம் என்று அழகுப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். மாட்டுத் தொட்டில்களுக்கு அழகு வண்ணங்கள் பூசப்பட்டு மிகவும் பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டுள்ளது. மாடுகளை பராமரிக்க, இருபதுக்கும் மேற்பட்ட வேலையாட்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இப்போது இந்த ஆசிரமத்தில் 400க்கு மேற்பட்ட மாடுகள் உள்ளன. வயது முதிர்ந்து போன மாடுகளை என்ன செய்வது என்று தெரியாது திண்டாடுபவர்கள் இந்த ஆசிரமத்திற்கு தமது மாடுகளை கொடுத்து விட்டு செல்கிறார்களாம். அப்படியான மாடுகளை பராமரித்து அவை இறந்துப் போனால் புதைத்து விடுகிறாாகள். இப்படி வரும் மாடுகளில் பால் கரக்கும் பசுக்களில் இருந்து பெறப்படும் பசும்பாலை அநாதை ஆசிரமங்களுக்கு, கோயில்களுக்கும் தானமாக வழங்குகிறார்கள். மாட்டு சானத்தை வரட்டி தட்டி வைத்து விறகுக்கு பயன்படுத்துகிறார்கள். மாடுகளுக்கு கோரைப்புற் கட்டுகளை வெளியிலிருந்து லொரிகளில் கொண்டு வந்து இறக்கிறார்கள், இது தவிர அகத்திக்கீரையும் மாடுகளுக்கு உணவாக வழங்கப்படுகிறது.

இந்த ஸ்ரீ ஜெயின் கோசல இல்லம் ஆரம்பத்தில் எனது தந்தையாரால் இரண்டு மாடுகளுடன்தான் தொடங்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லும் ருக்ஜிராஜேஸ், ஒரு சம்பவத்தையும் எம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நாள் நான் ஆம்பூருக்கு காரில் சென்றுக் கொண்டிருந்தேன். அப்போது விருஞ்சிப்புரத்திற்கு அருகில் மாடுகள் நிறைந்த ஒரு லொறி சென்று கொண்டிருந்தது. லொறி நிறைய மாடுகள் நின்ற நிலையில் 'ம்மா...' என்று கதறிக் கொண்டு சென்ற மாடுகளின் கதறல் என் காதுகளில் விழுந்த போது அது என் நெஞ்சை பிறாண்டுவது போல உணர்ந்தேன். நிச்சயம் அந்த மாடுகள் இறைச்சிக் கடைக்குத்தான் கொண்டு செல்லப்படுகிறது என்பதை என் உள்ளுணர்வுகள் எனக்குக் கூற, எனது கார் அந்த லொரியை பின் தொடர்ந்து சென்று மறித்தது. காரில் இருந்தவர்களிடம் பேசியதில் அந்த மாடுகள் இறைச்சிக் கடைக்கு கொண்டு செல்லப்படுவதை அறிந்தேன். அந்த லொறியில் மொத்தம் பத்தொன்பது மாடுகள் இருந்தன. அவர்களிடம் அந்த மாடுகளை விலைக்குக் கேட்டேன். நீண்ட இழுப்பறிக்குப் பிறகு 90 ஆயிரத்திற்கு பேரம் முடிந்தது. பிறகு என்னிடம் இருந்த 90 ஆயிரத்தை கொடுத்து அந்த லொறியை விருஞ்சிப் புரத்திலிருந்து வேலூருக்கு திருப்பினேன். இன்று அந்த மாடுகள் இந்த ஆசிரமத்தில் ஆரோக்கியமாக உயிர் வாழ்கின்றன" என்று கூறி அந்த அப்பாவி உயிர்களை காப்பற்றிய சம்பவத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டார். மாடுகளுக்கான அநாதை ஆசிரமங்களோடு மகளிர் பாடசாலை, பகவான் மகாவீரர் அறக்கட்டளை, வேலூர் பழைய பஸ்தரிப்பு நிலையத்தில் இயங்கிவரும் குடிநீர்த் திட்டம் உள்ளிட்டவைகளையும் ராஜேஸ் திறம்பட நடத்தி வருகிறார். மனிதர்களையே மதிக்காத இந்த உலகத்தில் மாடுகளை உயர்வாக மதித்து அவற்றுக்கு வசதியான வாழ்வைத் தந்திருக்கும் இந்த மனிதரின் நல்ல மனம் நம்மில் எந்தினை பேரிடம் இருக்கிறது? மாடுகளைக் காப்பாற்ற வேண்டாம்; அப்பாவி மனிதர்களைக் காப்பாற்றி கரை சேருங்களேன்!

## வாடா மலர்



கூர்ந்து பார்த்தால் ஒருவரை மட்டும் சுலபமாக அடையாளம் கண்டு கொள்வீர்கள். இது ஒரு அரிய புகைப்படம். ஏனெனில் மூவருமே இந்தியாவின் ever green heroமாார்கள் தான். அதாவது வாடா மலர்கள். முதலில் காணப்படுபவர் என்.டி.ராமராவ். கிருஷ்ண பரமாத்மாவாகத் தோன்றி நடித்தவர். ஆந்திராவின் முதலமைச்சரானவர். நடுவில் இருப்பவர் பழம்பெரும் ஹிந்தி நடிகர் திலீப்குமார். அடுத்தவர் தமிழர் உள்ளம் கொள்ளை கொண்ட முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர்.



## குருவும் சிஷ்யனும்

இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடேங்கப்பா...!

## அன்றும் இன்றும்

மணி ஸ்ரீகாந்தன்





நூறு வருடங்களுக்கு முன்னர் காலிமுகத்திடல் இப்படித்தான் இருந்தது. இடது பக்கமாகக் காணப்படும் கட்டடம் சமுத்ரா ஹோட்டல். இப்போதும் தாஜ்சமுத்ரா ஹோட்டலின் ஒரு அங்கமாக இந்தக் கட்டடம் பராமரிக்கப்படுகிறது. அப்போது வளைந்து சென்ற பாதை இப்போது தாஜ்சமுத்ரா அருகே நீண்டு செல்கிறது. கோல்பேஸ் ஹோட்டல் அப்படியே தூரத்தில்.

**மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்**




*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

மாத்தறை பக்கத்தில் ஒரு கிராமம். அதுதான் 'அமரே' 'தயா' ஆகியோர் வசித்த கிராமம். அமரே என்றால் அமரசிரி, தயா என்றால் தயாரட்ன. இருவருமே மாங்காய் நண்பர்கள். பாடசாலையிலும் பக்கத்து பக்கத்து சீட். நாள் தவறாமல் பாடசாலைக்கு சென்றாலும் இருவருக்குமே படிப்பு... சுட்டுப் போட்டாலும் வராது. ஆனால், இருவருக்கும் துடிப்பு, எக்ககச்சக்கமாக இருந்தது.

'அமரே' 'தயா' இருவருக்கும் இருப்பிடம் வெவ்வேறாக இருந்தபோதும் இருக்குமிடம் எப்போதுமே ஒரே இடமாகத்தான் இருந்தது.

இருவரும் ஊரில் உள்ள வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருப்பார்கள். அல்லது ஊருக்கு வெளியே உள்ள காட்டில் அணில் மற்றும் குருவிகளை உண்டி வில்லினால் அடித்து வீழ்த்துவார்கள். மாந்தோப்பில் திருட்டு மாங்காய் அடித்துக் கொண்டிருப்பார்கள். இல்லையென்றால் ஊருக்கு அடுத்துள்ள ஆற்றில் நீந்திக் குளிப்பத, அல்லது சைக்கிளில் அடுத்தடுத்த ஊர்களுக்கு பயணம் செல்வது என்று எதையாவது செய்து கொண்டிருப்பார்கள்.

எப்போதுமே இவர்கள் இரட்டையர்களாகவே திரிவதால் ஊர் மக்கள் அமரே இருந்தால் கருவும் அங்கே இருக்கத் தான் வேண்டும் என்பார்கள்.

இருவர் வீட்டிலும் துவிச்சக்கர வண்டிகள் (சாதாரண சைக்கிள்கள்) ஒன்றுக்கு இரண்டு மூன்று கிடந்தன. இருவர் வீட்டிலுமே இந்த சைக்கிள்களை பிரிப்பதும் பூட்டுவதும், துடைப்பதுமாக பரபரப்பு காட்டுவார்கள். இதனால் இந்த சைக்கிள் சூத்திரமெல்லாம் இருவருக்கும் அத்துப்படி.

இருவருக்கும் கல்வியில் நாட்டம் இல்லாததால் க.பொ.த சாதாரணத்தில் இருவரும் ஒவ்வொரு பாடத்தில் தான் சாதாரண சித்தியடைந்தார்கள். அத்தோடு பாடசாலைக்கு முற்றுப் புள்ளி. ஆனால் இவர்களுக்கு சைக்கிள் பழுது பார்க்கும் திறமை இருந்ததால் அடுத்த ஊரில் இருந்த சைக்கிள் கடையில் இருவருக்கும் வேலை கிடைத்தது.

பாடசாலையில் இருந்து விலகியதும் வெவ்வேறு வழிகளில் செல்ல நேரிடும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த அமரேவுக்கும் தயாவுக்கும் ஒரே கடையில் அதுவும் இருவருக்குமே விருப்பமான துறையில் வேலை கிடைத்ததால் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

அந்தக் கடையில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் திருத்தும் வேலையில் 10 வருட அனுபவத்தை பெற்றுக் கொண்ட இருவரும் கிட்டிய நகரத்தில் இருந்த மோட்டார் கார் திருத்தும் நிலையத்தில் சேர்ந்தனர். அங்கும் அவர்களது நல்ல அனுபவம் கிடைத்தது.

அதனையடுத்து தலைநகரில் பாலத்துறை பகுதியில் இருந்த கராஜ் ஒன்றில் இருவருக்கும் வேலை கிடைத்தது.

பல இடங்களிலும் திருடப்படும் மோட்டார் வாகனங்கள் பாலத்துறையில் இருந்த இந்த கராஜுக்கு வருவதுண்டு. அரை மணி நேரத்தில் குறிப்பிட்ட வாகனத்தை அக்குவேறு ஆணிவேறாக பிரித்து விடுவதில் அமரேயும் தயாவும் கைதேர்ந்தவர்கள். அவ்வாறு வாகனங்களை அங்கு கொண்டு வருபவர்கள் அடுத்த ஒரு மணிநேரத்தில் அதற்கு பதிலாக அதே போன்ற வேறு வாகனங்களை வெளியே கொண்டு செல்ல முடியும்.

அந்த கராஜை நடத்தி வந்தவர் ஒரு பணக்காரர். மேற்படி சட்ட விரோத நடவடிக்கையினால் அவருக்கு பெருமளவு பணம் கிடைத்தது. அதனால் அவர் தனது சிஷ்யப் பிள்ளைகளான அமரே, தயா ஆகியோரை நன்றாகக் கவனித்தார்.

அந்த கராஜின் மேல் மாடியில் அமரே, தயா ஆகியோருக்கு தனியறை ஒதுக்கப்பட்டிருந்தது. அருகில் இருந்த ஹோட்டலில் இருந்து அனைத்து உணவு வகைகளையும் கொண்டு வர ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். இரவு நேரம் உல்லாசமாக பொழுதை கழிக்க தேவையான பான 'வகைகள்' இருவருக்கும் தாராளமாக கிடைக்க கராஜ் சொந்தக்காரர் ஏற்பாடு செய்திருந்தார்.

எத்தனை வசதிகள் இருந்தாலும் வாரத்துக்கு ஒரு முறையாவது வெளியில் சென்று கொஞ்சம் மது அருந்தி விட்டு சினிமா பார்த்து ரவுண்டு அடித்து வருவது அமரே தயா இருவருக்குமே அவசியமாக இருந்தது.

அன்றும் அதே போல்தான். ஞாயிற்றுக்கிழமை என்பதால் கராஜ் வேலையும் பெரிதாக இருக்கவில்லை. மாலையில் உல்லாசத்துக்காக வெளியே சென்ற இருவரும் மூக்கு முட்டக் குடித்தார்கள். இரவு மணி 10.30 ஆகியபோது பார்கீப்பர் 11 மணிக்கு பாரை மூடப்போவதாக சொன்னபோதுதான் இருவருக்கும் கராஜுக்கு போக வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. கடைசி ரவுண்டு என்று சொல்லிக் கொண்டே மேலும் இரண்டு ரவுண்டுகளை நிறைவு செய்த பின் அங்கிருந்து கிளம்பினார்கள்.

ஆட்டோவில் போவோம் என்ற அமரேயின் தீர்மானத்துக்கு எதிர் தீர்மானம் கொண்டு வந்தான் தயா. 'ஆண்டவன் கொடுத்த கால் இருக்கும் போது ஆட்டோ எதுக்கு? நடந்தே போவோம்' என்ற தயாவின் தீர்மானத்துக்கு மாறினான் அமரே.

சுற்றுப் பாதையில் போகமுடியாது. ரயில் பாதை வழியே குறுக்குப் பாதையில் தான் போகவேண்டும் என்ற அமரேயின் தீர்மானத்துக்கு சரியென்று தலையாட்டினான் தயா.

இருவரும் பைலா பாட்டுக்களை பாடியவாறே ரயில் பாதையில் நடந்தனர். கீழே இருந்த சாலை வெறிச்சோடிக் கிடந்ததைப் போலவே ரயில் பாதையில் எந்த ஆள் அரவமோ ரயில் நடமாட்டமோ இருக்கவில்லை.

'போர்த்துகீசிகாரயா,
ரடவல் அள்ளன்ன
சூரயா' என்று பழைய பைலா பாடல் பாடியவாறு இருவரும் ரயில் பாதையில் நடந்தனர். கொஞ்ச தூரம் சென்றதும் ரயில் பாதை களனி கங்கைக்கு மேலாக சென்றது.

''அடே தயா, ரயில் பாதை ஆற்றுக்கு மேலாக செல்கிறது, கவனமாக நடக்க வேண்டும்'' என்று அமரே எச்சரிக்கை செய்ததையடுத்து இருவருமே மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தனர். மீண்டும் பழைய பைலா பாடலை இருவரும் இசைக்கத் தொடங்கினர்.

போர்த்துக்கீசி காரயா...
திடுதிப்பென்று....

பின்னால் இருந்து ஒரு ரயில் எந்த சத்தமும் இல்லாமல் இருவரையும் கடந்து சென்றது.

களனி ஆற்றங்கரையை தொட்டுக் கொண்டு இருந்தது சுமனேயின் வீடு. சுமனேவுக்கு நேற்றுத்தான் திருமணம் நடந்தது. ஊரில் திருமணம் நடந்ததையடுத்து இன்று காலை தான் கல்யாண வீட்டார் கொழும்பு திரும்பியிருந்தனர். புது மணமக்களுக்கு தேனிலவுக்காக வீட்டை ஒதுக்கி கொடுத்து விட்டு சுமனேவின் வீட்டார் அன்று உறவினர் வீடுகளிலேயே தங்கிவிட்டனர்.

சுமணேவுக்கு ராணிக்கும் அன்றுதான் முதல் இரவு. முதல் இரவு என்றாலும் சிறிய ஓட்டு வீட்டில் அலங்காரம் எதுவும் இருக்கவில்லை. சுமனேயின் மீன் பிடித்தொழில் அவ்வாறான அலங்காரத்துக்கு இடம் கொடுக்கவில்லை. என்பதே உண்மை.

சுமனேவும் ராணியும் இரண்டு வருடங்களுக்கு மேல் காதலித்தனர். ஆனால் இப்போதுதான் கரம் பிடிக்க முடிந்திருக்கிறது. பொருளாதார பற்றாக்குறைதான் இதற்கு காரணம். இருவருமே சிறுகச் சிறுக சேர்த்து இப்போதுதான் கல்யாணம் வரை வந்திருக்கிறது. இன்று இருவருக்கும் முதல் இரவு. இன்று அந்த இரு இதயங்களிலும் இன்ப இரவு.

ராணி அறைக்குள் நுழைந்தாள். அறையில் அவருக்காகவே காத்திருந்தான் சுமனே. சுமனே முதலில் பேசினான். ராணி கேட்டுக் கொண்டிருந்தாள்.

சில நிமிடங்களின் பின்
ராணி பேசினாள் சுமனே கேட்டுக்கொண்டிருந்தான்.
பத்து நிமிடங்களின் பின்
இருவரில் ஒருவருமே பேசவில்லை
தடால் என்று ஓட்டுக் கூரையை உடைத்துக்கொண்டு
உள்ளே
சுமனவின் கட்டில் மேல்
உயிரற்ற சடலமாக விழுந்தான் தயா.

போதையில் சென்றதால் ரயில் வந்தது கேட்கவில்லை. தயாவை இடித்துத் தள்ளிய ரயில் அமரேயை பிடித்து கீழே ஆற்றுக்குள் தள்ளிவிட்டது.

அமரேவுக்கு பலத்த அடி இல்லை. தூக்கி வாரி தண்ணீருக்குள் வீசியது மட்டும்தான்.


கரைப்பகுதியிலேயே விழுந்ததால் தட்டுத்தடுமாறி கரை சேர்ந்த அமரே தயாவை தேடினான்.

தயாவின் மரணம் ரயில் மோதியதில் ஏற்பட்ட விபத்து மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

ஏ. மதுரை வீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவங்கள்



செங்கை ஆழியான்



இந்த முறை சுப்பிரமணியத்தாற்றை தோட்டம் நல்லா இருக்குது. ஒவ்வொரு பொயிலைக் கன்றும் மதமதத்து வளர்ந்திருக்குது. சும்மா சொல்லக் கூடாது கண் பட்டிடும். ஒவ்வொரு இலையும் ஒவ்வொரு வாழையிலை மாதிரிக் கிடக்குது. பக்குவமாக மருந்தடிச்சு வளர்ந்திருக்கிறார்.

'இம்முறை ஒரு பொயிலைக் கன்றுக்கு முந்நூறு கேட்டிருக்காம். சுப்பிரமணியம் அதுக்கும் விக்க மாட்டாராம். தீன் பொயிலையாக்கி விக்கப் போறாராம். அதுக்காக அந்தாள் வீட்டுப் பொயிலைப் போறணையைக் கூட துப்பரவாக்கு கிறாராம்.' பலர் பேசிக் கொண்டார்கள்.

"கொட்டில் கூரை ஓலைகளைக் கழற்றி ஒரு பக்கமாக அடுக்கி வையுங்கள். அடுத்த முறை தோட்டத்துக்கு தாக்க வேண்டும்..."

போறணை வட்ட வடிவமானது. ஐந்தடி உயரமான சுவர்களையும் கிழக்குப் பக்கத்தில் ஓராள் உள் நுழையக் கூடிய வாசலையும் கொண்டது. கூரை தட்டையாக மண்ணால் தடிபரப்பி பிளாற் பண்ணப்பட்டிருந்தது. அறுவடை செய்யப்பட்ட புகையிலையைத் தொங்கவிடுவதற்காகக் கூரை யோடு அரை அடி இடைவெளியில் நல்ல பலமான நேரான காட்டுத் தடிகள் பொருத்தப்பட்டிருந்தன. அன்று முழுவதும் போறணை பூசி மெழுகப் பட்டது. வெடிப்புகள் அடைத்து செப்பமிடப்பட்டன. கூரை வேய்ந்து போறணை பூசி மெழுகப்பட்டதன் பின்னர் அதனைப் பார்க்கப் புது மணப்பெண் போல காணப்பட்டது. அறுவடை முடிந்த கன்றுகளை உலர்த்துவதற்காக அவற்றை வெயில் போட வேண்டும். அதற்கான கொடி-களை வீட்டுப் பனைகளை இணைத்துக் கட்டுவதற்காக மட்டக்களப்பு தடக் கயிறுகள் வாங்கியிருந்தார். புகையிலைப் போறணையில் முதலில் வெயிலில் உலர்த்திய புகையிலைகளைத் தொங்கவிட்டு புகையூட்டுவதற்காக இரண்டு லோட் தென்னம்பொச்சு மட்டைகளைப் பறித்து வைத்திருந்தார். இவ்வளவு முன்னேற் பாடுகளை அவர் செய்திருந்தார்.

"நாளைக்கு வெள்ளனவே வந்திடுங்கோ. வெயில் ஏறுவதற்கு முன்னர் வெட்டிவிட்டு உலரவிடவேண்டும்."

"ஒரு தரத்தில் உங்கள் பொயிலை போறணையில் கொள்ளுமே அண்ணை."

"இரண்டு முறை வேணும். அதற்கேற்ப வெட்டுவம். மாணிக்கம், மழை வரு முன்னர் வெட்ட வேணும். இம்மாதக் கடைக்கூற்றில நல்ல தொரு மழையை எதிர்பார்க்கலாம். மழைபெய்தால் இலைகளில இருக்கிற பாணி கழுவப் பட்டு விடும். பிறகு அந்தப் பொயிலைக்கு மதிப் பில்லை. கண்டியோ... பேரைக் காப்பாற்ற வேணும். தீன் பொயிலைக்கு தாவடியில சுப்பிர மணியத்தை ஒருவனடிக்கக் கூடாது."

"இப்படி பொறணை கட்டி மினக்கெடுகிற திலும் கன்றாக வித்து எப்பவோ பயன் எடுத்திருக்கலாம். கேட்க மாட்டன் என்றிட்டியள். அவனவன் தான் செய்யிற தொழிலோட நிக்க வேணும். அங்கால போகக் கூடாது. நாங்கள் பொயிலை செய்யிறமே? என்னட்ட மூன்று போறணை இருக்குது. நான் செய்யிறன் என்றிட்டியல்."

"குறை எண்ணாதை பொன்னு... என்ர குமரைக் கரை சேர்க்கக் கொஞ்ச காசு தேவை..."

"சும்மா காசு காசெண்டடு சாகாதை. மூத்த மகன் கனடாவில் ஒரு கொம்பனியில அசிட்டன் மனேச்சர்.. மாதாமாதம் டொலராக அனுப்புறான்.. நீ பாங்கில சேகரிக்கிறாய். பிறகு குமரைக் கரைசேர்க்க சீதனமில்லை என்கிறாய்.. உவன் முத்துராசா வலிய உன் மோளை தனது மகனுக்கு கலியாணம் செய்யக் கேட்டு வந்தவனாமே.. நீ மறுத்திட்டியாம்.."

"மறுக்காமல் என்ன செய்யிறது.. அவற்றை துணிச்சலைப் பார்... நாங்க செம்பு தண்ணி தூக்காத இடம்.. அங்க செய்வமே? காதலிச்சின மெண்டதுக்காக சாதி பார்க்கிறதில்லையே? துணிச்சலாக வந்து பெண் கேக்கிறார். கனடாவிற்கு அவரின்ர மோன் போனபோது என்ரை மூத்தமகன் பார்க்கிற கம்பனியில சேர்க்க கேட்டவர். மகன் உத்தியோகம் பார்க்கிறதுக்கு உதவவில்லையாம் அந்தக் கோபமும்..."

"இந்தக் காத்தல சாதியும் சம்பிரதாயமும்... வெளிநாட்டுக்குப் போனவை எத்தனைபேர் இப்ப சாதி பார்த்தவை? ஆயுதப் போராட்டம் அரசியல் வெற்றி தரவில்லை. சமூகப் புரட்சி செய்திருக்குது. சமுகத்தில ஆர் சாதி பேசுகினம்? அழிஞ்ச போறதில் அந்த சாதி ஆக்களுக்கே இப்ப கவலை... படிப்பு வசதி... தொழில் மாற்றம்... பண உயர்வு அனைத்தையும் மாற்றிவிட்டது.. முன்னர் போல அடிமை குடிமைத் தொழில் இல்லை.. இப்ப எங்களை ஆளுறது யார்? அவயள் தானே? எங்க பகுதி இயக்கப் பொறுப்பாளன் ஆர்? நம் ஊரில சலூன் வைத்திருக்கிற தம்பிஜயாவின் மகன்... வடக்குக் கிழக்கு டம்மி அரசாங்க அதிபர் சின்னப்பா மாஸ்ரர் யார்? உத்தியோகத்தர்மாரின் இடமாற்ற தலை விதியை அந்தாள் நிர்ணயிக்கவில்லையா? பிரதம செயளாளரிலிருந்து அரசாங்க அதிபர் வரை கைட்டி நிக்கவில்லையா? மன்னார் பாடசாலையில் சாதாரண வாத்தியாக இருந்தபோது எங்கட ஆக்கள் அந்தாளுக்கு செய்தவற்றை நினைத்துப் பழி வாங்கிறார். தன்னிலும் உயர் சாதி எண்டால் அந்ததாளுக்குப் பிடிக்காது. நீ இப்பவும் சாதி பாக்கிறாய் இனிச் சாதி பார்த்தால் முத்துராசா உன் வீட்டில் செம்பு எடுக்க மாட்டான் கண்டியோ?"

"நீ இப்ப என்ன சொல்கிறாய்?"

"பின்ன என்னத்தை சொல்கிறது... உன்ரை மோன் கனடாவில் வேலை பார்க்கிற கம்பனி என்ன?"

"கொற்றன் கெயர் கம்பனி லிமிட்டெட்... அதுக்கு என்ன?"

"அதுக்கு என்னவோ? கொற்றன் கெயர் கம்பனி எண்டால் என்ன தெரியுமோ? அது ஒரு நவீன லோண்ரி! பெரிய பெரிய மிசின்கள் வைத்திருக்கினம்... அதில வேற ஹோட்டல் துணிகளை சலவை செய்து கொடுப்பினம். உன்ரை வீட்டில முன்னர் துணிகளை சலவை செய்த சிவகுருவின்ர மகன்மார் தான் வைச்சிருக்கினமாம்.... அதில தான் உன்ர மகன் வேலை"

"அப்ப...?"

"அப்ப என்ன? உன்ர மகனின்ர உழைப்பைப் பார்த்திட்டு தங்கட தங்கச்சியை உன்ர மோனுக்குக் கலியாணம் கட்டி வைச்சிட்டினம். இதுகளைத் தெரியாமல் நீ பேசுறாய்... நீ சாதி பேசிக் கொண்டு பொயிலைப் போறணையை தயார் படுத்து... நல்லா யோசி... செய்யிற பொயிலையை போறணையில போட்டு தீன் பொயிலை ஆக்கினால் வருமானம் கூட வரும்தான்... புகை போட்ட பிறகு கேக்கிறன்... கந்தையாவின்ரை, கனகசபையின்ர முத்துராசாவின்ர தோட்டமெல்லாம் வாங்கி இருக்கிறியள் தானே? எதை வாங்கினாலும் உன்ரை பொயிலை சைஸ்ஸை அடிக்காது... செய்யிற உன்ரை கை அப்படி!"

பொன்னுத்துரை பேச்சு எடுபடவில்லை. ஏமாற்றத்தோடு திரும்பினார். அவர் போன கையோடு முத்துராசா வந்தான். முத்துராசாவுக்கு அவர் மீது இருந்த மனஸ்தாபம் குறையவில்லை.

"கடைசியாக கேட்க வந்திருக்கிறன்"

"என்னை யோசிக்க விடு... முத்துராசா..."

கனடாவில் இருந்த மகன் கலியாணத்திற்கு அவரின் சம்மதம் கேட்டு கடிதம் எழுதியிருந்தான். வேலை பார்க்கின்ற கம்பனியின் முதலாளியின் தங்கை என்று மட்டும் எழுதியிருந்தான். சொந்தமாக வீடும் காரும் முதலாளி வாங்கி அளித்திருப்பதாக வேறு எழுதியிருந்தான். அவனுக்கும் வயது வந்துவிட்டது. அவர் ஒப்புக்கொண்டார்.

அக்காலத்தில் அவனை ஒத்த இளைஞர்களை யாழ்ப்பாணத்தில் வைத்துக் காப்பாற்றுவது கடினமாகவிருந்தது. ஒரு பக்கம் தாமாக இயக்கத்தில் சேர்ந்தனர். மறுபக்கம் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டனர். இன்னொருபக்கம் இலங்கை இராணுவம் சந்தேகத்தின் பெயரில் கைது செய்து சிறையிலிட்டது. இவற்றிலிருந்து தப்புவதற்காக இளைஞர்களைப் பெற்றோர் அகதிக-ளாக இந்த மண்ணைவிட்டு கண் காணாத இடங்களுக்கு அனுப்பி வைப்பதில் கவனமாக இருந்தனர். ஒரு நாள் சுப்பிரமணியத்தின் மகன் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு திரும்பி வரும் போது வெள்ளை வானில் வந்த சிலர் பிடித்துச் சென்றனர். சுப்பிரமணியம் போராளிகளின் முகாம் முகாமாக ஏறி இறங்கினார். மகனின் கடிதமொன்று போகம்பரைச் சிறைச்சாலையிலிருந்து கிடைக்கும்வரை இராணுவம் தான் மகனைப் பிடித்துச் சென்றதென்பது தெரியவில்லை.

"நாளை மறுநாள் அனுராதபுரம் நீதிமன்றில் விடுகிறார்கள். ஆயத்தமாக வரவும்" ஆயத்தமாகத் தான்போனார் பணத்தோடு. கவனிக்க வேண்டியவர்களைக் கவனித்து மகனை விடுவித்து வந்தார். இனித் தொடர்ந்து இங்கு வைத்திருப்பதில் பயனில்லை. என்று வெளிநாடு அனுப்பத் தீர்மானித்தார்.

மகளுக்காக வங்கியில் சேகரித்து வைத்திருந்த பணத்தையும் தாவடித் தோட்டத்தை ஈடு வைத்த பணத்தையும் சேர்த்து இருபது லட்சத்தை ஒரு ஏசண்டிடம் நம்பிக் கட்டினார். அதன் பின்னர் அவன் கனடா போய் சேர்ந்தது தனிக் கதை. மூன்று வருடங்களின் பின்னர் கனடாவில் இருப்பதற்கான விசா கிடைத்தது. அவன் வேலை செய்கின்ற கம்பனி குறித்தும் அவன் திருமணம் குறித்தும் பொன்னுத்துரையர் இப்போது அவர் தலையில் குண்டாகப் போட்டுவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் எவ்வளவு கௌரவமாக அவர்கள் வாழ்ந்தார்கள்! அத்தைக்காரி ஒருத்தி தன் எண்ணப்படி தன்னிலும் குறைவான பகுதியில் கலியாணம் கட்டியதற்காக அவர் அப்பு தன் சபை சந்தியில் கடைசிவரை ஏற்கவில்லை. இன்று அவர் மகன்? அதுவும் கட்டாடி சிவகுருவின் மகளை...! முத்துராசாவின் மகனுக்கும் தன் மகளுக்கும் காதல் தொடர்பு இருப்பதை அறிந்து அவர் எப்படித் துடித்துப் போனார்! அவருடைய அத்தைக்காரி கலியாணம் செய்த முத்துராசா பகுதி, சபை சந்தியில் அடுக்காத பகுதியாகக் கருதப்பட்டது.

இனி என்ன செய்வது?

யோசனையில் ஆழ்ந்தார். இரவு முழுவதும் அவரால் உறங்க முடியவில்லை. முடிவு செய்துவிட்டார். அதிகாலை எழுந்ததும் முதலில் முத்துராசாவைக் காணவேண்டும். அதன் பின்னர் புகையிலைப் போறணை அலுவலைக் கவனிக்கவேண்டும். முத்துராசா கூடமாட வேலை செய்வார்....







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலியில் நாடகம் நடந்த காலம்

1950 ஆம் ஆண்டுக் காலப்பகுதி அது. மின்சாரம் காலடி எடுத்து வைக்காத அந்தக் குக்கிராமத்திலே, அங்குள்ள கடையொன்றில் பிள்ளையார், லட்சுமி படங்களின் கீழ் மிகப் பணிவாகத் தொங்கிய ஒரு பலகையில், ஒரு கறுத்த சதுரப் பெட்டி மிடுக்கோடு உட்கார்ந்திருந்தது. அது ஒரு வானொலிப் பெட்டி. அந்த வழியால் பாடசாலைக்குப் போய் வந்து கொண்டிருந்த மாணவர்கள், அதிலிருந்து ஒலிக்கும் இலங்கை வானொலியின் இசையும் கதையும் கேட்பதற்காக வகுப்பு நேரத்தை தவறவிட்டு, ஆசிரியரிடம் பிரப்பம் பழங்களை (பிரம்படி) அடிக்கடி வாங்கிச் சுவைத்தனர். அப்போது ஒருநாள், அந்த வானொலிப் பெட்டி ரா.பி.சேதுப்பிள்ளை, உ.வே.சாமிநாத, அ.ச.ஞானசம்பந்தன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை முதலிய அறிஞர்களின் குரல்களில் உரத்துப் பேசத் தொடங்கிவிட்டது. சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்விழா யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியில் நடந்து கொண்டிருந்தது. அதன் நேரடி அஞ்சல்தான் வானொலியில் இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

கிராமத்து மாணவர்களாகிய எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. எனினும் இவ்விழாவையும், தமிழக அறிஞர்களையும் காண்பதற்காக பரமேஸ்வரக் கல்லூரியை நோக்கி சைக்கிள்களில் பறந்தோம். வானொலியின் இலக்கியப் பணியை நினைக்கின்ற போது, இந்த இனிய நினைவுதான் என் மனதில் எழுகின்றது" என்று சொல்கிறார் மூத்த எழுத்தாளரான (அமரர்) நா.சோமகாந்தன்.

"ஈழத்து இலக்கியம்: பல்துறை நோக்கு" என்ற இவரது நூலில் 'இலக்கியத்துக்கு வானொலியின் பங்களிப்பு' என்ற கட்டுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். இதே கட்டுரையின் இன்னொரு பகுதியில் "ஐம்பதுகளில் சானா என்ற சண்முகநாதன் வானொலியில் நாடகத் தயாரிப்பாளராகக் கடமையாற்றிய போது பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'உடையார் மிடுக்கு' நாடகம், இலங்கையர்கோனின் 'விதானையார் வீட்டில்' 'மண்டன் கந்தையா', 'கொழும்பில் கந்தையா' போன்ற புகழ் பெற்ற தொடர்நாடகங்கள் ஒலிபரப்பாகின. நேயர்களை விழுந்து விழுந்து சிரிக்கவும் சிந்திக்கவும் செய்த நாடகங்கள் அவை. கா.சிவத்தம்பி, சில்லையூர் செல்வராசன், விஜயாள் பீட்டர், பிலோமினா சொலமன், செ.சிவஞானசுந்தரம் முதலியோர் சிறந்த வானொலி நடிகர்களாகப் பரிணமித்தனர்" என்று வானொலி நாடகத்துறையின் ஆரம்பகால நிகழ்வை நினைவுபடுத்துகிறார்.

"தேசிய சேவையில் மட்டுமின்றி, வர்த்தகசேவை மூலமாகக் கூட அவ்வப்போது நல்ல தொடர் நாடகங்கள் இடம்பெற்று வந்துள்ளன. அ.ந.கந்தசாமியின் 'மனக்கண்', சில்லையூர் செல்வராசனின் 'தணியாத தாகம்', இளங்கீரனின் 'அவனுக்கு ஒரு வேலை வேண்டும்' மற்றும் காவலூர் ராசதுரை, தெளிவத்தை ஜோசப் ஆகியோரின் நாடகங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவையாகும்". என்றும் சொல்கிறார் நா.சோமகாந்தன்.

இந்த வகையில் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் எழுபதுகளில் ஒலிபரப்பாகிய நேயர்களது பேரபிமானத்தைப் பெற்ற தொடர் நாடகமொன்று பற்றி நினைவலையில் மீட்டிக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

வர்த்தக சேவையில் பெண்களுக்காக ஒலிபரப்பாகி வந்த 'பூவும் பொட்டும்-மங்கையர் மஞ்சரி' நிகழ்ச்சியில் 1974 டிசெம்பர் மாதம் முதல் 1975 நவம்பர் மாதம் வரை தொடர்ச்சியாக 52 வாரங்கள் 'நெஞ்சில் நிறைந்தவள்' என்ற தொடர் நாடகமொன்று இடம்பெற்று வந்தது. பிரபல நாடக எழுத்தாளர் சி.சண்முகம் இதனை எழுதியிருந்தார்.

இவரது மனைவியும், பூவும் பொட்டும் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவருமான இராஜேஸ்வரி சண்முகம் இந்த தொடர் நாடகத்தில் கதாநாயகியாகவும், ஜோர்ஜ் சந்திரசேகரன் கதாநாயகனாகவும் நடித்திருந்தார்கள். நாடகத்தின் நெறியாள்கைப் பொறுப்பையும் ஜோர்ஜ் சந்திரசேகரனே மேற்கொண்டு வந்தார். இதில் ஒரு குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், முழுக்கமுழுக்க பெண்களுக்காகவே ஒலிபரப்பாகிவந்த 'பூவும் பொட்டும்' நிகழ்ச்சியிலேயே இந்த தொடர் நாடகம் இடம்பெற்று வந்த போதிலும், இதனை மிகவும் ஆர்வத்துடன் ஏராளமான இலங்கை, இந்திய ஆண் நேயர்களும் கேட்டு வந்திருக்கிறார்கள் என்பதை அந்நாளில் அவர்கள் எழுதியனுப்பிய கடிதங்களிலிருந்து அறியக்கூடியதாக இருந்தது.

வானொலியில் இடம்பெற்று வந்த இந்த தொடர் நாடகம் 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதியன்றும், 27ஆம் திகதியன்று பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மேடை நாடகமாகவும் இடம்பெற்றிருந்ததையும் சிறப்பாகச் சொல்லலாம்.

- அ.கனகசூரியர்

# சுவர்ணாவில் அப்பச்சி

'அப்பச்சி' தொலைக்காட்சித் தொடர் தற்போது ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8.30 மணிக்கு சுவர்ணவாஹினியில் ஒளிபரப்பாகிறது. 50 அங்கங்களைக் கொண்ட இந்த தொலைக்காட்சித் தொடரில் ஜாக்சன் அந்தனி, சாந்தனி செனவிரட்ன லோஷன் புஷ்பசிங்க, அநுல பத்திரண, பத்மினி திவிதுருகம பிரியாரணசிங்க, காமினி பெர்னாண்டோ ஓமானி திலகரத்ன ஆகியோர் நடித்துள்ளனர்.

'அப்பச்சி' தொடரில் தனது குழந்தைகளை சிறந்த பண்புள்ளவர்களாக வளர்க்க ஒரு தந்தை எப்படியெப்படியெல்லாம் சிரமப்படுகிறார் என்பதை விளக்குவதாக கதை அமைந்துள்ளது.

வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கொண்டது. இதனை சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு கூறி வளர்த்தால் சமூகத்தில் உள்ள அசாதாரண நிலைமைகளுக்கு அவர்கள் எளிதில் முகம் கொடுக்கலாம் என்பதை 'அப்பச்சி' விளக்குகிறது.



# கலைஞரின் முரசு டி.வி

முற்றிலும் பழைய பாடல்களுக்காக ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பை முரசு டி.வி. என்று புதிய சேனல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த முரசு டி.வி, கலைஞர் டி.வி ஆரம்பித்துள்ள புதிய சேனல் ஆகும். கலைஞர் கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 3ஆம் திகதி இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது.

குடும்ப சண்டைகளால் தோன்றிய கலைஞர் டி.வி, சன் டி.வியில் ஒளிபரப்பாகும் சேவைகளுக்கு போட்டியாக இருந்து வருகிறது. எனினும் பழைய பாடல்களுக்காக தனி சேவை சன் டி.வியில் இதுவரை இல்லாத ஒன்று.

தற்போதைய முதியவர்களில் நிறையப் பேர் பழைய பாடல் விரும்பிகள். அத்துடன் இப்போதைய இளைஞர் யுவதிகளில் சிலரும் பழைய மற்றும் பொற்கால பாடல்களை விரும்பிக் கேட்பவர்கள். இவர்களுக்கு இந்த புதிய முரசு டி.வி ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

பழைய பாடல்களுடன் மட்டும் நின்றுவிடாது தினமும் இரவு ஏழு மணிக்கு பல அரிய பழைய படங்கள் முரசு டி.வியில் ஒளிபரப்பாகின்றன.

முரசு டி.விக்கு போட்டியாக சன் டிவி பழைய பாடல்களுக்கான தொலைக்காட்சி சேவையொன்றை ஆரம்பிக்க கூடும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

அது சரி, அம்மா டி.வி. மட்டும் ஏன் இன்னும் களமிறங்காமல் ஓரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது?

வாசகர்கள் வானொலி, டீவி நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்களை இப்பக்கத்தில் பகிர்ந்து கொள்ளலாம்

வானவில் வானலை,
வண்ண வானவில்,
த.பெ. இல: 1218,
கொழும்பு.
vannavaanavil@gmail.com



தத்துவப் பித்தன்

## கிரேஸ் உடலில் புகுந்த...

(04ஆம் பக்கத் தொடர்)

அவனை வழியனுப்பும் போது, அடுத்த மாதம் கட்டாயம் வந்து போங்கள் என இருவரும் கூறி விடைகொடுத்தனர். அவன் போன பின் அவளைச் சூழ்ந்த தனிமையை விரட்ட அவன் அவள் நினைவுகளில் அவ்வப்போது வந்து போவான்.

மீண்டும் டேவிட் வந்தான். வீடு கலகலப்பானது. இம்முறை ஒரு வாரம் வரை தங்கியிருந்தான். துணி உலர்த்துவது, தோட்டம் கொத்துவது, சில்லறை வேலைகளை செய்து கொடுப்பது என கிரேசுக்கு உதவினான். ஷேர்ட்டைக் கழற்றி விட்டு வியர்க்க விறுவிறுக்க வேலை செய்வான். அவள் கடக்கட தேனீர் போட்டுத் தருவாள்.

அதன் பின் அடிக்கடி வருவான். அந்தனியின் மிக்க உற்ற துணையாளான். வேலை வெட்டியில்லாத அவனுக்கு தோட்டத்தில் ஏதேனும் பயிற்சி வேலை போட்டுக்கொடுப்படி அவள் தன் கணவனிடம் சிபாரிசும் செய்திருந்தாள்.

நாட்கள் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லையே!

ஒருநாள் இரவு இரண்டரை மணியிருக்கும். கணவனை எழுப்பி, குளிராக இருக்கிறது என்று சொன்னாள் கிரேஸ். போர்த்திவிட்டு அவர் திரும்பிப் படுத்தபோது கூரையில் ஏதோ சத்தம் கேட்கிறது என்றாள். பூனையா, கோட்டானோ போகிறதா இருக்கும் என்று அவர் சமாதானம் சொன்னார்.

அவள் 'ம்' என்றாள் அது அவருக்கு வித்தியாசமான குரலாக இருந்தது. கரகரப்பான ஆண்குரல் அவர் அதை பொருட்படுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறைய வைக்கும் உண்மைக் கதை

# கடவுளே! இப்படி எல்லாம் ஏன்தான் நடக்கிறதோ?

ராம்ஜி

கண் நிறைந்த கணவன் ... பேறும் ... ஆரோக்கியமான நோய் நொடியற்ற வாழ்க்கை. இரண்டு ... [illegible]

மேலே இருப்பதைத் தான் சொல்லித்தான் தமிழ்ப் பெண்கள் ... கடவுள்களை வணங்கி வரம் கேட்பார்கள். சில சமயம் ... கிடைக்கின்றன. சிலருக்கு கிடைப்பதில்லை.

ஏனெனில் இத்தனை பீடிகை என்கிறீர்களா? சரி நேராகவே விடயத்துக்கு வந்து விடுகிறேன்.

எனக்கு நன்கு தெரிந்த ஒருவருக்கு தெரிந்த பெண் அவள். பெயர் கௌரி. வயது 20களின் நடுப் பகுதியில். களையான முகம். பார்ப்பதற்கு அழகாக இருப்பாள். ... கல்வி கேள்விகளிலும் நல்ல திறமை இருந்தது. ... ஆசிரியராக இருந்தாள்.

பெண்ணுக்கு கல்யாண வயதாகிவிட்டதால், திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றுதான் ... பெற்றோர் விரும்புகின்றனர். மேலே படி, திருமணத்துக்கு அவசரம் ... போகட்டும் என்று கூறுவது ... சில பெற்றோர் தான்.

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானவில் மருத்துவம்

பதில் தருபவர் :
**எஸ். எப். எல். அக்பர்,** *MBBS (Cey) MS (Cey)*
*MRCOG (UK)* மகப்பேற்று மருத்துவம், பெண் நோய் மருத்துவம்

**நான் கர்ப்பமாக இருக்கிறேன். எனினும் உடனடியாக வெளிநாடு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் உண்மையாகவே நான் கர்ப்பமாகத்தான் இருக்கிறேனா என்பதை பரிசோதனை செய்து பார்க்காமல் கருக்கலைப்பு செய்யத் தீர்மானித்தேன். எனக்கு கருக் கலைப்பு செய்தார்கள். இதன் பின் எனக்கு மாதவிடாய் ஏற்பட்டது. பின்னர் வெளிநாடு சென்று மூன்று வருடங்களின் பின் நாடு திரும்பினேன். இப்போது என் பிரச்சினை என்னவென்றால் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் நான் கர்ப்பமாவதில்லை என்பதுதான். எல்லாம் வெளியேறிவிடுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக நாங்கள் முயற்சி செய்து வருகிறோம்.**

**பெயர் குறிப்பிட விரும்பாதவர்**
**களுத்துறை**

# கருப்பை அகற்றப்பட்ட பின்னரும் கருத்தரித்தல் சாத்தியமா?

பதில்: வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்சிகளின் பேரில் அவசர அவசரமாக உங்களைப் போலவே பல பெண்கள் கருக் கலைப்பு செய்து கொள்கிறார்கள். கொழும்பு, காலி, கண்டி, மாத்தறை போன்ற பகுதிகளில் இவ்வாறான 'ஏஜென்சி கருக்கலைப்புகள்' நடைபெறுகின்றன. பணத்தையே குறிக்கோளாகக் கொண்டும் உங்களைப் போன்ற பெண்கள் சுகாதார வசதியற்ற, பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்ற, கிருமித் தொற்றுக்கு ஆளாக்கக்கூடிய ஆபத்தான கருக்கலைப்பைச் செய்து கொள்கிறார்கள். இக் கருக்கலைப்புகள் சட்ட விரோதமானவை. அரச ஆஸ்பத்திரிகளில் கருக்கலைப்பு செய்வதில்லை. அனைத்து கருக்கலைப்பும் சட்டவிரோதமாகவே செய்யப்படுகின்றன. திருட்டுத்தனமாக இக்கருக்கலைப்பு செய்யப்படும்போது, கருக்கலைப்புக்கான சரியான வழிமுறைகள் பின்பற்றப்படுவதுமில்லை. சரியான உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதுமில்லை. உள்ளே இருக்கும் கரு சுரண்டப்பட்டு வெளியேற்றப்படுகிறது. இதனால் அதிக இரத்தப் பெருக்கு, இனப்பெருக்கத் தொகுதியில் கிருமித்தொற்று, நிரந்தர மலட்டுத்தன்மை, சில சமயம் மரணம் என்பன அபாயங்களை அப்பெண் எதிர் கொள்ள நேர்கிறது. இத்தகைய பெண்களுக்கு பின்னர் குழந்தை பாக்கியம் கிடைக்காமல் போய்விடுகிறது. சில சமயங்களில் இக் கருக்கலைப்பு காரணமாக கிருமித்தொற்று ஏற்பட்டு ஃபெலோப்பியன் குழாய் என அழைக்கப்படும் சூலக குழாயின் அடைப்பு ஏற்பட்டிருக்கலாம். இது விரிவாக ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒரு விடயம். இப்போதாவது உங்களுக்கு வெளிநாட்டு வேலையை விட முக்கியம் குழந்தை பாக்கியமே என்பது புரிந்திருக்கும். பணமும் தொழிலும் எப்போது வேண்டுமானாலும் தேடிக் கொள்ளலாம். ஆனால் உடல் ஒன்றை செய்ய மறுத்துவிட்டால் மறுத்து விட்டதேதான் என்பது இப்போது புரிகிறதா? சில வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள், தமக்கு கிடைத்திருக்கும் 'ஜொப்' கோட்டாவை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக கருவுற்றிருக்கும் பெண்களை கருவைக் கலைத்துவிடும்படி தூண்டி விடுகின்றன என்றும் தெரிய வந்துள்ளது. இவ்வாறான சட்டவிரோதமான கருக்கலைப்புகளுக்கு கணவன்மாரும் அறியாமையால் உறுதுணையாக இருக்கின்றனர். உங்கள் பிரச்சினை, இதைப் படிக்கும் ஏனைய பெண்களுக்கும் படிப்பினையாக இருக்கட்டும். கருச்சிதைவு என்பது 15 முதல் 20 சதவீதமானவர்களுக்கு இயற்கையாகவே நிகழ்ந்து விடுகின்றது. கரு அசாதாரணமாக இருந்தால் அக்கரு இயற்கையாகவே சிதைந்து வெளியேறி விடுகிறது. இவர்களுக்கே வைத்தியசாலைகளில் வயிறு கழுவுகிறார்கள். கருவின் துண்டுகள் வெளியேறிய பின்னர் சிறு துணிக்கைகள் கருப்பையில் தங்கி விடுவதுண்டு. இவற்றையும் அகற்றி கருப்பையை சுத்தமாக்கி விடுவதையே சாதாரண வழக்கில் 'வயிறு கழுவுதல்' என அழைக்கிறார்கள். இவ்வாறான இயற்கையான கருச்சிதைவு, கர்ப்ப முற்று முதல் மூன்று மாதங்களுக்குள் நிகழ்ந்துவிடும். 'அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்' பரிசோதனையின் மூலம் சிறு துணிக்கைகள் உள்ளனவா என்பதை மருத்துவர்கள் அறிந்து இந்த வயிறு கழுவுதலை மேற்கொள்கிறார்கள். இவ்வாறு வயிறு கழுவிய பின்னர் ஃபோலிக் அசிட் எனப்படும் கனியுப்பை தொடர்ந்து பாவித்து வர வேண்டும். மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் கருத்தரிக்க முயற்சிக்க வேண்டும். முதல் மாதவிடாய் வந்த பின்னர் கருத்தரிக்க முயற்சி செய்தால் கருத்தரித்த சரியான திகதியை கணக்கிட ஏதுவாக இருக்கும். பெரும்பாலும் வயிறு கழுவிய பின்னர் கருத்தரிக்கும் வாய்ப்பு அதிகம்.

நீங்கள் ஒரு பெண் நோய் மருத்துவரை அணுகி எல்லா பரிசோதனைகளையும் மேற்கொண்டு என்ன குறைபாடு என்பதை முதலில் அறிந்துகொண்டு சிகிச்சை செய்யுங்கள்.

**அறுவை சிகிச்சையின் மூலம் கருப்பை கட்டியும் கருப்பையும் அகற்றப்பட்ட பின்னர் அப் பெண்ணால் கருத்தரிக்க முடியுமா? இவ்வாறான ஒரு பெண்ணுக்கு கர்ப்பமான பின்னர் ஏற்படக் கூடிய மாற்றங்கள் தெரியவே ஒரு மருத்துவரிடம் உண்மையைச் சொல்லி ஆலோசனை கேட்டிருக்கிறார். அந்த மருத்துவர் சாத்தியம் என்று சொல்லி, கருத்தடை சாதனங்களை உபயோகிக்கும்படி ஆலோசனை கூறியிருக்கிறார். இது எப்படி சாத்தியமாகும்?**

**கே.எஸ்.ஏ., அட்டாளைச்சேனை**

பதில்: அப்பெண்ணுக்கு நடைபெற்ற கட்டி அகற்றும் அறுவை சிகிச்சையின் போது கட்டி மட்டும் அகற்றப்பட்டதா அல்லது முழு கருப்பையும் அகற்றப் பட்டதா என்பதை முதலில் நிச்சயம் செய்ய வேண்டும். கட்டி மட்டும் அகற்றப் பட்டிருந்தால் கருத்தரிப்பது சாத்தியமே. கருப்பை அகற்றப்பட்டிருந்தால் கருத்தரிக்கும் சாத்தியமே இல்லை.


சூலகத்தில் இருந்து புறப்பட்டு வரும் முதிர்ச்சி அடைந்த ஒரு பெண் கருமுட்டை ஃபெலோப்பியன் குழாய் வழியாக வரும்போது ஆண்விந்தை சந்திக்கிறது. விந்தணு கரு முட்டையினுள் சென்றதும் சினைகட்ட ஆரம்பிக்கிறது. சினைகொண்ட இம் முட்டை மெதுவாக நகர்ந்து கருப்பையை அடைந்து அதன் உட்சுவரில் தன்னை இருத்திக் கொள்கிறது. பின்னர் கரு வளர்ந்து சிசுவாக மாறி பிரசவம் நடைபெறுகிறது. சில சமயம் முட்டை கருப்பையை வந்தடையாமல் ஃபெலோப்பியன் குழாயிலேயே தங்கிவிடுவதுண்டு. தொடர்ந்து கரு இங்கே வளரும்போது மூன்று மாத காலத்தில் குருதிப் பெருக்கு ஏற்படும். தாய் உயிராபத்தை சந்திக்கும் சந்தர்ப்பமும் ஏற்படும். நீங்கள் கூறுவதுபோல உங்கள் நண்பிக்கு கருப்பை அகற்றப்பட்டிருந்தால் ஃபெலோப்பியன் குழாய் மூடப்பட்டுவிடும். எனவே கரு முட்டை ஆண் விந்தணுவைச் சந்திப்பதற்கான வாய்ப்பே கிடையாது. இனி எப்படி கருக்கட்டல் நிகழமுடியும்? மேலும் கருப்பையை அகற்றும்போது வைத்தியர்கள் சில சமயம் சூலகங்களையும் அகற்றிவிடுவதுண்டு. எனவே கருப்பை அகற்றப்பட்ட பின்னர் ஒரு பெண் கருத்தரிப்பதற்கான வாய்ப்பே கிடையாது. கருப்பை அகற்றப்பட்ட ஒரு பெண் தாம்பத்திய உறவின் போது குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களையும் பாவிக்க வேண்டும் என்று அந்த மருத்துவர் கூறிய ஆலோசனை தவறானது. இது அந்த மருத்துவரின் திறமை பற்றி பலத்த சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது. கரு முட்டையும் ஆண் விந்தணுவும் ஒன்றை ஒன்று சந்திப்பதற்கான வாய்ப்பே இல்லை எனும்போது குடும்பக்கட்டுப்பாட்டு சாதனங்கள் எதற்கு?

கருப்பை அகற்றப்பட்ட பெண்களுக்கு சில சமயம் அடிவயிறு நோவு, வாந்தி உணர்வு, குமட்டல் போன்றவை ஏற்படலாம். சிறுநீர் தொகுதி நுண்ணுயிர்த் தாக்கம் போன்ற வருத்தங்கள் உண்டாகலாம். இவ்வாறான அறிகுறிகள் ஏற்படும்போது தான் கருவுற்றிருப்பதாக சில பெண்கள் தவறாக முடிவு செய்து கொண்டு மனதை அலட்டிக்கொள்கிறார்கள்.

கர்ப்பம் தொடர்பான நோய்கள், மருத்துவம், பெண் நோய்கள் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர் **எஸ். எப். எல். அக்பர்** பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். [illegible]

வானவில் மருத்துவம்,
த.பெ. எண். 1218
கொழும்பு.
e-mail: vannevaanavil@gmail.com

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 21



**இடமிருந்து வலம்**

1. ஐந்து பாவங்கள் (8)
6. பத்திரிகையின் குரல் (6)
10. நேரத்துக்கு ஏற்றவாறு நடந்து கொள்வது (5)
11. செட்டு (2)
13. பருவம் (3)
14. இது இருந்தால் எதிலும் வரையலாம் (3)
15. அம்பு (3)
16. பெண் சிசுக்களை கொல்ல இதன் பாலை பாவிப்பார்கள் (3)
17. கண்ணகியின் காலணியால் மதுரையே அழிந்தது (4)
19. பூஜையை இது வைத்துத்தான் ஆரம்பிப்பார்கள் (4)
21. குளிர் தாங்கும் (4)
24. காதில் மாட்டுவது (4)
25. தலையணை தேய்க்கலாம் (3)
26. தொட்டியில் போடுவது (3)
27. நதுவிச்சை பழத்தை ஆங்கிலத்தில் இப்படி சொல்வார்கள் (2)

**மேலிருந்து கீழ்**

2. யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் (6)
3. வித்தியாசம் (4)
4. காலின் அடிப்பாகம் (4)
5. புதுமைப்பெண்களில் முதன் திரையணி (6)
6. வஞ்சகம் (3)
7. மாத இறுதியில் கிடைக்கும் (5)
9. திருமணம் (5)
10. உயிர் உள்ள வரை நடக்கும் (4)
12. ஜொலியாக பொழுதை போக்குபவர் (3)
14. தினமும் நடக்கும் (4)
15. இரு நீர் பகுதிகளை இணைப்பது (3)
16. ராமாயணத்தை இயற்றிய ஒருவர் (4)
17. மனைவி (4)
18. சோற்றில் வைத்து சாப்பிடலாம் (5)
19. இது பால் குடிக்கும் (4)
20. உடைந்த சிரமான நிலை (4)
21. கை (3)
22. அழகிய சிறந்தவன் (22)
23. காய்ச்சல் வந்தால் விழுங்க வேண்டும் (3)
24. உறக்க கின்னத்தை ஆங்கிலத்தில் இப்படி குறிப்பிடலாம் (2)

சரியான விடைகளை எழுதி 25. 08. 2012க்கு முன்

குறுக்கெழுத்துப் போட்டி - 21
வண்ண வானவில்
த.பெ. இலக்கம் 1218
கொழும்பு

என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதுபவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 20க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 30ஆம் பக்கத்தில்....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# மகரந்த காய்ச்சலால் மூக்கு சிந்தும் லண்டன் வாசிகள்

இங்கு லண்டனில் எங்களது வீட்டில் இருந்து பிறைட்டன் கடற்கரைக்கு போக காரில் ஒன்றரை மணிநேரம் பிடிக்கும். சொன்னால் நம்பமாட்டீர்கள் கடந்த வாரம் முழுக்க 26க்கு மேல் தான் வெயில் அடிக்கிறது. இலங்கையில், சென்னையில் இருப்பது போல இருக்கிறது காலநிலை இங்கே.

ஒரு பக்கம் சந்தோஷமாகவும் மறுபக்கம் கவலையாகவும் இருக்கிறது. சந்தோஷம் வெயில். கவலை, வேலை. வேலைப் பளுவுக்கு முன்னால் எங்கும் தூரப்பயணம் போக முடியாமல் இருக்கிறது. பக்கிங்ஹம் அரண்மனைக்கு முன்னால் உள்ள துலிப் மரங்கள் பூத்துக் குலுங்குவதை பத்தரை மைல் தூரத்தில் இருந்தும் தொலைக்காட்சியில் தான் பார்க்கிறோம். போய்ப் பார்க்க வேண்டும். நேரம் கிடைக்குது இல்லை. வெயில் வந்தாலே இங்கு லண்டனில் உள்ள அரைவாசிப் பேருக்கு 'ஹே பீவர்' என்கின்ற மகரந்த காச்சல் பிடித்து விடுகிறது.

எதிர் வருகின்ற 20 வருடத்துக்குள் 30 மில்லியன் பிரித்தானியருக்கு மகரந்தக் காச்சல் பிடித்து ஆட்டப்போகிறது என்று வைத்தியசாலை சொல்கிறது. லண்டன் காரருக்கு பெரும் சாபம் தான் இது. குளிருக்காக ஆறுமாதம் வீட்டுக்குள் முடங்கிப் போய் இருக்கின்ற ஆட்கள் இனிமேல் வெயில் அடித்தாலும் வெளியில் போக முடியாது. மூக்கு ஒழுகிக் கொண்டே இருக்கும் நோய் இது. எந்த விதமான சுகத்தையும் அனுபவிக்க முடியாதவர்களாக 30 மில்லியன் மக்கள் இருக்கப் போகிறார்கள். குறிப்பாக செக்ஸ்.

இந்த ஹே.்.பீவர் வந்தால் மூக்கு அரிப்பு, தும்மல், நாசியில் பிராண்டல் எல்லாம் இருக்கும். வெளியில் போக முடியாது. இளவேனில் கால பூக்களின் மகரந்த துகள்கள் காற்றில் கலந்து மகரந்த சேர்க்கை நடத்தும் காலத்தில் மனிதர்கள் அதனை சுவாசிக்கும் பொழுது வருகின்ற ஒவ்வாமை தான் இது.

இந்த ஒவ்வாமைக்கு மருந்து கிடையாது. ஆனால் மூலிகை மருந்து இருக்கிறது என்று அஞ்சலா ஜெகநாதன் போன்ற மூலிகை மருந்துவர்கள் சொல்கிறார்கள்.உடனடி மருந்துகளை பெரிய பெரிய விளம்பரங்களை போட்டு விற்கிறார்கள். ஆனாலும் மூக்கு ஒழுகியபடி திரிகிற வெள்ளைக்காரரையும் எங்கடை சனங்களையும் பார்க்க பரிதாபமாக இருக்கும். மூக்கு பிடிக்கிற பேப்பருக்கே ரிவியில் விளம்பரம் போடுகிறார்கள். லண்டனிலும் பேர்மிங்ஹாமிலும் 45 வீதமானவர்களுக்கு ஹே.்.பீவர் பிரச்சனை இருக்கிறதாம். அது இல்லாத மனிதர்களுள் நானும் ஒருவன்.

கடற்கரையில் இந்த மகரந்த தொல்லை குறைவாக காணப்படுகிறது ஏனெனில் கடல் காற்று அதனை அள்ளிக் கொண்டு போய் எங்காவது தள்ளிவிடுகிறது. பூவின் மகரந்த மணிகளை மக்களின் கண்ணுக்கு தெரியாத எதிரி என்று டெலிகிரா.்.ப் பத்திரிகை எழுதுகிறது. மகரந்தம் தொடர்பான ஒரு படத்தைப் போட்டு இப்படி எழுதியிருக்கிறார்கள்.

தொடர்ச்சியான நோய் இது. கண்ணெரிதல், மூக்கு அரிப்பு, மூக்கில் இருந்து நீர் வடிதல் என்று இருப்பதனால் அதிகமான மக்களுக்கு மன அழுத்தம் வருகிறது.மற்றவர்களை நெருங்கி கதைக்க முடியாது. ஒரே தும்மல். இவ்வாறான பிரச்சனைகள் மூலமாக மன அழுத்தத்தினால் அதிகமானவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அது மன நோய்வரை இழுத்து செல்வதாக சொல்கிறார்கள், வைத்திய நிபுணர்கள்.

இப்பொழுது 83 மில்லியன் பவுணுக்கு வருடா வருடம் குளிசை, மூக்கு ஸ்பிறே, கண் சொட்டுமருந்து என்று விற்பனையாகின்றன. இந்த ஹே.்.பீவர் வந்தால் போகாது. தொடர்ந்து வருடா வருடம் தொந்தரவு பண்ணிக் கொண்டே இருக்கும்.

வெயில் காலத்தில் கடற்கரைக்குத் தான் மக்கள் அள்ளுப்படுவார்கள். பாடசாலை விடுமுறை நாட்களில் கார் காராக கடற்கரைப்பக்கம் தான் ஒதுங்குவார்கள், வெள்ளைக்காரரும் மற்றவர்களும். பிரிட்டனைச்சுற்றி கடற்கரைதான். லண்டனில் உள்ள எங்களைப் போன்றவர்கள் குறைந்தது ஒன்றரை மணி நேரம் கார் ஓடிப்போக வேண்டும். இங்கே பிரிட்டனில் உள்ள முக்கியமான கடற்கரை நகரமான பிறைட்டன் தான் இப்பொழுது பத்திரிகைகளின் தலைப்பு செய்தியாக இருக்கிறது.

விசயம் இது தான். ஒரு லெஸ்பியன் ஜோடி பிறைட்டனில் உள்ள கடற்கரை ஹோட்டல் ஒன்றில் டபிள் ரூம் ஒன்று புக் பண்ணிய பொழுது அதனை ஹோட்டல் நிர்வாகம் நிராகரித்திருக்கிறது. இது ஒரு பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

இங்கு பிரிட்டனில் ஆண் தன்பால் சேர்க்கையாளர்களுக்கும் பெண் தன்பால் சேர்க்கையாளர்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்று சட்டமே இருக்கிறது.எப்படி ஆண் பெண் ஜோடிகளுக்கு உள்ள உரிமையோ அப்படித்தான் பெண் பெண், ஆண் ஆண் ஜோடிகளுக்கும் உள்ள உரிமை. அதே போலத்தான் திருநங்கை, திருநம்பி போன்றவர்களுக்குமான உரிமை. தனி மனித உரிமையில் தலையிடவோ, அல்லது குறுக்கிடவோ அல்லது நிராகரிக்கவோ இங்கு யாருக்கும் உரிமை இல்லை.

அப்படி இருக்க பிறைட்டன் பேன்ஸ்விக் ஸ்கொயார் ஹோட்டல், றெபேக்கா, நாஸ் என்ற லெஸ்பியன் ஜோடியை தங்கள் ஹோட்டலுக்கு வரவேண்டாம் என்று சொன்னது அல்லது அறை கொடுக்காமல் விட்டது இப்பொழுது நீதிமன்றத்தின் படியேறி இருக்கிறது.

ஹோட்டல்கள் இப்படி சொல்வதோ செய்வதோ இங்கு பிரிட்டனில் சட்டப்படி குற்றம். ஹோட்டல், தங்கும் விடுதிகள் குடும்பத்தை மட்டும் அல்லது ஆண் பெண் ஜோடியை மட்டுமே உள்ளே விடுவோம் என்று சட்டம் போட முடியாது. அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

பிரிட்டனில் 20 ஆம் நூற்றாண்டில் ஒருபால் சேர்க்கையாளர்களுக்கான அங்கீகாரம் படிப்படியாக வளர்ந்து கொண்டே போனது. இப்பொழுது அவர்களுக்கான உரிமைகள் அதிகம். பிரிட்டனில் மட்டும் 36 லட்சம் ஒருபால் சேர்க்கையாளர்கள் இருக்கிறார்கள். யு.கே.யின் சனத்தொகையில் 6 வீதமானவர்கள் ஒருபால் சேர்க்கையாளர்கள். ஆரம்ப காலத்தில் ஒரு வித முகச்சுளிப்பு இருந்தது இங்கே. கத்தோலிக்க தேவாலயங்களும் இவர்களை ஆரம்பத்தில் கண்டித்தன. ஆனால் அவர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க தேவாலயங்களின் வாய்களும் மௌனித்துவிட்டன.

இவர்கள் இங்கு ஜோடி சேர்ந்து குடும்பமாக வாழ்கிறார்கள். தனி வீடெடுத்து ஜோடியாக இருவரும் வேலைக்கு போய் வந்து சாதாரண வாழ்க்கை வாழ சகல சட்ட அங்கீகாரமும் அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் பிள்ளைகளை தத்து எடுத்து வளர்க்கிறார்கள்.ஆண்கள் இரண்டு பேர் சேர்ந்து வாழும் வாழ்க்கையில் தத்து எடுத்து வளர்க்கின்ற பிள்ளைகள் இரண்டு பேரையும் அப்பா என்று தான் கூப்பிடுகிறார்கள். அதே போல பெண்கள் இரண்டு பேர் சேர்ந்து வாழும் பொழுது தத்து எடுத்து வளர்க்கின்ற பிள்ளைகள் இருவரையும் அம்மா என்று தான் அழைக்கிறார்கள்.

இங்கு தான் பெரும் பிரச்சனையை இத்தகையோரின் பிள்ளைகள் எதிர்நோக்குகின்றனர். பாடசாலைகளில் அந்தப் பிள்ளைகளுக்கு அம்மா அல்லது அப்பா இல்லாத குறையினால் அவர்கள் மற்ற பிள்ளைகளால் கேலி பண்ணப்படுகிறார்கள். எனவே இந்த வளர்ப்பு பிள்ளைகள் வளரும் பொழுது மன உளைச்சலுக்கு உள்ளாகி சமூகத்தால் ஒதுக்கப்படும் பொழுது அவர்கள் கிரிமினல்களாக வளருவதற்கான வாய்ப்பு அதிகம் என உளவியலாளர்கள் சொல்கிறார்கள்.

இங்கு பாடசாலைகளிலும் செக்ஸ் கல்வியின் போது சுயபால் சேர்க்கை தொடர்பான பாலியல் கல்வியும் படிப்பிக்கிறார்கள். 8ம் வகுப்பில் இருந்தே செக்ஸ் கல்வி கற்பிக்கப்படுகிறது.

ஆனால் என்ன பிரச்சனை என்றால் பொது இடங்களில் பாதைகளில், பஸ், ரயில்களில், பூங்காக்களில் ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் காதல் செய்யும் பொழுது அல்லது முத்தமிடும் பொழுது பகிரங்க இடங்களில் இருக்கின்ற ஏனையோருக்கு அக்காட்சி அந்தரமாக இருக்கிறது. இப்பொழுது லண்டனில் இதனை பார்த்து பார்த்து பழகிவிட்டது. இதே சமயம் இவர்களைக் குறிவைத்து இங்கு ஜி.ரி மகஸின் போன்ற பல சஞ்சிகைகள் மற்றும் அவர்களுக்கான தொலைக்காட்சிகளும் வந்துவிட்டன.

ஒவ்வொரு வசந்த காலத்திலும் பெரும் எடுப்பிலான ஊர்வலங்களும் களியாட்ட நிகழ்வுகளும் இங்கு நடைபெறும். இவர்களும் கூட உரிமைகள் வேண்டிய ஊர்வலங்களை நடத்துகிறார்கள். முன்னாள் லண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டன், நடிகர் ஸ்டீபன் ்.பிறை ஆகியோர் இந்த வரையறைக்குள் வருகிறார்கள். ஒளிபரப்பாளர் கிரஹம் நோட்டன், டேல் வின்டன், பேல் ஓ கிரேடி, என்று மிகவும் பிரபலமான 12 சுயபால்காரர்கள் ஒளிபரப்பாளர்களாக பிரிட்டன் ரீவிக்களில் பணியாற்றுகின்றனர்.

கடந்த ஜூன் மாதம் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இங்கு பிரிட்டனில் உள்ள சுயபால் பிரபலங்களை கூப்பிட்டு மதுபான விருந்தொன்றை வைத்தார். அதில் பி.பி.ஸி. செய்தி வாசிப்பாளர் ஜேன்ஹில், பாடகர் மத்தியூ ஜேம்ஸ், நடிகை அமன்தா பாரி ஆகியோர் உட்பட 200 பிரபலங்கள் கலந்து கொண்டன.

இது இப்படி இருக்க இங்கு இள வயது பிள்ளைகள் மத்தியிலும் இந்த சுயபால் சேர்க்கை தொடர்பான சிந்தனை வளர்ந்து வருவதால். அதனால் இங்குள்ள தமிழ் பெற்றோர்கள் பெரிதும் கவலை கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். தனது பிள்ளைக்கு பெண் பிள்ளை என்றால் ஒரு போய் பிரன்டோ அல்லது ஆண் பிள்ளை என்றால் ஒரு கேர்ள் பிரண்டோ இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றனர்.

இல்லாவிடில் பிள்ளை சுயபால் சேர்க்கையில் நாட்டம் கொண்டவராக ஆகிவிடலாம் என்ற பெரும் பயம்தான் காரணம். ஏனெனில் அதற்காக வாய்ப்புகள் இங்கு பாடசாலைகளில் அதிகமாக காணப்படுகின்றன. டேவிட் கமரூன், ஒபாமா போன்றவர்கள் இச்'சேர்க்கையாளர்களுக்கான தங்களது ஆதரவை பகிரங்கமாக சொல்லி விட்டனர்.

இல்லாமல் முடியாது ஏனெனில் அவர்கள் பெரும் வாக்கு வங்கியாக வருடா வருடம் வளருகிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பில்லா - 2 எனப்படும் மங்காத்தா - 2

ஒரு பார்வை



அஜித்தின் புதிய படத்துக்கு பில்லா-2 என்று யார் பெயர் வைத்தார்களோ தெரியவில்லை. பிழையான பெயரை வைத்திருக்கிறார்கள். மங்காத்தா-2 என்று வைத்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

வெங்கட் பிரபுவின் டைரக்ஷனில் வெளியான மங்காத்தாவின் கடைசி ரீலை வெட்டிவிட்டு அஜித்தை உயிரோடு ஓடவிட்டு தலைக்கு சாயம் பூசியிருக்கிறார்கள்.

உண்மையை சொல்வதானால் மங்கத்தாதான் டொப் பில்லா-2 டிராப். அதற்கு மேல் சொல்வதில் எந்த பயனும் இல்லை.

எல்லாம் சரி. ஈழத் தமிழர்களை ஆப்புக்கு இழுத்து எல்லோரையும் ஏன் அஜித் குமார் முட்டாளாக்கியிருக்கிறார்?

அனைத்தையும் இழந்து அகதி முகாமுக்கு செல்லும் ஈழ அகதி சட்ட விரோத போதைவஸ்து, மற்றும் ஆயுத விற்பனையில் இறங்கி தாதா உலகில் படிப் படியாக முன்னேறுவதாக அமைந்துள்ளது பில்லா-2. தமிழக ரசிகர்களும் இப்போது இதனை ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிகிறது. ஆனால் அஜித்தை ஒரு நக்ஸலைட்டாகவோ, அவ்வளவு ஏன் தமிழக மீனவராகவோ நடிக்க வைத்து திரைப்படம் செய்ய எந்தவொரு தமிழக சினிமா டைரக்டரும் முன்வருவாரா?

**நெடுமாறன்**

தலைவன் முதல் நடிகன் வரை ஈழத்தமிழர்களையும் அகதிகளையும் ஏன் ஆப்புக்கு இழுக்கிறார்கள்? அவர்களை பற்றி கேட்கவோ, பேசவோ எவரும் இல்லை என்று நினைத்தா தமிழக திரையுலகம் தப்பு செய்கிறது.

இந்த படத்தை இலங்கையில் திரையிட இலங்கை தணிக்கைச் சபை எப்படி அனுமதித்தது?

சர்வதேச அளவில் சட்ட விரோத போதைவஸ்து, மற்றும் ஆயுத விற்பனையில் ஈடுபடுபவராக, எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள ஒரு இலங்கை அகதியை திரையில் காட்ட முனைந்தது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

சர்வதேச டொன் வேடத்தில் இப்போது அஜித் கொடி கட்டிப் பறக்கிறார், அவரது நடிப்பின் உச்சக் கட்டம் இது என்று நினைத்தால் அதில் இருந்து மீளவே முடியாத ஒரு வியூகத்துக்குள் அவர் மாட்டிக் கொண்டிருக்கிறார் என்பதே நிதர்சனம். இவ்வாறான ஒரு மாயைக்குள் சிக்கியதால் தானே ரஜினிகாந்த் என்ற நல்லதொரு நடிகனை இழந்தோம்!

சினிமாத்துறையில் வெட்டி வைக்கப்பட்டுள்ள படுகுழிக்குள் ஒவ்வொரு நாளும் நிமிடமும் தனது தாதா நடிப்பின் மூலம் விழுந்து கொண்டிருக்கும் அஜித் குமார் நினைத்தால் இப்போது கூட அதில் இருந்து மீள முடியும். ஒரு ஆசை அல்லது முகவரியை கொடுத்தாலே போதும். அவரது தோற்றம் இப்போது ஒத்துப்போகவில்லை என்று நினைத்தால் அது மிகப்பெரிய தவறு. குடும்பத்தில் கணவன், சகோதரன் மட்டும் இல்லை. தந்தையும் கூட இருக்கிறார்.

முன் பெஞ்சில் இருப்பவர்களை மட்டுமே தனது ரசிகர்கள் என்று அஜித் நினைக்கக் கூடாது. ஆசை அஜித் சம்பாதித்த கோடிக்கணக்கான பெண் ரசிகைகளுக்கு அஜித் என்ன செய்ய போகிறார்?

ஆசை-2, முகவரி-2 இதில் ஒன்று போதுமே!

## ரோல்ஸ் ரோய் ஷங்கர்



டைரக்டர் ஷங்கர் ரோல்ஸ்ரோய் கார் வைத்திருக்கிறார். TN09BQ0008 என்பது காரின் பதிவிலக்கம். அமிதாப், அமீர்கான் போன்ற சில பெரிய நட்சத்திரங்களிடம் தான் ரோல்ஸ்ரோய் உள்ளது. இந்திய நாணயத்தில் மூன்று கோடியைத் தாண்டும் இந்தக் காரை பணம் கிடைக்கிறது என்பதற்காக விற்கமாட்டார்களாம். வாங்குபவரின் சமூக அந்தஸ்து, பின்புலம், அவருக்குக் காரை விற்பதால் நிறுவனத்துக்குக் கிடைக்கும் நன்மதிப்பு என்பதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் ரோல்ஸ்ரோய் காரை விற்பார்களாம். அந்தக் கணக்கில் தேறியவர்தான் ஷங்கர். இவர் வாங்கும் கார்களின் எண் எட்டாகத்தான் இருக்கும் என்பது மேலதிகத் தகவல்.

## சுப்பிரமணியபுரத்தில் குத்துப் பாட்டா?

தமிழ் சினிமா உலகுக்கு பெருமை தேடித் தந்த படம் சுப்பிரமணிய புரம். படம் பார்த்தவர்கள் நிறைந்த நெஞ்சுடன் எழும்பிப் போனார்கள். இப் படத்தை கன்னடத்தில் 'பிரேம் அடா' என்ற பெயரில் எடுத்திருக்கிறார்கள். இதில், கன்னட படவுலக ரசனைப்படி குத்துப்பாட்டு ஒன்றையும் சேர்த்திருக்கிறார்கள். குத்துப்பாட்டில் நடனம் ஆடியிருப்பவர் யார் தெரியுமா? இந்தி நடிகை சன்னி லியோனி. இந்தியா-கனடா கலவையில் உருவான சன்னி, ஜிசம்-2 படத்தில் நாயகியாக நடித்து தாராளம் காட்டியவர். 'ஏ' படங்களில் துணிச்சலாக நடிக்கும் இவரைத்தான் தேடிப் படித்து கவர்ச்சி நடனம் ஆட வைத்திருக்கிறார் கன்னட இயக்குநர் மகேஷ் பாபு.



## மோட்டார் சைக்கிள் பிரியர்கள்

அஜீத், விஜய், சூர்யா, அப்பாஸ் ஆகியோருக்கு கார் பயணத்தை விட மோட்டார் சைக்கிள் பயணத்தில்தான் விருப்பம். ஹெல்மெட் மாட்டிக் கொண்டு, மோட்டார் சைக்கிளில் பறப்பது விஜய்க்கு மிகப் பிடித்த விஷயம். படப்பிடிப்புக்கே மோ. சைக்கிளில் வருபவர் அப்பாஸ், ஷூட்டிங் இல்லாத நாள்களில் மகள் தியாவை தனது பைக்கிள் பள்ளிக்கூடத்துக்குக் கூட்டிச் செல்கிறார் சூர்யா.

## 9 கோடி
## ப்ரியங்கா

ஒன்றல்ல, இரண்
ரூபாய் 9 கோடியை ஒ
நடிக்க சம்பளமாக
பிரியங்கா சோப்ரா
'ஜான்ஜீர்'. 19
நடிப்பில் வெ
படம், இந்தி
கொ
இவ்வள
ஊ
குறிப்பிடத்த
சிரஞ்சீவி
தேஜா இந்
இந்தியில் ஹீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடிகர்களின் குத்தாட்டம்!



ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போடுவது தமிழுக்கு புதியது அல்ல. ஆனால் இந்தித் திரையுலகம் ஒரு மாற்றத்தைத் தந்திருக்கிறது. அங்கே ஒரு பாடலுக்குக் குத்தாட்டம் போடுபவர்கள் நடிகர்கள்! டெல்லி டெல்லியில் அமிர்கானும், ஆல்வேஸ் கபி-கபி யில் ஷாருக்கானும் ஒரு பாடலுக்கு குத்தாடி பரபரப்பை ஏற்படுத்தினார்கள். இப்போது இம்ரான் ஹாஷ்மி, தானும் நடனமாட விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார். சரி, இந்த நடிகர் குத்தாட்ட சீசன் தமிழுக்கு இறக்குமதியாகுமா? இறக்குமதியானால் யார் யாரெல்லாம் குத்தாட கச்சை கட்டுவார்கள்? யோசிக்கவே இன்டரஸ்டாக இல்லை?

# வருடத்துக்கு இரண்டு படம்



இனி வருடத்துக்கு இரண்டு தமிழ்ப் படங்களில் மட்டுமே நடிக்க முடிவு செய்துள்ள ஹன்சிகா மோத்வானி, வித்தியாசமான திரைக்கதை என்றால், சம்பளத்தில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்யவும் தயாராக இருக்கிறாராம். ஹன்சிகா, மட்டுமல்ல பல இறக்குமதி நடிகைகளும் தமிழில் கதை கேட்டு நல்ல கதையம்ச படங்களிலேயே நடிக்க விரும்புகின்றனர். தமிழில் வெற்றிக் கொடி நாட்டினால் ஹிந்தி மற்றும் ஏனைய மொழி மார்க்கட்டுகளையும் கைப்பற்றிவிடலாம் என கணக்கு போடுகிறார்கள் இவர்கள்!

# தொடரும் சில்க் புராணம்...



சில்க் ஸ்மிதாவை வைத்து வித்யா பாலன் நடிப்பில் வெளியான டர்டி பிக்சர் படம் வருவாய் ரீதியாக வெற்றி பெற்றதுடன் மத்திய அரசின் சிறந்த நடிகை விருதை வித்யா பாலன் பெறக் காரணமாகவும் அமைந்தது. இனிவிடுவார்களா இந்தியத் தயாரிப்பாளர்கள்? இதில் விசேஷம் என்னவென்றால், யாருமே டர்டி பிக்சர் படத்தை ரீமேக் செய்ய முன்வரவில்லை. ஏனெனில் சிலுக்கு வாழ்நாள் ஃபிகர். அவர் வாழ்ந்தது இந்திய சினிமா உலகில். எனவே ஆளாளுக்கு கதை ரெடி பண்ணி படம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். கன்னடத்தில் பாகிஸ்தான் அழகி வீனா மாலிக்கை சிலுக்காக நடிக்க வைத்திருக்கிறார்கள்.

இந்தத் தயாரிப்பாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்தாராம் டர்டி பிக்சர் தயாரிப்பாளர். கன்னட தயாரிப்பாளர் இதற்கு காட்டமாகப் பதில் சொல்லி இருக்கிறார். டர்டி பிக்சர் என்பது ஆங்கிலப் பெயர். அது 'கொபி ரைட்' சட்டத்துக்குள் வராது. சிலுக்கு பொதுச் சொத்து அவர் வாழ்க்கையை எவர் வேண்டுமானாலும் படம் எடுக்கலாம் என்ற பதில் கேட்டு வாலைச் சுருட்டிக் கொண்டாராம் டர்டி தயாரிப்பாளர்.

இப்போது மலையாளத்திலும் தயாராகிறார் சிலுக்கு. படத்தின் பெயர் 'புரஃபைல்' என்பதாகும். படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதியிருக்கும் அந்தோனி ஈஸ்ட்மன் யார் தெரியுமா? இவர்தான் சில்க் ஸ்மிதாவை மலையாள படவுலகுக்கு அழைத்து வந்தவர். எனவே படத்தில் உண்மை வாழ்க்கையின் சாயல் இருக்கும் என்கிறார்கள்.

இதே சமயம் தமிழிலும் தயாராகப் போகிறார் என்று கேள்வி. தமிழில் நமீதா சிலுக்காக நடிக்கப் போகிறார் என்று கேள்வி தாங்குமா?

# ...டி வாங்கும் ...கா சோப்ரா!



... இரண்டல்ல, கிட்டத்தட்ட ...யை ஒரேயொரு படத்தில் ...மாக வாங்கியிருக்கிறார் ... சோப்ரா. அந்தப் படம், ...ஜீர்'. 1974ல் அமிதாப் ...ல் வெளிவந்த இந்தப் ..., இந்தி திரையுலகின் க்ளாசிக் ஆக கொண்டாடப்படுகிறது. இந்தப் படத்தின் ரீமேக்கில்தான் ஜெயா பச்சன் நடித்த கதாபாத்திரத்தில் ப்ரியங்கா சோப்ரா நடிக்கப் போகிறார். அதற்காகத்தான் இந்தத் தொகை. இந்தியாவில் வேறு எந்த நடிகையும் இவ்வளவு பெரிய தொகையை ஊதியமாக இதற்கு முன்பு பெற்றதில்லை என்பது ...பிடத்தக்கது. அது மட்டுமல்ல, ...சிரஞ்சீவியின் மகன் ராம் சரண் ... இந்தப் படம் வழியாகத்தான் ...பில் ஹீரோவாக அறிமுகமாகிறார். அவருக்கு இதே தொகைதான்

# இது தாண்டா நட்பு!



அனுஷ்காவும், அமலா பாலும் 'உடன்பிறவா சகோதரிகள்' என்பது ஊரறிந்த விஷயம். இப்போது அனுஷ்கா சிபாரிசு செய்து. தனது மேனேஜரை அமலாவின் கால்ஷுட் விவகாரங்களை கவனிக்கும் படி சொல்லியிருக்கிறார். தமிழ், தெலுங்கு மற்றும் உலக மொழிகளில் அமலா எங்கு நடித்தாலும், இந்த மேனேஜர்தான் பேசுவாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முற்றம்



## இமையசைவில்....!

உன் விழியின் சிறகடிப்பினுள்
நான் நிதானிக்கவேயில்லை....
மின்னலின் கீற்றுக்களைப் போல....
எப்படித்தான் தொலைந்தேனோ...?
உன் பார்வையின் தொடக்கத்திலா?
உன் பார்வையின் முடிவிலா?
அல்லது உன் பார்வையின் வட்டத்திலா?
புரிய வைக்காமலே....
உன் ஒரே ஒரு இமையசைவில்
எனை சிறை வைத்துக் கொண்டாயே...

- ஆர்.சியா, வவுனியா

## வெற்றுடலின் பயணம்

என்னைக் கண்ட போது
உன்னை நீ மறந்தாய்
உன்னைக் கண்ட போது
உலகத்தையே நான் மறந்தேன்.
காலத்தின் கோலத்தினால்
நாம் பிரிந்தோம்
உள்ளத்தால் அல்ல
பார்வைகளால்
நமக்காய் நாம் வாழ்வதைவிட
பெற்றோருக்காய் நாம் பிரிவோம் என்றாய்
தைத்தது உன் சொற்கள்
இதயத்தில் முற்களால்

ஆனால்,
நீ என்னை மறக்கவில்லை
கூறியது உன் கண்கள்
நீ என்னைப் பிரிந்து விடு
உன் பெற்றோருக்காய்
நான் உன்னை மறக்கமாட்டேன்
உதிர்ந்தவை சொற்களல்ல
உள்ளத்தின் வலிகள் கண்களின் வழியே
உன் மௌனம் சொன்னது
ஓராயிரம் அர்த்தங்களை
சில நாள் வாழ்ந்தேன் உன் பார்வைகளில்
மீதி நாட்களை வாழ்ந்திடுவேன்
உன் நினைவுகளுடன்

விழி வழியே நுழைந்து
இதயத்தில் குடியிருந்து
உயிருக்குள் கலந்து பின் பிரிந்து
உயிருடன் என்னைக் கொல்வது ஏன்?
விடைதேடுகிறேன் உயிர் பிரியும் வரை

எனினும்,
ஒரு உண்மை கூறுகிறேன் கேள்
எனக்கு உயிர்தந்தது என் பெற்றோர்
என் கவிதைக்கு உயிர் தந்தது
உன் வலிகள்

- எம்.எஸ்.எப்.சஜிதா



## ஈர்ப்பு

உனக்கென நானும்
எனக்கென நீயும் - என்று
விதியில் எழுதப்பட பின் - நீ இன்னும்
என்னை விட்டு
விலகி செல்வது மனதுக்கு
வேதனையை தருகின்றது...
ஒரு வேளை...
என் இதயத்துக்கு தான்
ஈர்ப்பு சக்தி இல்லையோ
உன்னை என்னுள்ளே
ஈர்த்தெடுப்பதற்கு...

- கு.பேபிஷாலினி, கோளாவில்-02



## விடை தருவாயா?

தனிமை என்னை தலைதூக்கி
தலைக்கனமாய் பார்க்கிறது.
கேள்விகளோ மனதில் ஆயிரமாயிரம்
தோண்ற
மௌனமாய் இருக்கிறேன்.
ஆனால், மௌனக் குரல்
ஒன்று சட்டென மனதில் கேட்கிறது.
கேட்பதுதான் என்ன
பிரியா விடையா?
அக் குரலோடு மரணிக்க
இனிமையான நினைவுகள்
என் மனதில் ஜனனிக்கிறது.
பாடசாலை வாழ்வில் அன்று
நான் நினைத்ததென்னவோ ஒன்றுதான்
ஆனால் இன்று நினைக்காத அளவில்
அழியாத ஓவியங்களை மனதில்
பதிந்து விட்டன
வைரமுத்து, வாலி என பல கவிஞர்கள்
இங்கிருக்க என்னையும் கவிஞனாக
கிறுக்கனாக உருவாக்கியதும் நீதான்.
அதில் இன்பமும், துன்பமும் தந்தது நீதான்
அழகான நாட்களும் இங்கே
அழியாத கோலங்களும் இங்கே
சிற்பி கூட தோற்றுப்போவான்
பள்ளியே நீ என்னை செதுக்கியதை
கண்டு.
எம் உணர்வுகளை வெளிக்காட்டிய
ஆய்வு கூடம்
சில்லறைகளை மடக்கிய
சிற்றுண்டி சாலைகள்
விளையாட்டை ரசித்த
மைதானம்.
இதுவெல்லாம் எமக்கு தொலைதூரமாக
தெரிகிறது
வானத்து நிலவோ சோகத்தில்
தேய்கிறது.
நம் பிரியா விடை கண்டு.
பள்ளி வரவால் அகராதி இன்றி
அர்த்தம் கண்ட எனக்கு பிரிவிற்கு
அர்த்தம்கான தெரியவில்லை
நட்பை கொடுத்த கல்லூரியே எனக்கு
பிரிவையும் கொடுக்கிறது.
பிரிவின் வலியையும் தூண்டுகிறது.
மண்ணில் ஜனனித்தது என்னவோ சில
நொடியே ஆனால், இப் பிரிவால்
மரணிக்கிறேன் ஒவ்வொரு கனப் பொழுதும்
இருந்தும் உடலால்
மட்டுமே நான் பிரிகிறேன்.
உணர்வாலும் நினைவாலும்
என்றும் வாழ்ந்து கொண்டே
இருப்போம் கல்லூரியிலேயே...

- சிந்து, யாழ்ப்பாணம்

## இங்கு ஒரு உயிர்



வாழப் பிறந்தவனே
வந்துவிடு உன்
அழைப்புக்காகவே காத்திருப்பேன்
என்றாவது நீ வருவாய்
என்னைச் சிறையெடுப்பாய்
என்னுள் ஒரு நம்பிக்கை
வயது கடந்து
வாலிபம் கருகிவாடி வீழ்ந்து
நீ வந்தாலும்
என் அன்பின் இராதடா மாற்றம்
வா, உனக்காக
இங்கே ஒரு உயிர்...!

- காயம்பு மோகன்,
கிளிநொச்சி

## காத்திருப்போம்!



உன்னைப் பார்த்தேன்
காதல் வரவில்லை
உன் கண்களைப் பார்த்தேன்
காதல் பிறந்தது
சொல்லாமல் ஏற்றுக் கொண்டாய்
என் காதலை
சொல்லியும் ஏற்றுக் கொள்ளவில்லை
உன் உறவுகள்
பிரிகின்றேன் நிரந்தரமாயில்லை
என்றும்
உனக்குள் நானும் எனக்குள் நீயும்
கலந்திருப்போம்.

- த.சபிதா, வவுனியா

## நண்பா



உணர்வால்
காற்றை நேசி
சுவாசத்தால்
மலரை நேசி
கண்களால்
பெண்ணோடு பேசி
நன்றாய் யோசி
உள் மனதால் அவளை நேசி
பின்னாடி போகாதே காசி

- சா.டினேஸ் கிறிஸ்ரி,
பறப்பாங்கண்டல், மன்னார்.

## பெண்மையின் பூரிப்பு



மலர் அழகியின் அனுமதியின்றி
வண்டு தேன் பருகி செல்கிறது
நிலவின் அழகு தேய்ந்து போவது
தவிர்க்க முடியாத தொன்றாகிப்
போனது
தீவுகள் அழகு யாராலும்
தீண்டப் படாமல் கன்னி கழிகிறது
குயிலின் குரல் அழகானாலும்
இனவிருத்திக்கு
காக்கை கூட்டில் தஞ்சமடைகிறது
மயில் தோகை அழகு
மழை மேகம் சூழ் கொண்டால் தான்
தாமரை அழகு
சூரியன் கண்பட்டால் மட்டும் தான்
பெண்மை அழகு தாய்மையில் பூரித்து
பொங்குகிறது

- யோ.ரூபனா

### வாசக கவிஞர்களுக்கு...

பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





FaceBook, Twitter, Blog பிரியர்களே!
இப்போது வண்ணவானவில் Facebook, Twitter, Blog உடன் நீங்களும் சுவாரஷ்யமான விடயங்களை Share, Tag பண்ணலாம். சிறந்தவை இங்கே பிரசுரமாகும்.

வண்ண வானவில் விலாசங்கள்:


facebook :- vannavaanavil@facebook.com
Twitter :- vannavaanavil@twitter.com
Blog :- vannavaanavil@blogspot.com



## தாயின் துடிப்பு




உனக்காய் துடித்த ஓர் இதயம்
உனக்காய் மட்டுமே துடித்த ஓர் இதயம்
ரத்தத்தை உணவாய் மாற்றிய ஓர் இதயம்
அதை உனக்காய் பரிமாறிய ஓர் இதயம்
நீ கேட்டதெல்லாம் கொடுத்த ஓர் இதயம்
செய்த சேட்டை எல்லாம் பொறுத்த ஓர் இதயம்
இன்று துடிக்கிறது!
இன்றும் கூட துடிக்கிறது முதியோர் இல்லத்தில்!
என் மகன் எப்படி இருக்கிறானோ என நினைத்து







பெட்ரல்மெக்ஸ் விளக்குடன் அமர்ந்திருப்பவர் கர்மவீரர் காமராஜ். காங்கிரஸ் பிரசார மாநாட்டுக்கு செல்லும்போது...




moorthy kugendran@facebook

**Fact.! Fact.! Fact.!**

பொண்ணுங்க மனசு தோசை மாதிரி ஒரு பக்கம் வெள்ளை இன்னொரு பக்கம் கருப்பு

But

பசங்க மனசு இட்லி மாதிரி சுத்தி சுத்தி பாத்தாலும் வெள்ளையா தான் இருக்கும் .!

www.MIGTAG.com

ஒரு துளி கண்ணீரை துடைப்பது நட்பு அல்ல,,,மறு துளி வராமல் தடுப்பது தான் உண்மையான நட்பு...

© fb.com/roompottuyosippaangalo




Room Poottu Yosippaangalo@facebook



காதல் தோல்வியை விட அதிகமான வலி எது தெரியுமா ?

முறுக்கு தின்னும் போது "நறுக்" என்னு நாக்க கடிச்சுக்கிட்டா வருமே அதுதான் !!!

Thilak kumar@facebook

ஆண்டவா இந்த பேஸ்புக் , பசங்க கிட்ட இருந்து என்னைய காப்பாத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: லக்ஷின்

தொகுப்பு: ஜெயா,




# குழந்தைகள்: ஆசை காட்டி வேலை வாங்கலாமா?

தொல்லை தராத பிள்ளை ஏது? காலை எழுந்ததும் பிரஷ் செய்வதில் ஆரம்பித்து, இரவு டிவியை அணைத்துவிட்டுப் படுப்பதுவரை ஒவ்வொன்றுக்கும் அவர்களைக் கெஞ்ச வேண்டிருக்கிறது. ஆனால் இப்படிப் படுத்தி எடுக்கும் குழந்தைகளை வழிக்குக் கொண்டுவர, கைவசம் அஸ்திரம் வைத்திருக்கிறார்கள் சில அம்மாக்கள்.

''சின்னு... ஹோம்வொர்க் முடிச்சிட்டா, அம்மா உனக்கு சிப்ஸ் தருவேன்...''

''நீ இன்னைக்கு ஒழுங்கா டிராயிங் கிளாஸ் போனா, உன்னை கார்ட்டுன் சேனல் பார்க்க விடுவேன்...''

இப்படியே சலுகைகளைப் பரிசளித்துக் குழந்தைகளைக் கடமையைச் செய்யவைத்து விடுவார்கள். இப்படிக் குழந்தைகளை ஊக்கப்படுத்த அவர்களுக்குப் பிடித்த விஷயங்களைப் பரிசாகத் தருவது சரிதானா?

பொதுவாகக் குழந்தைகள் எதையாவது செய்ய மறுத்தால் உடனே அவர்களுக்குப் பிடித்த பொருளைக் கொடுத்து அந்தக் காரியத்தைச் செய்யுமாறு சொல்வது இயல்புதான். ஆனால் இதன் விளைவுகள் அவ்வளவு நல்லதாக இருக்காது. ஆரம்பத்தில் தனக்குக் கிடைக்கிற சலுகைக்காகக் கடமையைச் செய்கிற குழந்தைகள் போகப்போக அதையே பழக்கமாக்கிவிடுவார்கள். அதாவது, சலுகை கிடைத்தால்தான் கடமையைச் செய்வேன் என்ற ரீதியில் நடந்துகொள்வார்கள்.

குழந்தைகள் தினசரி செய்ய வேண்டிய வேலைக்கு ஏதாவது பரிசையோ, சலுகையோ கொடுப்பது மிக மோசமான பழக்கம். குழந்தை அந்த நேரத்துக்கு அந்த வேலையைச் செய்யுமே தவிர, அந்தக் காரியத்தை நாம் செய்ய வேண்டும் என்ற உணர்வு ஏற்படாது. குழந்தை எப்போதும் உங்களிடமிருந்து எதையாவது எதிர்பார்த்துக் கொண்டே இருக்கும். உங்களையும் கிஃப்ட் வாங்கித் தரும் ஒரு மெஷினாகத்தான் பார்க்கும்.



ஒரு வேலையை ஏன் செய்ய செய்ய வேண்டும், அதனால் கிடைக்கும் நன்மைகள் என்ன? என்பதைக் குழந்தைக்குப் புரியும் வகையில் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் எதையும் கேட்க மறுத்துக் குழந்தை அடம்பிடிக்கும். ஆனால், புரியும் வரை பொறுமையாகச் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். அந்த வேலையைக் குழந்தையே விரும்பிச் செய்கிற அளவுக்குப் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம். நீ இதைச் செய்தால் நான் உனக்கு இதை வாங்கித் தருகிறேன் என வாக்குக் கொடுத்தால் அதை வாங்கிக் கொடுத்தே ஆக வேண்டும். அப்படி வாங்கித் தராத பட்சத்தில் உங்களைப் பற்றிய மதிப்பீடு குழந்தை மனதில் குறைந்துவிடும் வாய்ப்பு இருக்கிறது. உங்களைப் பற்றி தன் நண்பர்களிடம் மட்டமாகப் பேசக்கூடும். 'என் அம்மா எப்பவும் இப்படித்தான். எதையாவது சொல்லுவாங்க. ஆனா அதை வாங்கித் தர மாட்டாங்க' என்று தனது ஆற்றாமையை வெளிப்படுத்துவார்கள்.



நாம்தான் குழந்தைகளின் முதல் ரோல் மாடல். நாளை குழந்தையும் நம்மைப் போலவே வாக்குக் கொடுக்கும். ஆனால் அதை நிறைவேற்றாது.

பாராட்டுகள் அனைத்தும் வாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும். அதற்காக எப்போதும் வெறும் பாராட்டு மட்டுமே குழந்தைகளைக் குளிர்வித்துவிடாது. அவர்கள் உண்மையிலேயே ஏதாவது சாதித்தால், அவர்களுக்கு நிச்சயம் பரிசு வாங்கித் தர வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றினால் மட்டும் அவர்களுக்கு பயன்படக்கூடிய வகையில் எதையாவது வாங்கித் தரலாம். அதையும் முன் கூட்டி சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால், 'எனக்குத் தேவையான பொருள் கிடைக்கிறது. அதற்காக இதை நான் செய்தே தீர வேண்டும்' என்ற எண்ணம் தான் வளருமே தவிர வேறு எந்த விதமான வளர்ச்சியும் இருக்காது.

**ஜானகி**

# நட்சத்திர அழகுக் குறிப்புகள்



### சரண்யா பொன்வண்ணன்

அழகு என்பதே மனசுடன் சம்பந்தப்பட்டது. மனசில் எப்போதுமே சாதகமான (பொசிட்டிவ்) எண்ணங்கள் இருக்குமானால் அழகாகவும் பொலிவாகவும்தான் தெரிவோம். நல்ல தூக்கம், சுத்தமான உணவு, உடற் பயிற்சி-இந்த மூன்றும் அழகுக்கு ரொம்ப உதவும். பரபரப்பு காட்டாமல் அமைதித் தன்மையை வெளிக்காட்டப் பழகுங்கள். அப்புறம் முடிந்தவரை வீட்டு வேலைகளை நாமே செய்ய வேண்டும்.



### டாப்ஸி

என் அழகுக்கு காரணமே எதற்காகவும் அலட்டிக் கொள்ளாமல் சந்தோஷமாக இருப்பதாகும். நிறைய தண்ணீர் குடிப்பேன். பொரியல்களை எடுத்துக் கொள்வதில்லை. பசித்தால் மட்டுமே சாப்பிடுவேன்.



### த்ரிஷா:

என் அழகுக்குக் காரணம் யோகாவும் முறையான உடற் பயிற்சியும்தான். முன்னர் நிறைய அழகு சாதனங்களைப் பயன்படுத்தியது உண்மைதான். யோகாவில் இருப்பதால் இப்போதெல்லாம் பிடித்ததை சாப்பிடுகிறேன். உறங்குவதற்கு முன் தலைக்கு எண்ணெய் மஸாஜ். காலையில் தலை கழுவிக் கொள்கிறேன்.



### அமலாபால்

நொறுக்குத் தீனி அவுட்! தலைக்கு எண்ணெய் தடவி குளிக்கிறேன். நிறைய பழங்கள் சாப்பிடுகிறேன். சரும பளபளப்புக்கு பப்பாளி உதவுகிறது. பப்பாளியை மசித்து உடல் முழுக்க பூசி குளித்தால், புத்துணர்வு கிடைக்கும்!



### அஞ்சலி

பியூட்டி பார்லர் பக்கமே போனதில்லை. பாதாம் பருப்பு நிறைய சாப்பிடுகிறேன். அதை அரைத்து முகத்தில் பூசுகிறேன். தலைக்கு செம்பருத்தி சீகைக்காய் தூள். குளிர்ந்த நீரில் நேரம் வாய்க்கும் போதெல்லாம் முகம் கழுவிக் கொள்கிறேன்.




### ஹன்சிகா மோத்வானி

படப்பிடிப்பு இல்லை என்றால் மேக் அப் போட மாட்டேன். சாப்பாடு எளிமையாகவும் வேளைக்கும் இருக்கும். அனாவசியமாக மனதை குழப்பிக் கொள்ளமாட்டேன். அப்புறம் அழகு புறத் தோற்றத்தில் இல்லை. செயல் சிந்தனைத் திறன் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் அழகு பளிச்சிடுகிறது. பர்சனாலிட்டியைத்தான் அழகு என கருதுகிறேன்.

## நீங்களும் செய்யலாம்

### தக்காளி சோஸ்



**தேவையானவை:**

| | |
|---|---|
| தக்காளி | - 1/2 கிலோ |
| இஞ்சி | - 1 அங்குலதுண்டு |
| பூண்டு | - 5 பல் |
| கா. மிளகாய் | - 5 |
| சீனி | - 1/2 கிலோ |
| பட்டை | - 3 |
| கிராம்பு | - 6 |
| ஏலம் | - 4 |

**செய்முறை:**

ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி அதில் தக்காளி பழத்தைப் போட்டு வேக விடவும். அதனுள் ஒரு வெள்ளைத்துணியில் பட்டை, கிராம்பு, ஏலம் மூன்றையும் வைத்து முட்டையாக இறுக்கமாக கட்டி கொதிக்கும் நீரினுள் விடவும். பின் தக்காளி வெந்ததும் இறக்கி நீரை வடித்து எடுத்து வைக்கவும். தக்காளியின் தோலை உரித்து மிக்சியில் போட்டு காய்ந்த மிளகாய், இஞ்சி பூடு விழுது சேர்த்து அரைத்தெடுக்கவும் பின் அரைத்த விழுதை பாத்திரத்தில் போட்டு வதக்கவும் வதங்கியதும் சீனி சேர்த்து திரும்பவும் வதக்கி சீனி கரைத்ததும் இறக்கவும். சோஸ் தயார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை



அது ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் இருக்கும் இறைவனை வழிபட வந்தார். ஒரு ரிஷி. அந்த ரிஷி எப்போதும் உண்மையே பேசுவார். கோயில் தரிசனம் முடிந்ததும் கோயில் அருகில் இருந்த ஒரு மரத்தடியில் அமர்ந்தார் ரிஷி.

அப்போது அந்த வழியே தப்பித்தால் போதும் என்று ஒருமாடு தலைத்தெறிக்க ஓடி, கோயில் நந்தவனத்தில் தஞ்சம் புகுந்தது. அடுத்த சில நிமிடங்களில், ஒரு கசாப்புக் கடைக்காரர் அந்த மாட்டை தேடிக்கொண்டு வந்தார். மரத்தடியில் அமர்ந்திருந்த ரிஷியிடம் அவர், ''ஐயா, இந்த வழியே ஒரு மாடு ஓடிவந்ததைப் பார்த்தீர்களா?'' என்று மூச்சிரைக்கக் கேட்டார்.

எப்போதும் உண்மையே பேசக்கூடிய ரிஷி, ''ஆமாம். இந்தப் பக்கம் ஒரு மாடு ஓடி வந்ததது. அதோ அந்த நந்தவனத்தில் நுழைந்தது'' என்றார்.

ரிஷி உண்மையைத்தான் சொல்வார் என்று நினைத்த அந்த கசாப்புக்கடைக்காரர், கோயில் நந்தவனத்திற்குச் சென்று அந்த மாட்டைப் பிடித்து விட்டார்.

மாட்டை ஓட்டிச் சென்று இறைச்சிக்காக அடித்துக் கொன்று விட்டார். அந்த மாடு இறைச்சிக்காக கொல்லப்பட, ரிஷி ஒரு காரணமாக இருந்துவிட்டார்.


மக்கள் எப்போதும் உண்மையே பேசக்கூடிய ரிஷியின் ஆத்மா சொர்க்கத்திற்கு சென்று இருக்கும் என்று பேசிக் கொண்டனர்.

அதே சமயம் ரிஷியின் ஆத்மாவை பாசக்கயிற்றால் கட்டி எம தூதர்கள் நரகத்திற்கு இழுத்துச் சென்றனர். ரிஷியின் ஆத்மா ஒன்றும் புரியாமல் குழம்பியது. 'நாம் வாழ் நாள் முழுக்க உண்மையைத் தானே பேசி வந்தோம்? பிறகு எதற்கு நரகத்திற்கு கொண்டுச் செல்லப்படுகிறோம்?' என்ற எண்ணிய ரிஷியின் ஆத்மா, ''நான் செய்த பாவம்தான் என்ன? என்னை எதற்கு நரகத்திற்கு கொண்டு செல்கிறீர்கள்?'' என்று எம தூதர்களிடம் கேட்டது.

அதைக்கேட்டு சிரித்தனர் எமது தூதர்கள். ''நீ உண்மை மட்டுமே பேசுவாய் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனாலும் உண்மையில் சில வித்தியாசங்கள் உண்டு. அது உனக்குத் தெரியவில்லை. மிகச் சிறந்த உண்மை என்பது அந்த உண்மையால் எந்த ஒரு உயிருக்கும் தீங்கு நேரிடக்கூடாது. ஆனால், நீ சொன்ன ஒரு உண்மையால் ஒரு மாடு உயிரிழந்து விட்டதே! அந்த பாவத்திற்குதான் உன்னை நரகத்திற்க கொண்டுச் செல்கிறோம்'' என்றார்கள் எமதூதர்கள்.

**நீதி:** நாம் சொல்லும் உண்மையால் யாருக்கும் எந்த தீங்கும் ஏற்படக்கூடாது. அப்படி ஏற்பட்டால், அந்த உண்மையும் ஒரு பாவம்தான்!

## சொல் விளையாட்டு 21



### இடமிருந்து வலம்

1. மலச்சிக்கலை போக்கும் பழம் (4)
3. தலை (3)
5. வாசனை திரவியங்களில் ஒன்று (4)
6. கண் பார்வைக்கு நல்ல காய்கறி (3)
8. பசு இதனை ஈனும் (3)

### மேலிருந்து கீழ்

1. முக்கனிகளில் ஒன்று (6)
2. கசக்கும் காய்கறி (5)
4. இப்போது சந்தையில் அதிகம் விற்பனையாகும் பழம் (6)
7. பச்சையாக இருக்கும் தானியம் அவித்துத் திண்ணலாம் (3)


**சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 19ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...**

## படப்புதிர்



படங்களின் பெயர்களைக் கொண்டு கட்டங்களை பூர்த்தி செய்யுங்கள். பூர்த்திசெய்ய முடியாவிட்டால் 22ம் பக்கத்தை பார்க்கவும்.

## மூளையின் எடை



ஒவ்வொருவருக்கும் மூளையின் எடை சற்று மாறுபடும். சராசரியாக ஒரு ஆணின் மூளை 1.5 கிலோகிராம் எடை உடையது. பெண்ணின் மூளை ஆணின் மூளையின் எடையை விட குறைவாகவே இருக்கும். மனிதன் உயிருடன் இருக்கும்போது, மூளையின் வெளிப்பரப்பு அடர்த்தியான சாம்பல் நிறத்திலும், உட்பகுதி மஞ்சள், வெள்ளை நிறத்திலும் காணப்படுகிறது. கோடிக்கணக்கான நரம்பிழைகள் வெண்பொருளையும், பெருமூளைப் புறணியையும் இணைக்கின்றன. 20 வயதான ஆணின் மூளையில் உள்ள நரம்பிழைகளின் மொத்த நீளம் 1,76,000 கிலோமீட்டர். அதே வயதில் பெண்ணின் மூளையில் உள்ள நரம்பிழைகளின் நீளம் 1,49,000 கிலோமீட்டர் இருக்குமாம்!

| ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம். | முகவரி: STAR BABAY, Editor, Vanna Vaanavil Editorial, Lake House Colombo - 10 |
|---|---|

## ஒட்டகம்



ஒட்டகம் மாலை வேலையில் உணவு உட்கொள்ளாது. ஒட்டகத்தின் பால் 60 நாட்கள் வரை கெட்டுப் போகாது. ஒரு மைலுக்கு அப்பால் இருக்கும் நீர்நிலைகளை தன் மோப்ப சக்தியால் உணரும் ஆற்றல் கொண்டது.

## Star Baby



எம்.எம்.எம். ரிமாஸ்
சாய்ந்தமருது - 10

## வண்ணம் தீட்டுங்கள்



## கரும்பின் இனிமை

நாம் விரும்பிச் சாப்பிடுற கரும்புல, கடினமான நார் இழைகள் இருக்குது. இந்த நார் இழைகள்ல தான் சுக்ரோஸ் அப்படிங்கிற சர்க்கரை சேமித்து வைக்கப்பட்டிருக்கு. மனிதனோட நாக்கு, கோழைப்படலத்தால சூழப்பட்டு, வெளிர் சிவப்பு நிறத்துல ஈரத்தோட இருக்கும். வெல்வெட் மாதிரி இருக்குற நாக்கோட மேற்பரப்பை, சுவை முகிழ்ப்புகள் போர்த்தி இருக்குது. அதுமட்டுமல்ல, நாக்கோட பின்புறம், ஓரம், நுனி ஆகிய இடங்களிலேயும் இந்த சுவை முகிழ்ப்புகள் இருக்குது. நாக்கோட மேற்பரப்புல சுவை உணர்வு வாங்கிகள் மெல்லிய செல்களாகப் பதிஞ்சிருக்கு.

நாம கரும்பைக் கடிச்சு, மென்று சாப்பிடும்போது, கரும்புல இருக்குற கடினமான நார் இழைகள், நாக்கின் மேற்பரப்புல இருக்குற எபித்தீலியப் படலத்தையும், சுவை முகிழ்ப்புகளின் பாதுகாப்புச் செல்கள் சிலதையும் சிதைத்துவிடும். நார் இழைகள்ல இருக்குற கரும்புச்சாறு, சுவைத்துளைக்கு சென்று சுவை அரும்பு உணர்வு செல்களைத் தூண்ட, நாம் இனிப்புச் சுவையை உணர்வோம். அதுக்குப் பிறகு தண்ணீர் குடிக்கும்போது, தண்ணீர் குடிக்கும்போது, தண்ணீர்ல இருக்குற கனிம உப்புப் பொருள்கள், சிதைஞ்ச செல்களின் மீது பட்டவுடன் நாக்கு எரியுது.

வி. அச்சுதன் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகை

A. ரோஜா
B. நதியா
C. சமீரா ரெட்டி
D. நயன்தாரா

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்



ஹோட்டலில் காசு இல்லாட்டா
மாவாட்ட சொல்லுவாங்க.
அப்போ,
பஸ்சில் டிக்கட் வாங்காட்டி
பஸ் ஓட்ட சொல்லுவாங்களா?

- சுஜீத், வட்டக்கச்சி

## SMS பூக்கள்



நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்எம்எஸ், கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.

0778021501



Lesson 1 - கா... கா...
Lesson 2 - கா கா கா காகா...
Lesson 3 - கா கா கா க கா...
பாராட்டுக்கள்!
உங்களுக்கு
காக்கா பாஷை வகுப்பு ஓவர்.
இப்போ நீங்க
ஸ்மார்ட் அண்டம் காக்கா!

- தர்ஷினி, கொழும்பு-15

டிபரண்ட்டா பேசுங்க
டிபரண்டா திங்க்
பண்ணுங்க.
டிப்பரண்டா பழகுங்க
எப்பவும் சிரிச்சிக்கிட்டே
இருங்க.
அப்பத்தான் நீங்க லூசு
என்று
எல்லோருக்கும் தெரியும்

- பி.லோபனா, கிளிநொச்சி



குஷ்பு மாதிரி ஒல்லியா,
நமீதா மாதிரி அடக்கமா,
சசிகலா மாதிரி ஒரு குடும்பப் பொண்ணா,
ரஞ்ஜிதா மாதிரி பத்தினியா
ஒரு நல்ல வைஃப்
உனக்குக் கிடைக்கணும் என்று நான்
இந்த நல்ல நாளில்
கடவுளை வேண்டுகிறேன் மச்சி...

- வினோத், வாழைச்சேனை



உங்களுக்கு என்ன கஷ்டம் இருந்தாலும்
என்ன துன்பம் இருந்தாலும் எனக்கு போன்
பண்ணி சொல்லுங்க... ஏன்னா எனக்கு
இன் கமிங் ப்ரீதானே! ஓகே. கூல்...

- சர்மி, நானுஓயா



வாழ்க்கை என்பது
சோதனை, அதில்
எத்தனை
வேதனை, அதை
எல்லாம் வென்று
முடிப்பதுதான் மனிதனின்
சாதனை.

தென்றலை நேசிப்பேன் புயல் அடிக்கும் வரை,
பூவை நேசிப்பேன் அது வாழும் வரை, நிலவை நேசிப்பேன்
விடியும் வரை. உன் நட்பை நேசிப்பேன் உயிர் வாழும் வரை.

- டி.சுதாகரன், T.C லேன், சங்கானை



கேள்ஸ் அழகு 95
கேள்ஸ் தோற்றம் 80
கேள்ஸ் குணம் 60
கேள்ஸ் சிரிப்பு 50
கேள்ஸ் படிப்பு 40

- க.லதிஸ்ராஜ், நுவரெலியா

உயிருள்ள வரை காதல்
செய் அப்பதான் உனக்கு
உயிரே இல்லாமல்
போகும் நண்பா.

- ப.ரௌத்ரி, பருத்தித்துறை



ஒரு நாள் ஒரு கிளியை திருமணம் செய்ய போட்டி வைத்தாங்க. அதில எல்லா பறவைகளும் கலந்து கொண்டன. போட்டியில் காக்கா ஜெயித்து விட்டது. பைனல் ரவுண்டில் ஒரு குருவிக் கூட போட்டி. அதிலையும் காக்கா வென்று விட காக்காவுக்கும் கிளிக்கும் கல்யாணம்... காக்கா தாலி கட்டும்போது கல்யாணத்தை நிறுத்துங்கன்னு ஒரு குரல். பொலிஸ், காக்காவை கைது செய்தது. காரணம், காக்கா பாட்டி கதையில் பாட்டியோட வடையை காக்கா சுட்ட குற்றத்துக்காகவே கைது!



நடக்கிறதும் நடக்கப் போவதும்
நிச்சயமா நம்ம கையில் இல்ல
அது
நம்ம காலில்தான் இருக்கு. சோ
நல்ல தரமான
செருப்பா வாங்கிப் போடுங்க



கடவுள்: என்ன வரங்கள் வேண்டுமோ கேள்.
பெண்: SMS படிக்கிற இந்த பிரண்ட் எப்பவும் என்னோட இருக்கணும்!
கடவுள்: வரங்கள் கேட்கச் சொன்னா குரங்க கேக்கிறீயே...

- நித்யா, கிருளப்பனை

அக்கா பிரண்ட அக்காவா
நினைக்கலாம்: தங்கச்சி
பிரண்ட்ட தங்கச்சியா
நினைக்கலாம் but
பொண்டாட்டியோட
பிரண்ட பொண்டாட்டியா
நினைக்க முடியுமா?
இதைக் கேட்டா
திட்டுறாங்க!

- பிரசாந்த், மன்னம்பிட்டி



நண்பர்கள் யாரும்
மீண்டும் பிறப்பதில்லை
நட்பு என்றும்
இறப்பதில்லை
உன் நட்பை ஒரு போதும்
நான் மறப்பதில்லை
என்றும் நட்புடன்...
நண்பேன்டா!

- ஏ.சத்தியரூபன், முல்லைத்தீவு

என்னதான் நீங்க O/L, A/L,
B.A படிச்சி வேர்க்
பண்ணினாலும் எங்களப்
போல சும்மா இருக்கிற
வேர்க்கை யாராலும்
பண்ண முடியாது.

- எஸ்.ஹப்ராஸ், திகன



லைப்ல கேர்ள்
பிரண்ட் கிடைச்சா
லைஃப் ஜொலி...
அதே கேர்ள் பிரண்ட்
லவ்வரான்னா
பொக்கட்காலி
அதே லவ்வர் வைஃப்பா வந்தா
மவனே, லைப்பே காலி!



அய்யா, அம்மா, சாமீ ஏதாவது
பிகரோட நம்பர் இருந்தா
கொடுங்களேன், மகராசனா
இருப்பீங்க... லவ் பண்ணி நான்கு
மாசம் ஆச்சு சாமீ பழைய பிகரோடதா
இருந்தாலும் பரவாயில்ல, டுபாகூரா
இருந்தாலும் ஓகே. மெரேஜ்
ஆகியிருந்தாலும் ஏதோ சூப்பரா
இருந்தாலும் சரின்னு நீ புலம்பின
மாதிரி நேற்று நைட் கனவு கண்டேன்.

- ஃபாஸிலா, முதலியார்குளம்.

காதலர் தினத்தன்று உங்கள்
காதலிக்கு ரோஸ் பூ கொடுக்காதீங்க...
உங்க கதை பூ மாதிரி பறந்து
போயிடும்... சொக்லட் கொடுக்காதீங்க
உங்க காதல் சொக்லட்
மாதிரி கரைந்து போயிடும்.
நல்ல பாண் ஒண்ணு
கொடுங்க இது நாளாந்தம்
விலையேறுகின்ற மாதிரி
உங்கள் காதலும்
வளர்ந்து செல்லும் சரியா?

- யோகேஷ், ராகம





பெண்ணின்
காதல் ஸ்பின்
போல் மாதிரி
எப்போ எங்க
திரும்பும் என்று
தெரியாது

- யூ.நிஷாந்தன், நாவலடி, பரந்தன்



லவ்வுக்கும்,
நட்புக்கும்
ஓட்டப் போட்டி
வைத்தால் எது
வின் பண்ணும்?
லவ் தான் ஏன்
தெரியுமா...? விட்டு
கொடுப்பதுதான் நட்பு
விட்டுட்டு ஓடுவது
தான் லவ்

- ஆர்.தர்ஷா, கொடிகாமம்

**சன் பிக்சர்ஸ் கலாநிதி மாறன் வழங்கும்**
**'அம்மா செய்த உப்புமா'**

நடிகர் - ரவை, நடிகை - தக்காளி, வில்லன் - மிளகாய்,
நகைச்சுவை - கடுகு, ஒலி - எண்ணெய், ஒளி - மஞ்சள்,
செண்டிமெண்ட் - வெங்காயம், இயக்கம் - அடுப்பு, தயாரிப்பு - அம்மா
விரைவில் உங்கள் அபிமான திரையரங்குகளில்

- சு.இந்துஷா, மீசாலை



என்ன எல்லாம், மூனு மூனா தெரியுதா?
நைட்டில் மூனு தெரியாம சன்னா தெரியும்?

- ஏ.எச்.ஜவ்ஹாரா, விருதோடை

## என்னைத் தெரிகிறதா?



ஜீவா



### தமிழ் நடிகர் VS கிரிக்கெட் வீரர்கள்

ரஜினி - சனத் > ரெண்டு பேரும் வழுக்கைத் தலை
ஆர்யா - மெண்டிஸ் > டேலன்ட் இருக்கு... but நொட் ஹிட்
அஜித் - சில்வா > அடிக்கத் தெரியாது ஆனா சும்மா பிலிம் காட்டுவாங்க
தனுஷ் - மஹேல > அடிச்சா அதிரடி
சூர்யா - சங்கக்கார > எப்பவுமே அதிரடி

வேற யாரைத் தேடுறீங்க
ஓ.... விஜய்யா?
விடுங்க போல் பொறுக்குற பசங்கள பத்தி நமக்கு என்ன பேச்சு?

- கே.எப்.நப்ஸி, அட்டாளைச்சேனை



கோப்பியில் சுகர் அதிகமா இருந்தா குடிக்க
முடியாது. அதுபோல... கிளாஸ்ல பிகர் அதிகமா
இருந்தா படிக்க முடியாது...

- ஏ.ரோயல், பதுளை



அன்று அழுததை இன்று நினைத்தால்
சிரிப்பு வரும் அது காதல்
அன்று சிரித்ததை இன்று நினைத்தால்
அழுகை வரும் அது நட்பு


- ஏ.ரோயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆசிய மகளிர் ஹொக்கிப் போட்டியில் சீனா பெருவெற்றி பெற்றது ஏன்?

நீண்ட கால திட்டமிட்ட பயிற்சி விடா முயற்சி, தமக்கான தனி தொழில்நுட்பத் திறன், எதையும் வெற்றி கொள்ள வேண்டும் என்ற மன உறுதி ஆகிய பண்புகளே சீனாவை பெண்களுக்கான ஆசிய கிண்ண ஹொக்கிப் போட்டியில் வெற்றி வாகை சூட வழிவகுத்தது.

பெண்களுக்கான ஆசிய ஹொக்கி கிண்ண போட்டிகள் கடந்த ஜுன் 26 முதல் ஜுலை 7ம் திகதி வரை தாய்லாந்து பெங்கொக்கில் மகாராணி சிரிகெத் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இலங்கை, சீனா, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஒரு பிரிவிலும் கொரியா, ஜப்பான், தாய்லாந்து, பாகிஸ்தான், கசகஸ்தான் ஒரு பிரிவிலும் விளையாடின. இதன் ஒரு அனுசரணையாளராக பெங்கொக் ரமடா ஹோட்டலும் இருந்ததால் அந்த ஹோட்டலிலேயே சகல குழுக்களும் தங்கி விளையாடின. ஹோட்டல் விலை கட்டுப்படியாகாத காரணத்தால் இலங்கை அணி பெங்கொக் நகரின் ஒரு பகுதியில் உள்ள பல்கலைக்கழகமாகும். இது பஞ்சாபில் அமைந்துள்ளது. இதில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களே பல நாடுகளில் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றுகின்றனர். இங்கு ஒன்பது மாத டிப்ளோமா, ஒரு வருட பயிற்சி, இரண்டு வருட பயிற்சி நெறி, பல்கலைக்கழக பட்டம் ஆகியன ஹொக்கி பயிற்சி நெறிக்கு வழங்கப்படுகின்றன. இன்று நிலைமாறி அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, நியூசிலாந்து நாடுகளைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்களை ஆசிய நாடுகள் அதுவும் இந்தியாவும் கூடபெற வேண்டியுள்ளது. அவுஸ்திரேலியா தனது கிரிக்கட் அகடமி மூலம் கிரிக்கட் பயிற்றுவிப்பாளர்களை உலகிற்கு வழங்குகின்றது. அதுபோலவே ஹொக்கி அக்கடமிகள் அவுஸ்திரேலியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் சாம்பியனான சீனா இன்னும் தனது சொந்த உழைப்பாலும் திட்டமிட்ட பயிற்சிகளாலும் மற்றும் நமக்கான தொழில்நுட்ப வளர்ச்சிகளின் உதவியாலும்



[illegible] மோதும் இலங்கை அணி



இலங்கை அணி

விளையாட்டு மைதானத்திற்கு இடம்மாறியது. இந்தியாவும் வெளிநாட்டு பயிற்சியாளரைப் பெற வேண்டிய நிலை இன்று உருவாகியுள்ளது. இத்தனைக்கும் இந்தியாவில் ஹொக்கி பயிற்சிக்காக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்க தனி பல்கலைக்கழகமும், தேசிய கல்வி நிறுவனமும் உள்ளது. உலகிலேயே முதல் ஹொக்கி பல்கலைக்கழகம் பட்டியாலா இதனை சாதித்து காட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி முதல் போட்டியில் இந்தியாவுடன் 16-0 கோல் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இரண்டாம் போட்டியில் சீனாவுடன் 21-0 கோல் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. சீனா இந்தியாவை 5-2 கோல் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது.


[illegible] சீனா அணி

இலங்கை மலேசியாவுடன் 7-0 கோல்களால் தோல்வி அடைந்தது. ஆனால், முதல் தடவையாக சிங்கப்பூருடன் 3-2 வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது. இதன் காரணமாக சீனா, இந்தியா, மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் என முதல் ஐந்திடங்கள் வகுக்கப்பட்டன. மறுபுறம் கொரியா, ஜப்பான், தாய்லாந்து, பாகிஸ்தான், கசகஸ்தான் என்பன தரம் பெற்றது. இறுதி போட்டிக்கு சீனா இந்தியா தகுதி பெற்றது. இறுதி போட்டியிலும் 5-2 கோல் வித்தியாசத்தில் சீனா வெற்றி பெற்றது. மூன்றாம் இடம் கொரியா, நான்காம் இடம் ஜப்பான், 5ம் இடம் மலேசியா, 6ம் இடம் தாய்லாந்து 7ம் இடம் இலங்கை, 8ம் இடம் பாகிஸ்தான், 9ம் இடம் சிங்கப்பூர், 10வது இடம் கசகஸ்தான் என தெரிவாகின. இலங்கை பாகிஸ்தானை 3-1 கோல் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது.

ஒரு போட்டி வெளிநாட்டில் நடக்கும் போது காலநிலை வித்தியாசம் முக்கிய இடம் பெறுகிறது. ஆனால், இலங்கையை பொறுத்தவரை தாய்லாந்து மிக உன்னதமான காலநிலையைக் கொண்டிருந்தது. இலங்கையைப் போலவே தாய்லாந்திலும் ஹொக்கி விளையாட்டுக்கு ரசிகர்களினால் பாதிப்புகள் இருக்கவில்லை. நகர் போட்டிகளை விளையாட்டு திறமையை விட ரசிகர்களின் ஆரவாரமே நிர்ணயிப்பதாக அண்மைக்கால விமர்சனங்களில் குறிப்பிடப்படுகிறது. தாய்லாந்து குழுவுக்கு ஆரவாரம் காட்டக்கூட ஒருவரும் இருக்கவில்லை. இதற்குக் காரணம், இந்த மகாராணி சிரிகெத் விளையாட்டு மைதானம் பெங்கொக்கிற்கு வெளியே அமைந்துள்ளமையாகும்.

வெற்றியை நிர்ணயிக்கும் காரணிகளில் காலநிலை, ரசிகர் கூட்டம், உணவு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றோடு நடுவரின் முடிவுகள் என்பன ஆதிக்கம் செலுத்துகின்றன.

தாய்லாந்தில் சோறு முக்கிய உணவு. கோழி, மாமிச உணவுகள் விதவிதமாக உள்ளன. முட்டை, பால் உண்டு எனவே சாப்பாடு பிரச்சினையில்லை. ஆனால் அவர்கள் உபயோகிக்கும் நிலக்கடலை எண்ணெய் ஒரு வகை குமட்டலை ஏற்படுத்துவதாக வீராங்கனைகள் தெரிவித்தனர். இங்கு வகைவகையான சூப்புகள் உண்டு. மரக்கறிசூப், கோழிசூப், இறைச்சி, நண்டுசூப், மாங்காய்சூப், காளான்சூப், கொலா [illegible] ஆகியன இங்கு தாராளமாகக் கிடைக்கின்றன.

மைதானத்தில் ஏற்படும் விபத்துக்களும் குறைவு. நடுவர்களின் பிரச்சினைகள் இருந்தன. ஆனால் இதை பக்கசார்பு என கூற முடியாது. பங்குபற்றும் எல்லா நாடுகளிலிருந்தும் ஒரு நடுவர். ஒரு தீர்ப்பாளர் சென்றிருந்தனர். இதனை தவிர இரண்டு நடுவர்களை சர்வதேச ஹொக்கி சம்மேளனம் நியமித்திருந்தது. ஒருவர் செக்கோஸ்லோவாக்கியா, மற்றவர் நியூசிலாந்து நாட்டை சேர்ந்தவர்.

எனவே நாடுகளிலும் பயிற்சியிலை திட்டமிடுவதிலுமே வித்தியாசம் காணப்பட்டது எனலாம். நடப்பதிலை பொறுத்தவரை சீனா 6அடி உயரமான பெண்களை 16வயது முதல் தெரிவு செய்து பயிற்சிகள் வழங்கி ஆய்வுகள் மூலம் தெரிவு செய்து அதன் பின்னரே முக்கிய பயிற்சிகளை வழங்க ஆரம்பித்திருக்கிறது. சீன மக்கள் ஆசியாவில் குட்டையானவர்கள் அதிலும் பெண்கள் ஆண்களைவிட குட்டையானவர்கள். ஆனால், ஹொக்கி அணியிலுள்ளவர்கள் அனைவரும் உயரமானவர்களாகவே காணப்படுகின்றனர். இது முதல் திட்டமிடல். அடுத்தது நீண்டகால பயிற்சி இதன் மூலம் திடமான அச்சம் களைந்த மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய தைரியத் தையும், உடல் கட்டமைப்பையும் உடல் பலத்தினையும் கொண்டவர்களாக அவர்களை மாற்றி அமைக்க சீனாவினால் முடிந்திருக்கிறது. இதுவே வெற்றிக்கு காரணமாகும்.

சீனாவை அண்ணாந்து நான் நாம் பார்க்க வேண்டும்.

இரா. மகேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூர்மையான அவதானிப்பு அவசியம்



# டெங்கு:

## தெரிந்த பெயர் தெரியாத விவரங்கள்

டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவரின் இரத்தத்தில் வெள்ளை உயிரணுக்கள் குறைந்து காணப்பட்டால் அதிக அவதானமாக இருக்க வேண்டும்.

இரத்தப் பரிசோதனையடுத்து டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது உறுதியாக தெரிந்தால் வைத்தியசாலைக்கு செல்வது அவசியமாகும். இரத்தத்தில் வெள்ளை உயிரணுக்கள் குறைவதும் கூடுவதும் திடீரென நிகழலாம் என்பதால் இரண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை இரத்தத்தை பரிசோதிக்க வேண்டும்.

டெங்கு நோயின் முதல் பகுதி காய்ச்சல். இரண்டாவது பகுதியில் தான் வேறு அறிகுறிகள் தோன்றும். காய்ச்சல் குறைந்தாலும் முழுமையான இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டியது இதன் காரணமாகத்தான். இவ்வாறு அடிக்கடி இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டியிருப்பதனால்தான் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற வேண்டுமென கூறப்படுகிறது.

டெங்கு நோயாளியின் நிறைக்கேற்பவே பான வகைகளை குடிக்கக் கொடுக்க வேண்டும். குறிப்பாக 50 கிலோவுக்கு கூடிய நிறையுடைய ஒருவருக்கு பானங்கள் மூலம் அல்லது வழங்கப்படும் சேலைன் மூலம் ஒரு மணி நேரத்தில் அவரது உடலுக்கு சேர வேண்டிய திரவம் 100 மில்லிலீட்டர் மாத்திரமே.

நோயாளி வெளியேற்றும் சிறு நீரின் அளவும் பரிசோதிக்கப்படும். நோயாளி ஒரு மணி நேரத்தில் 50 மில்லிலீட்டர் சிறுநீரை வெளியேற்ற வேண்டும். வெளியேற்றப்படும் சிறுநீரின் அளவு குறைவாக இருந்தால் இரத்தத்தில் அதிக நீர் கலப்பதாக கருதப்படும். எனவே வெளியேற்றப்படும் சிறு நீரின் அளவு இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு முறை பரிசோதிக்கப்படும்.

டெங்கு நோயாளிக்கு குடிப்பதற்கு தண்ணீர் கொடுப்பதை விட உப்பு சேர்க்கப்பட்ட எலுமிச்சை ஜூஸ், கஞ்சி, பழரசம், செவ்விள நீர் ஆகியவற்றை கொடுப்பது நல்லது.

சிகப்பு நிற பான வகைகளை குடிக்கக் கொடுப்பதை கூடிய வரை தவிர்த்துக் கொள்ள வேண்டும். வாந்தி, மலம் ஆகியவற்றுடன் இரத்தமும் வெளியேறுகிறதா என்பதை அறிவதில் சிகப்பு நிற பான வகைகள் சிக்கலை ஏற்படுத்தும்.

இதே வேளை ஈரலுக்கு ஏற்படும் பாதிப்பை கண்டறிய SGOT, SGPT பரிசோதனைகள் செய்யப்படும். அத்துடன் இரத்த அழுத்தமும் பரிசோதிக்கப்படும். நாடித் துடிப்பு குறைதல், இரத்த அழுத்தம் குறைதல் அல்லது விரல் நுனி குளிராக இருந்தால் இரத்தத்தில் அதிக நீர் கலக்க ஆரம்பித்து விட்டது என்று கருதவேண்டும்.

இரத்த அழுத்தத்தில் உயர் மட்டத்துக்கும் கீழ் மட்டத்துக்கும் இடையில் சிறிய வித்தியாசம் இருப்பின் அது நல்ல அறிகுறியல்ல. (குறிப்பாக அதிக இரத்த அழுத்தம் 90 ஆகவும், கீழ் மட்ட இரத்த அழுத்தம் 80 ஆகவும் இருத்தல்) இவை அனைத்தையும் கவனத்திற் கொண்டே நோயாளிக்கு சேலைன் கொடுக்கப்படும்.

இதே வேளை நோயாளியின் இரத்தத்தில் உள்ள கல்சியத்தின் அளவும் பரிசோதிக்கப்படும் கல்சியம் குறைவாக இருப்பின் கல்சியம் பெற்றுத்தரப்படும்.




இருதயம் நல்ல முறையில் இயங்குவதற்கு கல்சியம் தேவைப்படும்.

டெங்கு நோயின் தாக்கம் 48 மணி நேரத்துக்கே பாரதூரமாக இருக்கும். அதன் பின்னர் நிலைமை சீரடையும் நோயாளியின் உடம்பில் இருந்து வெளியேறிய நீர் இதன் பின் மெல்ல மெல்ல உறிஞ்சப்படும். இதனால் அதிக சிறு நீர் வெளியேறும்.

டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் சுகமடைந்த பின்னர் இரண்டாவது முறையாக டெங்கு நோயினால் அவர் பீடிக்கப்படுவாரேயாகின் நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும். நான்கு வகை டெங்கு வைரஸ்கள் இருப்பதால் ஒருவர் நான்கு முறை டெங்கு நோய்க்கு ஆளாகக் கூடும். எனவே கூடிய வரை டெங்கு நுளம்புகள் பரவுவதை தடுப்பதன் மூலம் டெங்கு நோயில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வதே சிறந்த தடுப்பு முறையாகும்.

**நன்றி: தருணி**

**'டெங்கு' நோயின் அறிகுறிகள் இப்போது வெகுவாக மாறியுள்ளதாக கூறுகிறார். லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தேவன் மெண்டிஸ். டெங்கு நோய் தொடர்பாக தாய்லாந்தில் விசேட பயிற்சி பெற்ற அவர் 'வானவில்' வாசகர்களுக்காக டெங்கு நோய் பற்றி பேசுகிறார்.**




டெங்கு நோயின் சாதாரண அறிகுறிகள் அதிக காய்ச்சல், உடம்பு வலி, வாந்தி, வயிற்று வலி, தலை வலி அதிக தூக்கம் ஆகிவையாகும். இதில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவுமில்லை. எனினும் வாந்தி, நிமோனியா, வலிப்பு ஆகிய நோய் அறிகுறிகள் காணப்படும்

## அறிந்து கொள்வது எப்படி?

சிறுவர்கள் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர்கள் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. எனவே இரத்தப் பரிசோதனை செய்யாமல் நோயின் அறிகுறிகளில் இருந்து மட்டும் இவர்களுக்கு டெங்கு நோய் பீடிக்கப்பட்டுள்ளது என்பதை கூறுவது சிரமமானது.

சில நேரங்களில் மேலே குறிப்பிடாத அறிகுறிகள் இல்லாமல் கூட டெங்கு ஒருவருக்கு ஏற்படலாம். எனவே உறுதியான அறிகுறிகள் இல்லாவிட்டாலும் சந்தேகம் இருந்தால் இரத்தப் பரிசோதனை செய்யவேண்டும்.

டெங்கு காய்ச்சலைப் போன்று ஏனைய வைரஸ் காய்ச்சல்களும் தற்போது பரவி வருகின்றன. இவற்றில் இருந்து டெங்கு காய்ச்சலை இனங்காணமுடியும்.

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் அதிக நித்திரை மயக்கத்துடன் காணப்படுவார்கள். சிறுவர்கள் தாயின் மடியை பிடித்துக்கொண்டு தொங்குவார்கள். சாதாரண வைரஸ் காய்ச்சலின் போது காய்ச்சல் குறைந்ததும் பிள்ளைகள் பழைய நிலைக்கு திரும்பிவிடுவார்கள், விளையாடுவார்கள். எனினும் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட சிறுவர்கள் காய்ச்சல் இல்லாதபோது கூட தூக்க மயக்கத்துடன் சோர்ந்த நிலையிலேயே காணப்படுவார்கள். நோயாளியைப் போலவே தோற்றமளிப்பார்கள். எவ்வாறெனினும் இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டியது கட்டாயமாகும்.

இப்போது நாட்டின் பல இடங்களில் டெங்கு நோயாளிகள் காணப்படுகின்றனர். அரச வைத்தியசாலைகளில் டெங்கு நோயாளிகள் நிரம்பி வழிகின்றனர். இவர்களுக்கு சிகிச்சை செய்வதற்காக டாக்டர்கள் ஓய்வு ஒழிச்சல் இன்றி செயற்பட வேண்டியுள்ளது டெங்கு நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவரின் இரத்த்தை 2 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை பரிசோதிக்க வேண்டும். குறிப்பிட்டுச் சொல்வதானால் டெங்கு நோய்க்கு சிகிச்சையளிப்பது மூளைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு சிகிச்சையளிப்பதை விட சிரமமானது.




ஆர். ரமிரஜா
இராசநாயகம் - ரஜனி, லண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருத்துவர்
அருந்ததி பொன்னுசாமி
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை



# மூக்கை மூடிக் கொண்டு வேட்டையாடும் பனிக் கரடிகள்



மோப்ப சக்தி அதிகம் கொண்ட மிருகங்களில் கரடியும் ஒன்று. மோப்பத்தின் மூலம் இரையை அடையாளம் கண்டு அதன் கூர்மையான வாயை ஆயுதமாக பயன்படுத்தி மண்ணைத் தோண்டி எலும்பு, கறையான்களை விரும்பி சாப்பிடுகிறது. நம் நாட்டு காடுகளிலும் கரடி இனம் வாழ்ந்து வருகிறது. அளவில் சிறியது. பார்ப்பதற்கு சோம்பெறி விலங்கு போன்று தோற்றமளித்தாலும். இரை தேடும் சமயத்தில் சுறுசுறுப்பாகி விடுகிறது. காடுகளில் இது தனிமையில் தான் உலவும். யானை, புலி, சிங்கம், போன்று இவை கூட்டமாக வாழ்வதில்லை. சிங்கிளாகத்தான் வாழ்கிறது.

கரடி வகைகளில் ஊதா, கபிலக்கரடி, பனிக்கரடி, அமெரிக்க கருங்கரடி, கண்ணாடிக்கரடி, எண்டியன்கரடி, பண்டாக்கரடி ஆகிய இனங்கள் உலக நாடுகளில் வாழ்ந்து வருகின்றன. ஆனாலும், ஆஸ்திரேலியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் கரடி இனம் இல்லை. தென் ஆப்பிரிக்காவின் வட பகுதியில் சிறு நிலப்பரப்பில் சில வகைக் கரடிகள் வாழ்வதாக கண்டறியப்பட்டுள்ளது.

கரடி இனத்தில் பனிக்கரடி, கொடுங்கரடி (Grizzly bear) பழுப்பு நிறக்கரடிகள், ஊனுன்னி வகையைச் சேர்ந்த பாலூட்டிகள் என்பன மிகவும் பெரிதான தோற்றம் கொண்டவை. ஆசியக் கருங்கரடி, சிறிய வகை கரடியாகும். இவை அனைத்துண்ணி வகையைச் சேர்ந்தவை.

கிரிஸ்லி எனப்படும் கொடுங்கரடி வட அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள உயர் நிலப்பரப்பில் வாழக்கிறது. இது 680 கிலோ வரை எடைகொண்டது பிரமாண்டமான மிருகம். கரடி இனங்களில் மிகவும் சோம்பேறிக் கரடி என்றால் அது ஸ்லோத் என்று அழைக்கப்படும். அசையாக் கரடியாகும். இதற்கு மூன்று விரல்கள் மட்டுமே உண்டு. தென் அமெரிக்காதான் இவற்றின் வாசஸ்தலம். இது ஒரு தாவர உண்ணி. ஆனாலும் சில நேரங்களில் பூச்சி, பல்லிகளையும் உணவாக சாப்பிடும். இந்த அசையாக்கரடி, இரவில் மட்டுமே இரைத் தேடும். ஒரு நாளைக்கு 16 மணி நேரம் தூங்குகிறது. இது உண்ட உணவு செமிக்க ஒரு மாதம் ஆகுமாம்.

கண்ணாடிக் கரடி என்றப் பெயரில் அழைக்கப்படும் கரடி பனிப் பிரதேசத்தில் வாழ்கிறது. கருப்பு நிறமுடைய இக்கரடியின் கண்களைச் சுற்றி வெள்ளை வலயம் இருப்பதால் இதற்கு கண்ணாடிக் கரடி என்றும் பெயர். எல்லா வகை கரடிகளும் தனது இரண்டு கால்களையும் நிலத்தில் ஊன்றி நிற்கும் ஆற்றலைக் கொண்டவை.

துருவக் கரடியான பனிக்கரடி (Polar bear) துருவப் பகுதியில் பெருமளவில் வாழ்கிறது. பனியைப் போலவே வெண்மையானது. நீரிலும், நிலத்திலும் வேட்டையாடக் கூடிய ஆற்றல் படைத்தது. ஆண் 400 இருந்து 600 கிலோ வரை எடையைக் கொண்டது. பெண் 200 இருந்து 300 கிலோ வரை எடைக் கொண்டது. இது கருவுற்றிருக்கும் காலம் 240 நாட்களாகும் ஒரே தடவையில் இரண்டு குட்டிகள் போடும் இப் பனிக்கரடிகள், உலகம் முழுவதும் இருபதாயிரம் வரை வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் தாய்ப்பபால் மிகவும் செழுமையானதாகவும் பாதிபங்கு கொழுப்பு உடையதாகவும் இருக்குமாம். 20 தொடக்கம் 25 ஆண்டுகள் வரை உயிர்வாழக் கூடியது.

இந்தக் கரடிக்கு மரம் ஏறத் தெரியாது. மற்ற வகைக் கரடிகள் அனைத்தும் மரம் ஏறும் ஆற்றல் கொண்டவை. குறிப்பாக இந்த பனிக்கரடி வெள்ளை நிறமுடையதால் பனிக்காட்டில் இது நிற்கும் போது எளிதில் அடையாளம் காணமுடியாது. ஆனால் பனிக்கரடியின் மூக்கு மட்டும் கருப்பாக இருக்கும். அதனால் பனிக்கரடி மற்ற பிராணிகளை வேட்டையாடும் போது தனது மூக்கை கையால் மூடிக் கொண்டு வேட்டையாடுமாம். எதிரிகள் தன்னை அடையாளம் கண்டுக் கொள்ளாமல் இருக்கதான் இப்படித் தந்திரம் செய்கிறதாம். கரடிகள் தனியாக வாழ்ந்தாலும் வேட்டையாடி பெரிய விலங்குகளை சாப்பிடும் போது மட்டும் ஏனையோரையும் விருந்துக்கு அழைத்து கூட்டமாகச் சாப்பிடும் வழக்கமும் இவற்றுக்கு உண்டு. (Red panda) சிவப்பு பண்டா, இமய மலையையும், தென் சீனாவையும் பிறப்பிடமாகக் கொண்டது. சீனாவில் அதிக எண்ணிக்கையில் வாழ்கிறது. பூனையை விட சற்று பெரிய உருவம் உடைய இது ஒரு தாவர உண்ணி. மூங்கில் இலைகளே இதன் பிரதான உணவு.

ஆசியக் கரடிகள் எதை வேண்டுமானாலும் உண்ணும். தெஹிவளை மிருகசாலையில் மொத்தம் ஆறு கரடிகள் வாழ்கின்றன.



மறைவான இடத்தில் குழிதோண்டி அதற்குள் குட்டிகள் போடும். கரடிகள் குட்டிப் போடும் காலத்தில் மிருக சாலையில் அந்த இடத்தை மறைத்து விடுகிறார்கள். கரடிகள் குட்டி ஈன்ற முதல் மூன்று வாரத்திற்கு யாரும் கரடிகள் இடத்தை நெருங்க முடியாதாம். மூன்று வாரத்திற்கு உணவு எதுவும் உட்கொள்ளாமல் பட்டினிக் கிடந்து தனது குட்டிகளை கரடி பராமரிக்கிறது. கரடிக்கு பிறக்கும் குட்டிகள் மிகவும் சிறிதாக நாய்குட்டி மாதிரி இருக்கும். அதன் உடம்பிலும் மயிர் எதுவும் இருக்காது. பிறந்த குட்டிகள் குழியை விட்டு வெளியே வர எப்படியும் இரண்டு மாதங்கள் வரை செல்லுமாம்.

நமது தெஹிவளை மிருகசாலை மிருகங்களில் கரடிக்கும் மட்டுமே தேன் வழங்கப்படுகிறது. ஏனெனில் கரடிகளின் விருப்பமான உணவுகளில் தேன் முதலிடம் வகிக்கிறது. பாணில் தேனை நனைத்து கொடுத்தால் ரொம்பவும் விரும்பி சாப்பிடும் இந்தியாவில் சில வருடங்களுக்கு முன்பு வரை கரடிகளை வைத்து வித்தைக் காட்டும் தொழில் நடந்து வந்திருக்கிறது. நரிக்குறவர்கள் தமது சொத்துகளில் ஒன்றாகக் கரடிகளைக் கருதுகிறார்கள். தாயத்தை மந்திரித்து கொடுப்பது போன்ற 'புனித'மான வேலையை இந்தக் கரடிகள் செய்து கொடுக்கின்றன. ஆனால் கரடிகளை வளர்ப்பது, வேலை வாங்குவது, தெருவில் காட்சிப்படுத்துவது, திரைப்படங்களில் பயன்படுத்துவது என அனைத்தும் இந்திய அரசினால் இன்று தடை செய்யப்பட்டுள்ளது.

கடைசியாக ஒன்று 'சும்மா கரடி விடாதே' என்கிறார்களே அதற்கு என்ன அர்த்தம்? கரடிகளிடம்தான் கேட்க வேண்டும்!









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIP Simbu Album














தம்பியுடன்...








தங்கையுடன்...







பெற்றோருடன்...



| | |
|---|---|
| பெயர் | - தேசிங்கு ராஜேந்தர் சிலம்பரசன் |
| பிறந்த திகதி | - 03 பெப்ரவரி 1983 சென்னை |
| தந்தை | - டி.ராஜேந்தர்-நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர், அரசியல்வாதி |
| தாய் | - உஷா ராஜேந்தர்-முன்னாள் நடிகை |
| சகோதரன் | - குறளரசன் |
| சகோதரி | - இலக்கியா |
| உயரம் | - 5'9' |
| படிப்பு | - பொறியியல் பட்டதாரி |
| சினிமா அறிமுகம் | - 1987 |
| குழந்தை நட்சத்திரமாக | - தனது தந்தையின் 'உறவைக் காத்த கிளி' படம் முதல் 19 படங்களில் நடித்துள்ளார். |
| கதாநாயகன் வேடத்தில் அறிமுகம் | - 'காதல் அழிவதில்லை' (2002) அதற்கு முன் தெலுங்கு படத்தில் சிறு வேடத்தில் தோன்றியுள்ளார். |
| ஹிந்திப் பட அறிமுகம் | - oh meri jame |

பெண்களுடன் பலமான கிசுகிசுக்கள் இருக்கின்ற போதிலும் இன்னும் திருமணமாகவில்லை.

பட உதவி: லக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'துனிகா துனிகா' தெலுங்கு படத்தில்
சுமன் அஸ்வின், ரியா



Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 in August, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org